ISSN 2456-5148 (Online)

களஞ்சியம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
KALANJIYAM INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

தொகுதி 04 இதழ் 02 மே 2025
Volume 04 Issue: 02 May 2025



அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் காலாண்டு சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
A Widely Indexed Open Access Peer Reviewed Multidisciplinary Quarterly Scholarly Indian Journal
Indexed by Google Scholar and many other research databases.

களஞ்சியம் - சர்வதேச தமிழ் கல்வி ஆராய்ச்சி இதழ்
Dept of Library and Information Science & Dept of Tamil,
Nallamuthu Gounder Mahalingam College,
90, Palghat Road, Pollachi 642001, Tamilnadu, INDIA
Website: https://www.ngmc.org/
Available online @
www.ngmtamil.in

KALANJIYAM - International Journal of Tamil Studies
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

ISSN of 2456-5148 (Online)

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் காலாண்டு சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

A Widely Indexed Open Access Peer Reviewed Multidisciplinary Quarterly Scholarly Indian Journal
Indexed by Google Scholar and many other research databases.

Vol. 4 No. 02 May 2025

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

எங்கள் ஆய்விதழின் இந்த புதிய தொகுப்பை உங்களிடம் வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். அறிவுத் தேடலின் பல்வேறு பரிமாணங்களை ஆராயும் பல்துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்த இதழ் மிளிர்கிறது. காலம் கடந்த இலக்கிய ஆய்வுகள் முதல், நிகழ்காலச் சமூகப் பிரச்சனைகள், நவீனத் தொழில்நுட்பத்தின் தாக்கம், மற்றும் நம் கலாச்சாரத்தின் ஆழமான வேர்கள் வரை விரிந்திருக்கும் அறிவார்ந்த விவாதங்களை இங்கு காணலாம்.

இந்த இதழில், இலக்கிய உலகில் 'கனவுகள்' எப்படிப் படம்பிடிக்கப்பட்டுள்ளன என்பதை **முனைவர் ஜே. காவேரி** ஆராய்கிறார். நவீனத் தமிழிலக்கியத்தில், கவிஞர் வைரமுத்துவின் சிறுகதைகளின் கதைக்கருக்களைப் பற்றி **கு. மோகன லட்சுமி** ஒரு விரிவான பார்வையை முன்வைக்கிறார்.

கல்வித் துறையில், **அருள்மதி லெனின்** வகுப்பறைக் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை எப்படிச் சிறப்பாக ஒருங்கிணைப்பது என்பதற்கான நடைமுறை விளக்கத்தை அளிக்கிறார். இது எதிர்காலக் கல்வி முறைக்கான ஒரு முக்கியமான பங்களிப்பாகும்.

வரலாற்றுப் பதிவுகளைப் பொறுத்தவரை, **பல்லத்தம்புராஜ் கிங்ஸ்டன் மற்றும் லோகேஸ்வரி ஆறுமுகம்** ஆகியோர் சப்பானியர் ஆட்சிக் காலத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் நிலையைக் குறித்த ஒரு முக்கியமான சமூகவியல் ஆய்வை வழங்குகின்றனர்.

பழங்குடி மக்களின் வாழ்வியல், சடங்குகள், மற்றும் நம்பிக்கைகள் குறித்த ஆழமான ஆய்வுகள் இந்த இதழின் தனிச்சிறப்பு. **முனைவர் து. நீலாதேவி** அவர்களின் இரு கட்டுரைகள், 'சின்ன அரயத்தி' புதினத்தை மையமாகக் கொண்டு மலையரையர் இனக்குழு மக்களின் சடங்கு முறைகளையும், பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் நுணுக்கமாகப் பதிவு செய்கின்றன. மேலும், **முனைவர் சு. அனுலெட்சுமி**, கொல்லிமலை மலையாளி பழங்குடி மக்களின் வாழ்வியல் சடங்குகளை ஆழமாக ஆய்ந்துள்ளார். சங்க இலக்கியத்தில் 'கானக் குறவர்கள்' குறித்த **முனைவர் ப. மகேஸ்வரி**யின் கட்டுரையும், 'நெய்தல் திணையில் வருணன் வழிபாடு' குறித்த **பெ. குருமூர்த்தி மற்றும் முனைவர் ச. வைத்தியேஸ்வரன்** ஆகியோரின் ஆய்வுக் கட்டுரையும் நம் பண்டைய தமிழ்ச் சமூகக் கட்டமைப்பையும், வழிபாட்டு முறைகளையும் எடுத்துக்காட்டுகின்றன.

ஆன்மீகம் மற்றும் தத்துவத் தேடலில், 'அகத்தில் அறம்' என்ற தலைப்பில் **முனைவர் வி. ஜெயபுனிதா வல்லி** அறக்கோட்பாடுகளை ஆழமாக ஆராய்கிறார். பக்தி இலக்கியத்தின் அழியாச் சுடர்களாக, **க. வடிவேலு மற்றும் த. கண்ணன்** ஆகியோர் 'திருவாசகப் பதிப்புகளில் சிவபுராணம்' பற்றிய ஒரு புதிய கோணத்தை முன்வைக்கின்றனர். மேலும், **பேராசிரியர் ஷாரதா தல்லம்** மாணிக்கவாசகரின் ஞானத்தமிழிசையை ஒரு உயிர்-பிரபஞ்சக் கண்ணோட்டத்தில் அலசுகிறார்.

இந்த இதழில் உள்ள ஒவ்வொரு கட்டுரையும், தத்தம் துறைகளில் ஆழமான ஆய்வுக் கண்ணோட்டத்துடனும், புதிய தரவுகளுடனும், சிந்தனைக்குத் தூண்டுதலாகவும் எழுதப்பட்டுள்ளன. எங்கள் ஆய்வாளர்களின் அயராத முயற்சிக்கும், அறிவார்ந்த பங்களிப்பிற்கும் மனமார்ந்த நன்றி.

இந்த இதழ் வாசகர்களின் புதிய சிந்தனைகளையும், அறிவார்ந்த விவாதங்களையும் தூண்டும் எனக் கருதுகிறோம். இந்த அறிவுக் களஞ்சியத்தைப் படித்துப் பயன் பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அன்புடன், **ஆசிரியர் குழு**

Journal Index

KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN ***2456-5148*** *(Online)*
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

Dreams in Literature

Dr. J. Kaveri,
Assistant Professor, Department of Tamil,
V.V. Vanniaperumal College for Women, Virudhunagar. Email: kaveri@vvvcollege.org.

Received 25/04/2025
Accepted for publication 30/04/2025
Published 01/05/2025

Abstract

Dreams in literature are employed as a means to express the dreamer's state of mind, emotions, desires, and fears. Dreams play a significant role in numerous literary works, utilized across various forms such as narratives, poetry, and drama. As an integral part of literature, dreams are used to set the stage for a work, introduce a turning point, or foreshadow the story's conclusion. In poetry, dreams serve as a central theme, a means to convey emotions, or to imbue a poem with new meaning. Within dramatic works, dreams constitute a key element, utilized to reveal characters' emotions or to foreshadow the play's resolution. Furthermore, such dreams are employed in literature as a narrative device to indicate future events in advance. This study, therefore, aims to investigate the manner in which dreams are presented and manifested in literary works..

Keywords*: Dreams, Literature, Tamil Literature*

இலக்கியங்களில் கனவு

முனைவர் ஜெ.காவேரி,

தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,

வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.

Email: kaveri@vvvcollege.org

கட்டுரைச் சுருக்கம்:

இலக்கியங்களில் கனவுகள் என்பது, கனவு காண்பவரின் மனநிலை, உணர்ச்சிகள், ஆசைகள், பயங்கள் போன்றவற்றை வெளிப்படுத்தும் ஒரு வழியாகப் பயன்படுத்தப்படுகிறது. கனவுகள் பல இலக்கியப் படைப்புகளிலும் முக்கியப் பாத்திரத்தை வகிக்கின்றன, அவை கதை, கவிதை, நாடகம் என பல வடிவங்களில் பயன்படுத்தப்படுகின்றன. கனவுகள் இலக்கியத்தின் ஒரு பகுதியாக பயன்படுத்தப்பட்டு, படைப்பின் தொடக்கத்தை முன்வைக்கவோ, ஒரு திருப்பத்தை ஏற்படுத்தவோ, அல்லது கதை முடிவை வெளிப்படுத்தவோ பயன்படுகிறது. கனவுகள் கவிதையின் கருப்பொருள், உணர்ச்சிகளை வெளிப்படுத்த, அல்லது கவிதைக்கு ஒரு புதிய அர்த்தத்தை கொடுக்கப் பயன்படுத்தப்படுகின்றன. கனவுகள் நாடகத்தின் ஒரு முக்கிய பகுதியாக, கதாபாத்திரங்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தவோ, அல்லது நாடகத்தின் முடிவை வெளிப்படுத்தவோ பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய கனவுகள் என்பது இலக்கியங்களில் பின்னர் நிகழ இருப்பதை முன்னரே உணர்த்தும் ஓர் உத்தியாகவும் பயன்படுத்தப்படுகின்றது. அவ்வகையில் இலக்கியங்களில் கனவுகள் வெளிப்படுத்தியிருக்கும் பாங்கினை ஆய்வதாக இவ்ஆய்வு அமைகின்றது.

கனவின் வழி அகச்செய்திகள்

சங்க இலக்கியங்களில் ஏறத்தாழ 44 இடங்களில் கனவுகள் பற்றிய குறிப்புகள் காணப்படுவதாக ச.வே.சுப்ரமணியம் குறிப்பிடுகின்றார். அவை தலைவன், தலைவி,, விலங்குகள், பறவைகள் கண்டனவாக காணப்படுகின்றன. பெரும்பாலும் இவை அகம் பற்றிய குறிப்புகளை வெளிப்படுத்துவனவாகவே காணப்படுகின்றன.

கோட்டுமீன் வழங்கும் வேட்டம் மடி பரப்பின்

வெள் இறாக் கனவும் நள்ளென் யாமத்து,

'நின் உறு விழுமம் களைந்தோள்

தன் உறு விழுமம் நீந்துமோ!' எனவே.(அகநானூறு – 170

கடலில் மேயும் **சிறுகாக்கை** *களைப்போடு இளைப்பாறுகையில் தாழம்பூ மடலில் தன் பெண்ணோடு அமர்ந்துகொண்டு கனாக் காணும். சுறாமீன் வேட்டைக்குச் செல்வோர் உறங்கும் நள்ளிரவில் கனாக் காணும். வெள்ளை இறால் மீன்களை உண்பது போல் கனாக் காணும். இப்படிக் காக்கை கனாக் காணும் நள்ளிரவு வேளை இது. என்று நெய்தல் நிலம் பற்றிய குறிப்பில் கடற் காக்கையின் கனவு பற்றிய குறிப்பானது காணப்படுகின்றது. ஆனால் இப்பாடலில் உள்ளுறை உவமம் பழி தலைவியின் பிரிவுத்துயர் குறிப்பிடப்படுகின்றது. தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியின் நிலை இங்கு காக்கையின் வழி உவமிக்கப்படுகின்றது.*

அதனைப் போன்றே கலித்தொகையில், தலைவனை நனவில் பிரிந்து வாடும் தலைவி தலைவனைக் கனவில் கண்ட மகிழ்ந்து பின் அது கனவு என்று எண்ணி வருந்தும் நிலையினை,

நனவு எனப் புல்லுங்கால், காணாளாய், கண்டது

கனவு என உணர்ந்து, பின் கையற்று, கலங்குமே (கலித்தொகை – 126)

என்ற பாடல் வரிகளானது புலப்படுத்துகின்றது. இப்பொருள் படவே கலித்தொகையின் 128, 142 ஆகிய பாடல்களிலும் கனவில் தலைவனைக் கண்டு மகிழ்ந்து நனவில் துன்பப்படும் தலைவியின் நிலை சுட்டப்பட்டுள்ளது.

கேட்டிசின் வாழி தோழி அல்கற்

பொய்வ லாளன் மெய்யுறல் மரீஇய

வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட ஏற்றெழுந்து

அமளி தைவந் தனனே குவளை

வண்டுபடு மலரிற் சாஅய்த்

தமியேன் மன்ற அளியேன் யானே. (குறுந்தொகை – 30)

இக்குறுந்தொகைப் பாடலில் பொருளுக்காக பிரிந்து சென்றுள்ள தலைவன் கனவில் தன்னிடம் வந்த செய்தியைத் தோழியிடம் கூறுகின்ற தலைவி சில நிமிடங்களாயினும் கனவிலாவது அவனைக் கண்டேனே *என்று துன்பத்துடன் இன்பம் கலந்து பேசுவதாகக் காணப்படுகின்றது.*

இவ்வாறு தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி கனவில் தலைவனைக்க ண்டு வருந்துவதாய் பெரும்பாலான பாடல்கள் காணப்படுகின்றன. அதனைப் போன்றே கனவு கண்டு வருந்தும் தலைவன் நிலையைக குறுந்தொகைப் பாடல் ஒன்று விளக்குகின்றது.

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் தன்னுடைய கனவில் தலைவியைக் காண்கிறான். அவன் தூக்கத்தி லிருந்து விழித்துக்கொள்கிறான். அங்கே தலைவியைக் காணவில்லை. அவன், கனவை நோக்கி, என் தலைவி யை இங்கு கொண்டுவந்ததுபோல் காட்டி, நீ என்னை ஏமாற்றிவிட்டாய். நீ இப்படி ஏமாற்றினாலும், தங்கள் துணையைப் பிரிந்திருப்பவர்கள் கனவிலாவது அவர்களைக் காண முடிந்ததே என்று எண்ணுவார்கள். ஆகவே , உன்னை இகழ மாட்டார்கள்,"

என்று கூறுகிறான். (குறுந்தொகை – 147)

கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு

நெடு வரை மருங்கின் துஞ்சும் யானை,
நனவில் தான் செய்தது மனத்தது ஆகலின்,
கனவில் கண்டு, கதுமென வெரீஇ,
புதுவதாக மலர்ந்த வேங்கையை
அது' என உணர்ந்து, அதன் அணி நலம் முருக்கி,
பேணா முன்பின் தன் சினம் தணிந்து, அம் மரம்
காணும் பொழுதின் நோக்கல் செல்லாது,
நாணி இறைஞ்சும் நல் மலை நல் நாட! (கலித்தொகை 49)

என்னும் பாடலில் யானை கண்ட கனவானது சுட்டப்பட்டுள்ளது. வளைந்த வரிக்கோடுகளை உடைய வரிப்புலியைத் தாக்கி வென்ற வருத்தத்துடன் உயர்ந்த மலைமேல் உறங்கும் யானையானது, நல்ல நினைவோடு தான் செய்த செயல் தன் மனத்தில் இருப்பதால் கனவில் அதனைக் கண்டு, புதிதாக மலர்ந்திருக்கும் வேங்கை மரத்தைப் பார்த்துப், புலி என்று எண்ணி, அதனை வளைத்து முறுக்கி ஒடித்துப் போட்டுவிட்டுப், பின்னர் சினம் தணிந்த பின்னர், நாணி, அந்த மரத்தைப் பார்க்கக் கூசும் மலைநாட்டின் தலைவனே! என்று தலைவனின் மலை நாட்டு வளத்தைச் சுட்டுமிடத்து யானையின் கனவானது சுட்டப்படுகின்றது. இது வெளிப்படையாக யானையின் கனவாகக் குறிப்பிடப்பட்டிருப்பினும் உள்ளுறை உவமமானது ஊராரின் அலரினால் தோழியின் மீது கோபம் கொள்கின்ற தலைவியின் நிலை புலனாகின்றது.

திருக்குறளில், கனவுநிலை உரைத்தல் அதிகாரம் (122) இல், கனவு காதலனை பற்றியும், காதலின் தன்மையையும் விவரிக்கிறது. நனவில் காதலரை காண முடியாத போது, கனவில் அவரை காணும் போது தலைவியின் மகிழ்ச்சி, உயிர்வாழத் துணை புரிவதாகவும், நனவில் அருள் செய்யாத தலைவரை கனவில் காண்பதன் மூலம் தலைவியின் காதல் பலப்படும் என்றும் குறள் சொல்கிறது

இவ்வாறு கனவில் அகம் குறித்து சுட்டும் பொழுது பெரும்பாலும் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி தலைவனைக் கணவில் கண்டு இன்பமடைந்து நனவில் அதை எண்ணி வருத்தமடையும் சூழலே பெரும்பாலும் காணப்படுகின்றது. தலைவன் கண்ட அகக் கனவும் அத்தன்மைத்தாகவே நிலவுகின்றது. விலங்குகளின் தனவின் வழி உள்ளுறை வழி தலைவியின் துன்பநிலையே பெரும்பாலும் எடுத்துரைக்கப்படுகின்றது.

கனவும் நிமித்தமும்

இலக்கியங்களில் கனவு என்பது பெரும்பாலும் நிமித்தங்களைச் சுட்டுவதற்காகவே புனைந்துரைக்கப்படுவதாய் காணப்படும். காப்பியங்களில் இதற்குரிய சான்றுகள் ஏராயமாய் உள்ளன. கனவுகள் நிமித்தங்களோடு தொடர்புடையவை, அதாவது கனவுகள் மூலம் எதிர்காலத்தில் நடக்கப்போகும் நல்ல அல்லது கெட்ட நிகழ்வுகளை அறியலாம். குறிப்பாக, கனவில் இயற்கைக்கு மாறான அல்லது விசித்திரமான நிகழ்வுகள் நிகழ்ந்தால், அவை ஒரு நிமித்தமாக கருதப்படலாம்.

நிமித்தம் என்பது வாழ்வின் மூலம் நடக்கப்போகும் நன்மை தீமைகளை குறிக்கும் ஒரு அறிகுறி. சில சமயங்களில், கனவுகள் மூலம் அந்த அறிகுறியை அறிய முடியும்.

- கனவுகளில் சில நேரங்களில் கடவுள் வந்து உரைப்பது போன்ற நிகழ்வுகள் நிமித்தங்களாக கருதப்படலாம்.
- இயற்கைக்கு முரண்பாடான செயல்கள், உதாரணமாக பறவை பேசினால் போன்ற கனவுகள் நிமித்தங்களாக கருதப்படலாம்.
- சில கனவுகள் நல்ல சகுனமாகவும், சில கனவுகள் கெட்ட சகுனமாகவும் கருதப்படலாம்.
- சிலப்பதிகாரத்தில், கண்ணகி மற்றும் கோவலனின் கனவுகள் எதிர்கால நிகழ்வுகளை முன்விளக்கும் நிமித்தங்களாக கூறப்பட்டுள்ளன.

"திசை இரு நான்கும் உற்கம் உற்கவும்,
பெரு மரத்து, இலை இல் நெடுங் கோடு வற்றல் பற்றவும்,
வெங் கதிர்க் கனலி துற்றவும், பிறவும்,
அஞ்சுவரத் தகுந புள்ளுக் குரல் இயம்பவும்,
எயிறு நிலத்து வீழவும், எண்ணெய் ஆடவும்,
களிறு மேல் கொள்ளவும், காழகம் நீப்பவும்,
வெள்ளி நோன் படை கட்டிலொடு கவிழவும்,
கனவின் அரியன காணா, நனவில்
செருச் செய் முன்ப! " (புறநானூறு -40)

என்று புறநானூறு பாடல் தீக்கனா குறித்து பட்டியலிடுகின்றது. சீவகசிந்தாமணியில் விசயை, சிலம்பில் கண்ணகி, கோவலன், கோப்பெருந்தேவி ஆகியோர் கண்ட கனவு தீக்கனாவாகவும் பின்வரும் துன்ப நிலையை முன்னரே அறிவிக்கும் வண்ணமும் காணப்படுகின்றது. வருமொழி கூறல் என்னும் உத்திக்கு ஏற்ற விதத்தில் கனவானது காப்பியத்தில் காணப்படுகின்றது. ராமாயணத்தில் இரண்டு இடங்களில் கனவுகள் காணப்படுகின்றன. ஒன்று பரதன் கண்ட கனவு. இது விளையப் போகும் துன்பத்தைச் சுட்டுகின்றது. மற்றொன்று திரிசடை கண்ட கனவு. இது பின்னர் நிகழவிருக்கும் நன்மையைச் சுட்டுவதாக அமைந்துள்ளது.

முத்துப்பட்டன் கதை போன்ற நாட்டார் இலக்கியங்களிலும் கனவானது இத்தகைய தன்மையில் தீக்கனாவாக இடம்பெற்று கதை மாந்தருக்கு பின்னர் நிகழும் துன்ப நிலையை முன்னரே வெளிப்படுத்தும் வண்ணம் காணப்படுகின்றது.

பக்தி இலக்கியங்களில் கனவுகள்

நமது இதிகாசங்களிலும் புராணங்களிலும் நிறைய கனவுகள் வருகின்றன. பக்தி இலக்கியங்களிலும் கனவுகள் பல காணப்படுகின்றன. தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரும் நந்தனும் ஒருசேரக் கண்ட கனவைப் பற்றிச் சேக்கிழாரின் பெரிய புராணம் பேசுகின்றது. அதனைப் போன்றே புசலார் நாயனார் என்ற சிவனடியாரின்

புகழ் போசுகின்ற இடத்திலும் காடவர் கோன் கனவில் சிவபெருமான் வந்ததாகச் சுட்டப்படுகின்றது. மேலும் ஆண்டாளின் புகழை எடுத்துரைக்க பெரியாழ்வாரின் கனவில் தோன்றி சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாய் திருமால் ஆண்டாளை உலகிற்கு காட்டினார். ஆண்டாளும் திருமாலைத் தன்னுடைய மணாளனாக எண்ணி அவரைத் திருமணம் செய்வதாகவும் திருமணத்திற்கான சடங்கு முறைகள் நடைபெறுவதாகவும் கனவு காண்கின்றார்.

இலக்கியங்களின் குறிப்படும்படியான ஓர் உத்தியாக கனவானது திகழ்கின்றது. தலைவன், தலைவி, விலங்குகள், பறவைகள் கனவு காண்பதாக இலக்கியங்களில் காணப்படுகின்றன. அகம் குறித்த கனவு செய்திகள் பெரும்பாலும் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியின் துன்ப நிலையை எடுத்துரைப்பதாய் காணப்படுகின்றது. தீ நிமித்தத்தை எடுத்துரைப்பதாகவும் இலக்கியங்களில் பெரும்பாலும் கனவுகள் இடம்பெறுகின்றன. வருமொழி உரைத்தல் எனும் இலக்கிய உத்தியாக இது பெரும்பாலும் காப்பியங்களில் காணப்படுகின்றது. பக்தி இலக்கியங்களில் கனவானது அடியார்களின் பெருமையினை உலகிற்குப் பறைசாற்றும் வண்ணம் தெய்வங்களே வந்து கூறுவதாய் அமைந்துள்ளது. இக்கால இலக்கியங்களிலும் கனவு குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன. இலக்கியத்தின் ஓர் உத்தியாகவே கனவானது பெரும்பாலும் இடம்பெறுகின்றது என்பது இவ்ஆய்வின் வழி உணரமுடிகின்றது.

குறிப்புதவி நூல்கள்

1 இலக்கியக் கனவுகள் – ச.வே.சுப்பிரமணியம்

2 கலித்தொகை

3 குறுந்தொகை

4 சிலப்பதிகாரம்

5 திருக்குறள்

6 புறநானூறு

7 பெரியபுராணம்

Reference Books

1 Literary Dreams – S.V.Subramaniam

2 Kalithokai

3 Kurunthokai

4 Silappadhikaram

5 Thirukkural

6 Purananuru

7 Periyapuranam

KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN ***2456-5148*** *(Online)*
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

Integrating Information and Communication Technology into Classroom Teaching

Arulmathi Lenin,
Teacher, Singapore
Part time research scholar, Tamil University, India

Received 25/05/2025
Accepted for publication 30/05/2025
Published 01/06/2025

Abstract

This article discusses the place of information and communication technology in today's classroom. Information and communication technology has taken a place that is not available today in today's classrooms. It discusses how information and communication technology can be integrated into everyday classroom teaching and Internet assessment. It also discusses the necessary Internet etiquette for students using the Internet. In general, this article discusses the place of information and communication technology in today's classrooms and discusses the special features of the Student Learning Space platform developed by the Singapore Ministry of Education for Singapore students..

வகுப்பறைக் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்தல்

அருள்மதி லெனின்,
ஆசிரியர், சிங்கப்பூர்,
பகுதிநேர ஆராய்ச்சி மாணவர், தமிழ் பல்கலைக்கழகம், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்:

இந்தக் கட்டுரை தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் இன்றைய வகுப்பறையில் பெறும் இடத்தைப் பற்றி எடுத்துரைக்கிறது. இன்றைய வகுப்பறைகளில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் இன்றையமையாத இடத்தைப் பெற்றுள்ளது. அன்றாட வகுப்பறைக் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை எவ்விதம் இணைத்துக் கற்பிக்கலாம் என்பதைப் பற்றியும் இணைய மதிப்பீடு பற்றியும் கூறுகிறது. இணையத்தைப் பயன்படுத்தும் மாணவர்களுக்கு அவசியமான இணைய நன்னடத்தைப் பற்றியும் விரிவாகக் கூறுகிறது. பொதுவாகத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் இன்றைய வகுப்பறைகளில் பெறும் இடத்தைப் பற்றிக் கூறுவதோடு சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு, சிங்கப்பூர் மாணவர்களுக்காக உருவாக்கியுள்ள மாணவர் கற்றல் தளத்தின் சிறப்புக்கூறுகள் பற்றியும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

Keywords*: Modern Classroom, Communication Technology, ICT Tools, Education*

முன்னுரை:

'பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையினானே'

என்னும் நன்னூலாரின் வாக்கிற்கிணங்க ஆசிரியரின் முன் அமர்ந்துதான் கல்வி கற்க வேண்டும் என்று நிலை இன்று மாறிவிட்டது. ஒரு காலத்தில் வகுப்பறையில் மட்டுமே கற்றல் நிகழவேண்டும் என்று இருந்த நிலை இன்று மாறிவிட்டது. இது காலத்தின் தேவையாகவும் இருக்கிறது. எந்தவொரு காரணத்தாலும் பிள்ளைகளில் கற்றல் தடைபட்டுவிடக்கூடாது என்பதில் இன்று அனைத்து நாட்டினரும் முனைப்புடன் இருக்கின்றனர். அவ்வகையில் மாணவர்களின் கற்றலை வகுப்பறையிலும் வகுப்பறைக்கு அப்பாலும் வளப்படுத்தவும் வலுப்படுத்தவும் தகவல் தொழில்நுட்பம் பெரிதும் கைகொடுக்கிறது. அத்தகைய தகவல் தொழில்நுட்பத்தால் கல்வித்துறை எண்ணற்ற பயன்களைப் பெற்று வருகிறது. அவற்றைப்பற்றியும் வகுப்பறையில் தமிழ்மொழியைக் கற்றலிலும் கற்பித்தலிலும் தகவல் தொழில்நுட்பம் எத்தகைய இடத்தைப் பெற்றிருக்கின்றன என்பது பற்றியும் இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பம்:

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய தமிழ்மொழி இன்றைய கணினி யுகத்திலும் குன்றா இளமையோடு வலம்வருகிறது. இதற்குக் காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்களைத் தமிழ் தன்னகத்தே ஏற்றுக்கொண்டு காலத்திற்கேற்பத் தன்னை மெருகேற்றிக்கொண்டதே காரணம். முன்னைப் பழைமைக்கும் பின்னைப் புதுமைக்கும் ஏற்ப வளைந்து கொடுப்பதால்தான் கல்லிலே எழுதப்பட்ட தமிழ்மொழி இன்று கணினி மயமாகி உலகின் எம்மூலையில் இருப்பவரும் கற்பதற்கு உகந்ததாக இருக்கிறது. மொழி கற்றலை விரும்பாத மாணவர்களையும் மொழியின்பால் கவர்ந்திழுத்து மொழியை மகிழ்வுறக் கற்க இன்று தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கூறுகள் காரணமாகின்றன.

தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் இன்றியமையாமை:

இன்றைய வகுப்பறைகளில் நடத்தப்பெறும் பெரும்பாலான பாடங்களில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பக் கூறுகள் இணைத்துக் கற்பிக்கப்படுகின்றன. இன்றைய மாணவர்களின் கைகளில் கைத்தொலைபேசியும், கணினியும் இருப்பதால் இணையத்தின் வாயிலாகப் பகிரப்படும் கருத்துகளை அவர்கள் எளிதில் கைவரப்பெறுகின்றனர். வகுப்பறையில் நேரடியாக நடத்தப்படும் பாடங்கள் மட்டுமின்றி, இணையம் வழியாக நடைபெறும் பாடங்களும் வகுப்பறைக் கலந்துரையாடல்களும் ஆசிரியர்களின் கற்பித்தல் நேரத்தைப் பயனுள்ளதாக்குகின்றன.

KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN *2456-5148 (Online)*
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

ஒரு பாடத்தை வடிவமைப்பதில் தொடங்கி, அதனை மாணவர்களுக்குப் புரியும்விதத்தில் கற்றுக்கொடுப்பது, கற்றுக்கொடுத்த பாடத்தை மாணவர்கள் எந்த அளவிற்குப் புரிந்துகொண்டுள்ளனர் என்பதை மதிப்பிடுவதுவரை அனைத்திலும் தகவல் தொழில்நுட்பம் இன்று மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது.

பாடங்களை வழக்கமான முறையில் கற்பிப்பதை விடவும், காலத்திற்கேற்ற தகவல் தொழில்நுட்பங்களைப் பாடத்தில் பொருத்தமாக இணைத்துக் கற்பிக்கும்போது அது மாணவர்களைக் கவர்வதாகவும் கற்றலை மகிழ்வூட்டுவதாகவும் மாற்றுகிறது.

வகுப்பறைக் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தை இணைத்தல்:

இன்றைய நவீன உலகில், கல்வி என்பது வெறும் ஏட்டுக்கல்வியாக மட்டும் நின்றுவிடாமல், மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் ஒரு கருவியாக விளங்குகிறது. அதற்குத் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு இன்றியமையாதது. பொதுவாகப் பள்ளியில் பயிலும் எல்லாப் பாடத்திற்கும் பொருத்தமான படங்களையும் ஒளிக்காட்சிகளையும் கூடுதல் தகவல்களாக இணைக்கவும் பாடத்திற்குத் தொடர்புடைய நடவடிக்கைகளையும் மதிப்பீட்டு நடவடிக்கைகளையும் உருவாக்கவும் ஆசிரியர்களுக்குத் தகவல் தொழில்நுட்பம் கைகொடுக்கிறது.

அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு இன்றைய தலைமுறையினரிடையே கருத்துப் பரிமாற்றத்திறனையும் வளர்க்க வகுப்பறைக் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை இணைப்பது அவசியமாகிறது. ஒவ்வொரு திறனுக்கும் உரிய கற்பித்தல் நடவடிக்கைகளை வகுக்கவும் அவற்றை உடனுக்குடன் மதிப்பிடவும் தகவல் தொழில்நுட்பம் சிறப்பாகக் கைகொடுக்கிறது. மொழி கற்றலுக்கு மட்டுமின்றி மற்றப் பாடங்களைக் கற்பிப்பதிலும் தகவல் தொழில்நுட்பம் சிறப்பாகச் செயல்படுகிறது. அறிவியல், கணிதம், சமூக அறிவியல் போன்ற பாடங்களை விஷுவல் எய்ட்ஸ் (Visual aids) மூலம் கற்பிக்கும்போது மாணவர்களுக்கு எளிதில் புரியும்.

தகவல் தொழில்நுட்பத்தை வகுப்பறையில் பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகள்:

- மாணவர்கள் பாடங்களை ஆர்வத்துடன் கற்க முடியும்.
- கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்முறைகள் வேகமாகவும், சுவாரஸ்யமாகவும் இருக்கும்.
- ஆசிரியர்கள் கற்பித்தலுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் எளிதாகப் பெறலாம்.
- மாணவர்களின் கற்றல் திறனை அவ்வப்போது மதிப்பிட முடியும்.

KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN *2456-5148 (Online)*
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

- இது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே ஒரு நல்ல தொடர்பை ஏற்படுத்தும்.

எடுத்துக்காட்டாக, கூகுள் வகுப்பறையில்(Google classroom) உள்ள கூறுகளைப் பயன்படுத்திக் கற்பித்தலை வடிவமைக்கும்போது கற்றல் மாணவர்களுக்கு எளிமையாக நிகழ்கிறது. வீட்டில் இருந்தபடியே அனைவரையும் சந்திக்கவும் பாடத்தைக் கற்கவும் கூகுள் மீட் உதவுகிறது. மாணவர்களுக்குப் பிடித்த மொழி விளையாட்டுகளை இணைக்கவும், வீட்டுப் பாடங்களையும் ஒப்படைப்புகளையும் அளிக்கவும் அவற்றைத் திருத்தி, அவர்களது முன்னேற்றத்திற்குரிய கருத்துகளை வழங்கவும் கூகுள் வகுப்பறைகள் உதவுகின்றன. குறிப்பாக கொரோனா தொற்று காலத்தில் கூகுள் மீட் ஒரு வரப்பிரசாதமாக இருந்தது.

கூகுள் வகுப்பறையில் மாணவர்களின் கற்றலுக்குத் தேவையான ஒளிக்காட்சிகளையும் படங்களையும் இணையத்தளங்களுக்கான இணைப்புகளையும் (website links), யூடியூப் (YouTube) ஒளிக்காட்சிகளையும் எளிதாக இணைக்க முடியும். அத்துடன் பல்வேறு மொழி விளையாட்டுகளை எளிதாக உருவாக்கி அளிக்கும் காஹூட் (Kahoot), முதலான செயலிகளும் மாணவர்களின் கற்றலை மதிப்பிடும் ஃபார்மேட்டிவ் (Formative) முதலான செயலிகளையும் ஆசிரியர்கள் கூகுள் வகுப்பில் இணைத்து மாணவர்களுக்கு அளிக்கும்போது அவர்களது கற்றல் மகிழ்வூட்டும் கற்றலாக அமைகிறது. மேலும், பவர் பாயிண்ட் பிரசென்டேஷன் (PowerPoint Presentation) மூலம் படக்காட்சிகளைத் திரையில் காண்பிக்கும்போது மாணவர்களின் கவனம் சிதறாமல் இருக்கும்.

தகவல் தொழில்நுட்பம் ஒரு கத்தி போன்றது. அதனைச் சரியாகப் பயன்படுத்தினால் நன்மை பயக்கும், தவறாகப் பயன்படுத்தினால் ஆபத்தாக முடியும். எனவே, ஆசிரியர்கள் தகவல் தொழில்நுட்பத்தை சரியான முறையில் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். மேலும், மாணவர்களும் அதனைத் தவறாகப் பயன்படுத்தாமல் தங்களது அறிவை வளர்க்கும் கருவியாகப் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் தகவல் தொழில்நுட்பத்தின் முழுப்பலனையும் அடைய முடியும்.

வகுப்பறைக் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தின் ஒருங்கிணைப்பு என்பது ஒரு புரட்சிகரமான மாற்றம். இது மாணவர்களின் கற்றல் அனுபவத்தை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், ஆசிரியர்களின் கற்பித்தல் திறனையும் அதிகரிக்கிறது. எனவே, அனைத்துப் பள்ளிகளிலும் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை ஊக்குவிக்க வேண்டும்.

மதிப்பீடு:

கற்றலையும் கற்பித்தலையும் ஒருங்கிணைக்கும் மதிப்பீடு இல்லையெனில் கல்வி முழுமைபெறாது. அவ்வகையில் ஆசிரியர் அன்றாடம் கற்றுக்கொடுப்பவற்றை தம் மாணவர்கள் புரிந்துகொண்டுள்ளனரா எனச் சோதித்தறிய மதிப்பீடு அவசியமாகும். மதிப்பீடு கற்றலுக்குப் பிறகு நிகழும் முறைசார்ந்த மதிப்பீடாக(summative Assessment) மட்டுமே இருக்கத்

KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN 2456-5148 (Online)
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

தேவையில்லை. கற்றலின்போது நிகழும் முறைசாரா மதிப்பீடு (Formative Assessment) மாணவர்களின் கற்றலுக்குப் பெரிதும் உதவும். அத்தகைய மதிப்பீட்டை நிகழ்த்தவும் மாணவர்களின் நிலைக்கேற்ப கற்பித்தலை மாற்றியமைத்துக்கொள்ளவும் இன்று பல இணையத்தளங்களும் செயலிகளும் உதவுகின்றன. எடுத்துக்காட்டாக, டிபிட் (Diffit) எனும் செயலியில் ஒரு சொல்லை உள்ளீடு செய்தாலே அது தொடர்பான கருத்துகளைச் சேகரித்து அதற்காக ஒரு மதிப்பீட்டு நடவடிக்கையையும் உருவாக்கி அளிக்கிறது. அதைப் போன்றே மதிப்பிடுதலுக்கு உதவும் ்பார்மேட்டிவ் (www.formative.com) செயலியில் வினாக்களை உருவாக்கவும் மாணவர்களின் விடையை மதிப்பிடவும் முடியும். இது போன்ற செயலிகளைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு உகந்த மதிப்பீட்டு நடவடிக்கையை உருவாக்கி அளிக்கும்போது மாணவர்களும் உடனுக்குடன் தங்கள் தவறுகளைத் திருத்திக்கொண்டு, கற்றலை மேம்படுத்திக்கொள்ள முடியும்.

இணைய நன்னடத்தை:

இன்றைய வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் சிறப்பாக நடைபெற தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் சிறப்பாகக் கைகொடுக்கிறது என்பது காலம் ஆசிரியர்களுக்கு வரம். எனினும், இணையம் சார்ந்த நடவடிக்கைகளைக் கவனத்துடன் கையாள வேண்டும் என்று ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். நம்பத்தகுந்த இணையத்தளங்கள் எவை, எவற்றிலிருந்து பெறும் தகவல்கள் உண்மையானவை என்றும் இணையத்தில் முகம் தெரியாதவர்கள் நம்மைப்பற்றிக் கூறும் கருத்துகளைக் கண்டு கவலைகொள்ளக்கூடாது என்றும் பிறர் மனம் நோகும்படி நாம் இணையத்தில் கருத்துக்கூறக் கூடாது என்றும் மாணவர்களுக்கு விளக்க வேண்டும். பொறுப்பாக இணையத்தளத்தைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை மாணவர்களுக்கு இளம் வயதிலேயே கற்றுக்கொடுக்க வேண்டும். மாணவர்கள் தங்களுக்கு அளிக்கும் வீட்டுப்பாடங்களையும் ஒப்படைப்புகளையும் இணையத்தளங்களிலிருந்து அப்படியே எடுத்துப் பயன்படுத்தக்கூடாது என்ற அடிப்படைச் சிந்தனையையும் புரிதலையும் மாணவர்களிடையே உருவாக்க வேண்டும். இந்த அடிப்படைப் புரிதல் இருந்தால்தான் தகவல் தொழில்நுட்பத்தால் பெறும் கல்வி சிறக்கும் என்பதை மாணவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தால் ஏற்படும் நன்மைகளைப் பயன்படுத்தும் அதே வேளையில் அதன் மறுபுறம் எப்படிப்பட்டது என்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டியதும் ஆசிரியரின் கடமையாகும்.

மாணவர் கற்றல் தளம் (Student Learning Space):

சிங்கப்பூரில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் அன்றாட வகுப்பறைக் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை இணைக்கும் நோக்கத்தோடு மாணவர் கற்றல் தளம் உருவாக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூர்க் கல்வி அமைச்சால் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கற்றல் தளத்தில் மாணவர்கள் பள்ளியில் பயிலும் அனைத்துப் பாடங்களுக்காகவும் எண்ணற்ற வளங்கள் இருக்கின்றன. மொழிப் பாடங்களுக்கும் அறிவியல், கணக்கு முதலான

பாடங்களுக்கும் உரிய வளங்கள் உருவாக்கப்பட்டு வகுப்பறைக் கற்பித்தலுக்கும் சுய கற்றலுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய வளங்களை ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் கற்றல் நிலைக்கேற்ப மாற்றியமைத்துக்கொள்ளவும் பிற இணையத்தளத்திலுள்ள கற்றல் கூறுகளை இணைத்துக் கற்பிக்கவும் இக்கற்றல் தளம் வழிவகுக்கிறது.

தமிழ்மொழியைக் கற்பிக்க உகந்த மின்னூல்கள் (E-books), பாடல்கள், கதைகள், மொழி விளையாட்டுகள், மின்னிலக்க எழுத்தட்டைகள், சொல்லட்டைகள் (E-Flashcards - letter cards, word cards) முதலானவையும் இக்கற்றல் தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன. மின்னிலக்க எழுத்தட்டைகள் தமிழ் எழுத்துகளை எப்படி உச்சரிக்க வேண்டும் என்பதைக் கற்றுத்தர ஒளிக்காட்சியாக உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றை மாணவர்கள் வகுப்பறையில் மட்டும் பயன்படுத்தாமல், அவர்களது சுயக்கற்றலுக்கும் பயன்படுகிறது அத்துடன் மாணவர்களின் பயன்பாட்டிற்காக மின்னகராதியும் இக்கற்றல் தளத்தில் இணைக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்குப் புரியாத சொற்கள் கருத்தறிதல், கட்டுரை முதலான பகுதிகளில் இருந்தால் அவர்கள் உடனடியாக மின்னகராதியைப் பயன்படுத்திப் பொருள் தெரிந்துகொள்வதற்கு மின்னகராதி (E-dictionary – Tamil-Tamil-English) உதவுகிறது. இத்தகைய சிறப்புக்கூறுகளால் கற்றலும் கற்பித்தலும் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் தடைபடாமல் நிகழ இந்த மாணவர் கற்றல் தளம் உதவுகிறது.

இத்தளம் வகுப்பறை நடவடிக்கைகளில் தொழில்நுட்பத்தை இணைத்துக் கற்பிக்கவும் மாணவர்களிடையே வகுப்பு நிலையில் கலந்துரையாடல் நிகழ்த்தவும் மாணவர்களுக்கு வீட்டுப்பாடங்களை வழங்கவும் அவர்களது ஒப்படைப்புகளை மதிப்பீடு செய்யவும் உதவுகிறது. இதனால், மாணவர்களின் கற்றல் தடையின்றி எங்கேயும் எப்போதும் தொடர்வதோடு மாணவர்கள் தங்கள் கற்றலைத் தாங்களே மதிப்பீடு செய்வதற்கும் உதவுகிறது. இவ்விதம் இக்கற்றல்தளம் மாணவர்கள் தங்களது தவறுகளைத் தாங்களே திருத்திக்கொள்ளவும் தவறிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது. இதனால், மாணவர்கள் 21-ஆம் நூற்றாண்டுத் திறனுடையவர்களாக உருவாகின்றனர்.

முடிவுரை:

கற்பித்தலில் ஆசிரியர்களின் சுமையைக் குறைக்கவும் மாணவர்களின் கற்றலைச் சுகமாக்கவும் இன்று தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் பெரும்பங்காற்றுகின்றது. தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தால் கற்றல் கற்பித்தலுக்கு உகந்த ஒரு செயலியோ இணையத்தளமோ நித்தமும் உருவாக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. அன்றாடம் பெருகும் தொழில்நுட்பங்களுள் தம் மாணவர்களுக்கு உகந்தது எது என்பதைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்து ஆசிரியர்களின் தனித்திறனாகும். வகுப்பறையில் தகவல் தொழில்நுட்பத்தை மிகுதியாக இணைக்கும்போது அதுசார்ந்த நன்னடத்தையையும் கற்பிக்க வேண்டும். தம்மிடம் பயிலும் மாணவர்களின் கற்றலை மகிழ்வூட்டுவதாக மாற்றியமைப்பதும் ஒவ்வொரு ஆசிரியரின் கையிலும் இருக்கின்றது.

மேற்பார்வை நூல்களும் இணையத்தளமும்:

- தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2024, தொடக்கநிலை
- 12-ஆம் உலகத் தமிழாசிரியர் மாநாடு, மாநாட்டு ஆய்வடங்கல்
- https://vle.learning.moe.edu.sg/login

வகுப்பறைக் கற்பித்தலுக்கு உதவும் சில இணையத்தளங்கள்:

1. Slidesgo, Canva – Useful websites to generate PPT slides, online graphic design.

2. Kahoot! - An interactive quiz platform that engages students through gamification.

3. Quizizz - Similar to Kahoot!, but allows for self-paced quizzes.

4. Socrative - Offers various question types and real-time result visualisation.

5. Formative - Allows for a wide range of question types and supports file uploads.

6. Nearpod - Combines interactive lessons with built-in formative assessment tools.

7. Plickers - Uses printed cards and a mobile app for quick assessments.

8. Diffit - A versatile AI tool for generate Instructional Materials.

9. Mentimeter - Enables interactive presentations with live polling and word clouds.

10. Thinglink – Annotate images, videos and 360-degree VR shots with rich media. *Future, Open Data, AI.*

KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN **2456-5148** (Online)
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

The situation of Tamil migrants during the Japanese occupation

Palthamburaj Kingston[1] & Logeswary Arumugum[2]
Assistant Professor
Asian Languages & Cultures Academic Group
Tamil Language & Culture Division
National Institute of Education
Nanyang Technological University
Singapore
Email:palthamburaj.k@nie.edu.sg
2 Teacher, SMK Pokok Sena,
Penang

Received 30/04/2025
Accepted for publication 30/04/2025
Published 01/05/2025

Abstract

This study examines the political, economic, and social conditions of Malaysian Tamils under Japanese rule from 1941 to 1945. The primary objective is to analyze the challenges faced by the Tamil community during this period and understand the transformations they underwent. This research employs historical analysis, archival research, and oral history as primary methodologies. The study is framed using Postcolonial Theory, Diaspora Theory, and Marxist Analysis. The paper is structured into five key sections: (1) Introduction, (2) Historical Context, (3) Impact of Japanese Rule, (4) Theoretical Analysis, and (5) Conclusion. Under Japanese rule, Malaysian Tamils experienced severe exploitation and resistance. Their working conditions deteriorated, education was restricted, and cultural identities were suppressed. However, they demonstrated resilience and adaptability in overcoming adversities.

***Keywords**: Japanese rule, Malaysian Tamils, Colonialism, Resistance, Economy, Social Changes...*

சப்பானியர் ஆட்சிக் காலத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் நிலை

பால்தம்பராஜ் கிங்ஸ்டன்[1], லோகேஸ்வரி ஆறுமுகம்[2]
1 உதவிப் பேராசிரியர் ஆசிய மொழிகள் மற்றும் கலாச்சாரங்கள் கல்விக்குழு
தமிழ் மொழி மற்றும் கலாச்சாரப் பிரிவு தேசிய கல்வி நிறுவனம் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்
சிங்கப்பூர் மின்னஞ்சல்: palthamburaj.k@nie.edu.sg
2 ஆசிரியர், SMK பொகோக் சேனா, பெனாங்

கட்டுரைச் சுருக்கம்:

இந்த ஆய்வு 1941-1945 ஆம் ஆண்டுகளில் சப்பானியர் ஆட்சிக்காலத்தில் மலேசியத் தமிழர்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக நிலையை ஆய்வு செய்கிறது. ஆய்வின் முக்கிய நோக்கம், அந்த காலகட்டத்தில் தமிழர்கள் சந்தித்த சவால்களைப் பகுப்பாய்வு செய்வது மற்றும் அவர்கள் எதிர்கொண்ட மாற்றங்களைப் புரிந்துகொள்வதாகும். இந்த ஆய்வு வரலாற்று பகுப்பாய்வு, ஆவணப்பூர்வ ஆராய்ச்சி மற்றும் வாய்வழி நினைவுச் சான்றுகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுகிறது. பிற்காலக் காலனித்துவக் கோட்பாடு, பரவலா கோட்பாடு மற்றும்

மார்க்சியக் கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வுக் கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. கட்டுரை ஐந்து முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது: (1) ஆய்வின் அறிமுகம், (2) வரலாற்றுச் சூழல், (3) சப்பானிய ஆட்சியின் தாக்கம், (4) கோட்பாடுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு, மற்றும் (5) முடிவுரை. சப்பானிய ஆட்சியின் கீழ், மலேசியத் தமிழர்கள் கடுமையான சுரண்டலையும் எதிர்ப்புப் போராட்டங்களையும் சந்தித்தனர். தொழிலாளர் நிலைமைகள் மோசமடைந்தன, கல்வி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன, மற்றும் கலாச்சார அடையாளங்கள் பாதிக்கப்பட்டன. இருப்பினும், தமிழர்கள் தன்னம்பிக்கையுடன் தங்களைத் தக்க வைத்துக் கொண்டனர்.

கருச்சொற்கள்: *சப்பானியர் ஆட்சி, மலேசியத் தமிழர்கள், காலனித்துவம், எதிர்ப்பு, பொருளாதாரம், சமூக மாற்றங்கள்..*

அறிமுகம்

மலேசியத் தமிழர்கள் வரலாற்றில் 1941-1945 ஆண்டுகளின் சப்பானியர் ஆட்சிக் காலம் முக்கியமான மாற்றங்களைக் கொண்டிருந்தது. பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் கீழ், தமிழர்கள் மலேசியாவில் தொழிலாளர்களாகக் கொண்டு வரப்பட்டனர். பிற்காலக் காலனித்துவக் கோட்பாடு (Postcolonial Theory), புலம்பெயர்ந்தோர் கோட்பாடு (Diaspora Theory) ஆகியவற்றின் அடிப்படையில், அவர்கள் சந்தித்த ஒடுக்குமுறைகள், போராட்டங்கள் மற்றும் சமூக மாற்றங்களை ஆய்வு செய்வது இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த பிரிட்டிஷ், 1914-ஆம் ஆண்டிற்குள் மலாயா (தற்போது மலேசியா) முழுவதையும் கைப்பற்றியது. மலேசியாவின் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி அதிக லாபம் ஈட்ட, உடலுழைப்புத் தொழிலாளர்களை பெரும் எண்ணிக்கையில் தேவைப்பட்டனர். இதன் விளைவாக, தென்னிந்தியாவைச் சேர்ந்த ஏழை, கல்வியறிவு இல்லாத தமிழர்கள் மலேசியாவிற்கு கொண்டு வரப்பட்டனர். ஒப்பந்தக் கூலிமுறை (Indentured Labour System) மற்றும் கங்காணி முறை (Kangani System) ஆகியவற்றின் மூலம், இவர்களை தோட்டங்கள் மற்றும் தொழில்களில் பணியாற்ற அழைத்துக் கொண்டுவந்தனர். 1941-ஆம் ஆண்டு, ஜப்பான் மலேசியாவைப் பிடித்ததும், பிரிட்டிஷ் ஆட்சி முடிவுக்கு வந்தது. ஆனால், தமிழர்களின் நிலை மேலும் மோசமடைந்தது. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழிருந்த போதே கடுமையான சுரண்டலுக்குள்ளான அவர்கள், சப்பானிய ஆட்சியில் அதைவிட மோசமான பொருளாதார, சமூக தடைகளுக்கு ஆளானார்கள். இந்தியத் தேசியப் படையின் (INA) உருவாக்கம், தமிழர்களின் அரசியல், சமூக நிலையை மாறச்செய்தது. பிற்காலக் காலனித்துவக் கோட்பாடு பார்வையில், பிரிட்டிஷ் ஆட்சி முடிந்தபோதும், சப்பானியர்கள் புதிய காலனித்துவர்களாக தமிழர்களைப் பயன்படுத்தியுள்ளனர். புலம்பெயர்ந்தோர் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழர்கள் அடிக்கடி புதிய ஆட்சியாளர்களுக்கேற்ப தங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த ஆய்வு, மலேசியத் தமிழர்களின் வரலாற்றை புதுப்பிக்கின்றதோடு, அவர்களின் அடக்குமுறைகள், போராட்டங்கள் மற்றும் வாழ்க்கை முறைகளைப் புரிந்துகொள்ள உதவுகிறது. மலேசியத் தமிழர்கள் பிரிட்டிஷ் காலனித்துவத்திலும், சப்பானிய ஆட்சியிலும் சமமான சிரமங்களைச் சந்தித்ததை இந்த ஆய்வு வெளிக்கொணர்கிறது.

ஆய்வின் நோக்கம்:

சப்பானியர் ஆட்சிக்காலத்தில் மலேசியத் தமிழர்களின் வாழ்க்கைமுறை, அரசியல் நிலை, பொருளாதார மாற்றங்கள் மற்றும் அவர்களின் எதிர்ப்புப் போராட்டங்களை புரிந்துகொள்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு வினாக்கள்:

1) சப்பானிய ஆட்சிக்காலத்தில் மலேசியத் தமிழர்கள் எதிர்கொண்ட முக்கியமான மாற்றங்கள் யாவை?

2) தமிழ் சமூகத்தின் அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார மாற்றங்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டன?

3) இக்காலகட்டத்தை மறைமுகமாக அல்லது திறந்தவெளியாக எதிர்கொண்ட எதிர்ப்புப் பாணிகள் எவை?

ஆய்வுத்தரவுகள்:

இரா.தண்டாயுதம் அவர்களின் மலேசிய நாட்டுப்புறப்பாடல்கள் ஆய்வுத்தரவுகளாக எடுக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சூழல்

சப்பானிய ஆட்சிக்கு முந்தைய மலேசியத் தமிழர்கள்

மலேசியாவில் இந்தியர்களின் வருகை கிறிஸ்துவுக்கு முன்னரே இருந்தாலும் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தான் இவர்கள் பெருமளவில் இந்நாட்டிற்கு சஞ்சிக் கூலிகளாக கொண்டு வரப்பட்டனர். இவர்கள் பெரும்பாலும் பிரிட்டிஷ் காலத்தில் தொழிலாளர்களாக கொண்டுவரப்பட்டனர். இவர்கள் மலேசியாவின் ரப்பர் தோட்டங்களிலும், புகையிலை மற்றும் சாகுபடி பணிகளிலும் ஈடுபட்டனர்.

தொடக்கத்தில் கரும்பு, காப்பித் தோட்டங்களில் வேலை செய்வதற்கும் அதனை அடுத்து இரப்பர் தோட்டங்களில் பணிபுரிவதற்கும் இழுத்து வரப்பட்டனர். ஒப்பந்தக் கூலிமுறை அடிப்படையில் அழைக்கப்பட்ட தமிழர்கள், இம்முறை தடை செய்யப்பட்டதும் கங்காணிமுறைத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டனர். இந்த முறையில் கங்காணி ஒருவர் தமிழ்நாட்டின் சிற்றூர்களுக்குச் சென்று ஆசை வார்த்தைகளைப் பொழிந்து பொய்யான உறுதிமொழிகளைத் தந்து தொழிலாளர்களை அழைத்து வருவார். அதிலும், தொழிலாளர்களுக்குத் தலைவராகச் செயல்பட்ட கண்காணி அவர்களைத் தத்தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கத் தொழிலாளர்களுக்கு வட்டிக்குப் பணம் கொடுத்து பொருள் ஈட்டினர். கடன்பட்டவர்கள் அடைக்கமுடியாமல் தொடர்கடனாளிகளாகவே வாழ்ந்து துன்புற்றனர். கண்காணி செய்த துரோகம் போதாதென்று பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சி புரிந்த கொடுமைகளையும் எண்ணி அப்பாவி மக்கள் உள்ளம் குமுறினர். வாழ்வுதேடி வந்த இடத்தில் அவர்கள் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. மலாயா சொர்க்கபூமி என்று கூறியோர் பொய்யை மெய்யென்று நம்பிய மக்களுக்குக் கொடிய விலங்குகள், குருதி உறிஞ்சும் அட்டைகள், மலேரியக் கொசுக்கள் நிறைந்திருந்த இருள் அடர்ந்த காடே புகலிடமாகக் காட்சியளித்தது. அத்தகைய மண்ணைச் செல்வம் கொழிக்க வேண்டிய நாடாக்கக் கொண்டிருக்கும் கடமையை எண்ணி நடுங்கினர். இவர்களின் குமுறல்களைக் கீழ்கண்ட நாட்டுப்புறப் பாடல் பிரதிபலிக்கிறது.

“காடுமலை மேடுபள்ளம்

கண்டகண்ட இடங்களில்லெல்லாம்

மாடுபோல உழைக்கணும்

மலையேறிப் பாடுபட்டு

ஊடுருவிப் போவுதய்யா இதநினைக்க

அப்பப்பா பசிக் கொடுமை....”

(தண்டாயுதம், இரா. பக் 20)

வந்த பாதை ஒரு வழியானதால் வேறு வழியின்றி மின்சாரக் கருவிகளற்ற அக்காலத்தில் உடல் உழைப்பாலே அனைத்தையும் செய்து தமிழர்கள் நாட்டை வளமாக்கினர். கொடிய சூழல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சமுதாய மலர்ச்சிக்கு வழியில்லாமல் போனது. மலேசியத் தமிழர்களின் வாழ்வு அவர்கள் குடியேறிய காலம் தொடங்கி முதலாம் உலகப்போர்க்காலம் வரை மிகக் கடுமையான காலமாகக் காணப்பட்டது. இக்காலக்கட்டம் நாட்டின் வளமைக்கு உழைப்பதிலேயே செலவாயிற்று. அது வேளாண்மையையே மையமாகக் கொண்டு செயல்பட்ட காலம்.

பிரிட்டிஷ் அரசின் தமிழ் மக்களை அணுகும் கொள்கைகள்

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ், மலேசியாவில் தமிழர்கள் பெரும்பாலும் ஒப்பந்தத் தொழிலாளர்களாகவும், தோட்டத் தொழிலாளர்களாகவும் பணியாற்றினர். பிரிட்டிஷ் அரசின் அணுகுமுறை, தமிழர்களை ஒழுங்கற்ற நிலையில் தொழிலாளர்களாக வைத்திருந்தது. அவர்களின் வாழ்க்கை நிலை பெரும்பாலும் கடினமானதாகவும், சுரண்டல் நிறைந்ததாகவும் இருந்தது. அவர்களுக்கு குறைந்த ஊதியம் வழங்கப்பட்டது, மேலும் அவர்கள் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டியிருந்தது. சமூக உரிமைகள் மறுக்கப்பட்டன. மேலும், தொழிலாளர் சங்கங்கள் உருவாகுவதற்கான சூழல் குறைவாக இருந்தது. பிரிட்டிஷ் அரசு தொழிலாளர் இயக்கங்களை கட்டுப்படுத்தியது, மேலும் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடுவதை கடினமாக்கியது. தொழிலாளர் சங்கங்கள் அமைப்பது ஒடுக்கப்பட்டது. இந்த கொள்கைகள் தமிழர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை கடுமையாக பாதித்தது.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் தமிழர்கள் கடுமையான சுரண்டலுக்கும், துயரத்திற்கும் ஆளானார்கள். தமிழர்களைத் துச்சமாக எண்ணி, வெறும் உழைப்புக்காக அவர்களின் குருதியை வெள்ளையர்கள் உறிஞ்சினர். சுத்தமான குடிநீர் இன்றி தவித்தனர்; அஞ்சி வாழ்ந்தனர். சுகாதாரமற்ற வாழ்க்கையை வாழ்ந்து மடிந்தவர்கள் பலர். இதனை கீழேயுள்ள பாடல் வரிகள் மெய்ப்பிக்கின்றன.

"குளத்திலே தண்ணிவரும் என்னப் பெத்த ஐயாவே

நீ பெத்த பொண்ணுக்குக் குண்டா சுழண்டுவரும்

கோட்டா தண்ணியின்னு நான் குடிக்கத்தான் அஞ்சினனே!"

இரப்பர் பால் உறைவதற்கு மருந்து கலக்கப்படும் நச்சுத் தன்மை கொண்ட நீரைத்தான் 'கோட்டா தண்ணி' எனக் கூறுவர். ஆக, குடிக்கச் சுத்தமான நீர்கூட இல்லாமல் மக்கள் தவித்திருந்தனர் என்பது இங்கு புலப்படுகிறது. மேலும், தமிழன் தமிழனுக்கே எதிரி என்ற விவாதங்கள் இங்கு மெய்யாகத்தான் இருக்கச் செய்கின்றன. தொழிலாளர்களை அழைத்து வர நியமிக்கப்பட்ட கங்காணியும் ஓர் இந்தியர் ஆவார். தோள் கொடுப்பான் என்றெண்ணி விரித்த வலையில் சிக்கினர் நம் அப்பாவி மக்கள். தங்களுடைய சுயநலத்திற்காக மக்களை ஏமாற்றி வரவழைத்து அவர்களைத் தொடர்கடனாளிகளாக்கிய கங்காணிகளையும் மக்கள் கீழ்கண்டவாறு குமுறினர்.

"பகடியான வார்த்தையிலே

பால்மரத்தில் பணம் காய்க்கும்

ஆவடியில் முந்திக்கிட்டா அதிர்ஸ்டமும் தானேவரும்

இப்படியும் ஜாலாக்கு எப்படியும் போட்டாங்க"

எதிர்பார்ப்புகளுக்கு எதிர்மறையான சூழ்நிலைகளைக் கண்ட மக்கள் மனம் நொந்தனர். கல்வியறிவற்றவர்களாக இருந்தவர்கள் சுலபத்தில் ஏமாற்றப்பட்டதையும் எண்ணி வந்த கனவுகள் சிதைந்ததையும் நினைத்துக் கொதித்தனர். இதனைக் கீழ்கண்ட பாடலின் வழி வெளிப்படுத்தியுள்ளனர்.

"சீனிக்குக் காக்காய் ஓட்ட கூட்டினு வந்த

கறுப்புச்சட்டை கதிர்வேலு கங்காணி

லாலான்முள்ளு டிங்குன்னுதே - இங்கு

லப்பர்கொட்டை டப்புன்னுதே!"

இக்காலத்துத் தமிழ் மக்களின் சிந்தனையையும் நடத்தையையும் ஆராயும்போது பல செய்திகள் தெரிகின்றன. தென்னகத்திலிருந்து சஞ்சிக் கூலிகளாக வந்த இந்தியர்களிடையே நிலவிய சாதிக் கோளாற்றின் காரணமாகத் தன்மானம், ஊக்கம் ஆகியவற்றை இழந்த அடிமட்ட வர்க்கமாகத் தமிழர்கள் இருந்தனர். மேலும், உடலுழைப்புத் தொழிலைத் தவிர்த்து மற்ற திறன்கள் அவர்களுக்கு இல்லாமல் இருந்தது. இதனால், பிற தொழிலை நாடாமலும் பிற துறையில் கால் பதிக்காமலும் அஞ்சி அடங்கி வாழ்ந்தனர். சீனர்களைவிடக் குறைந்த ஊதியத்திற்கு தமிழ் மக்கள் வேலை செய்யத் தயாராய் இருந்தனர். இவ்வனைத்து காரணங்களோடு அளவுக்கு மீறிய தாழ்வு மனப்பான்மை அவர்களை அடக்கியே வைத்திருந்தது. அதனால்தான் உரிமைகளைத் தட்டிக் கேட்கும் சீனர்களைப் போல் அல்லாது சொந்த அடையாளங்களைக் காத்துக் கொள்வதில் உள்ள உணர்வு தமிழர்களுக்கு இல்லாமல் போய்விட்டது. இதனாலேயே, தமிழர்கள் பின்தங்கி ஒடுங்கி சிரமத்தோடு வாழ்ந்தனர். வயிற்றுப் பசியொன்றைப் போக்குவதற்காக அனைத்து கஷ்டங்களையும் தாங்கிக்கொண்டனர். இதனைக் கீழ்கண்ட நாட்டுப்புறப்பாடல்வழி அறியலாம்.

"…ஓடிவர்றார் பூட்ஸ்காலால் உதைக்க

ஊடுருவிப் போவுதய்யா இதநினைக்க

அப்பப்பா பசிக் கொடுமை…"

அதுமட்டுமல்லாமல், தங்களுக்கு நேரும் அநியாயங்களைத் தட்டிக் கேட்கத் திக்கற்றவர்களாய் இருந்தனர். போராட்டங்களைச் சந்தித்து மீள வேண்டும் என்ற போக்கையே அவர்கள் மத்தியில் காணமுடியவில்லை. கால் போன போக்கிலே கட்டளைகளுக்கு அஞ்சி அஞ்சி வாழ்க்கை நடத்தினர்.

"ஆயிரக்கணக்கானோர் இறந்துகொண் டிருக்கிறார்கள்

அப்படி ஒரு நிலை எனக்கு வரும்போது

என்னை வேலை செய்யச் சொல்லி எந்த முதலாளியும் கூறமுடியாது

கூலியாய்க் கொடுக்கும் சோளமும் எனக்குக் கிடைக்காது

தினமும் நூறு கசையடிகள் வாங்கும் அவலநிலையும் எனக்கு ஏற்படாது

காரணம் நான் மாண்டு விடுவதால்"

நிச்சயம் இறந்து விடுவோம் என்ற தளர்ந்த போக்குடனே வாழ்ந்து வந்தனர் என்பதை மேற்கண்ட பாடல் வரிகள் உணர்த்துகின்றன. பசிக்கொடுமை, அடி உதை என்ற அனைத்தும் உடலுக்கு மருத்துவிட்டது போல ஒரு தோரணையை இது கொடுக்கிறது.

கள்ளங்கபடமற்ற உழைப்பைக் கொட்டிய தமிழர்களின் வாழ்வை நேர வரம்பற்ற வேலை, குறைந்த ஊதியம், போதிய உணவு உடை இன்மை, தேவையான ஓய்வு உறக்கமின்மை, அடக்குமுறை ஆகியவை சீர்குலைத்தன. அடுத்து சப்பானியர் ஆட்சிக் காலத்திலும் ஓர் அடிமட்ட வர்க்கமாகவே தலைகுனிந்து வாழ்ந்தனர். அக்காலத்தில் எழுச்சியற்ற அடிமை மனப்பான்மையே சமுதாயத்தில் நிறைந்திருந்தது. எல்லாம் 'விதி' என்று நொந்து கொள்ளும் மூடநம்பிக்கை அவர்களை எழவிடாமல் செய்தது. அதுமட்டுமல்லாமல், சமுதாயத்தில் வழிகாட்ட நல்ல தலைமை இல்லாமல் இருந்தது. தொழிலாளர்களின் நலனைக் கருதி அரசியல் தொடர்போ, சமூக அமைப்போ, தொழிற்சங்க அமைப்போ விரிவடையவில்லை. மேலோட்டமாகச் சில அமைப்புகளே செயல்பட்டு வந்தன. 1930-களில் இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களிடையே ஓர் எழுச்சி பொங்கியது. மலாயா மத்திய இந்திய சங்கம் என்ற பெயரில் தொழிலாளர்களின் பிரச்சனையில் கவனத்தை முன்நிறுத்தியது. இவ்வியக்கம் அனைத்திந்தியத் தொழிலாளர் சங்கத்தோடு தொடர்பு கொண்டு இங்குள்ள மக்களின் நிலமைக்கு விடியலைத் தேடியது. இருப்பினும், இந்த முயற்சிகளாலும் மக்கள் அனுபவித்த துயரங்கள் குறைந்தபாடில்லை.

இவ்வாறாகச் சப்பானியர்களின் ஆட்சிக் காலத்திற்கு முன், சஞ்சிக் கூலிகளாக வந்த தமிழ் மக்கள் அடிமட்டத்தில் வாழ்ந்து மீளாத் துயரத்தில் இருந்தனர். மறுமலர்ச்சி சிந்தனை அற்று இருந்த தமிழர்களின் வாழ்வில் சயாம் மரண இரயில் பாதை புதிய தடத்தை ஏற்படுத்தியது. அதற்குப் பின் நடந்த இரண்டாம் உலகப் போர் பல அவலங்களைக் கட்டவிழ்த்தது. இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த காலத்தில் இந்தியாவில் வெள்ளையரை வெளியேற்ற சுபாஷ் சந்திரபோஸ் சப்பானியர் உதவியோடு வீரப்போர் நடத்தத் திட்டமிட்டார். அதற்காக இந்தியாவில் படை திரட்டினார். இது நாடெங்கும் எழுச்சிப் பேரலையை ஏற்படுத்தியது. மூதாதையர் வாழும் தாயக விடுதலைக்குத் தங்கள் பங்கினை வழங்க ஆயிரக்கணக்கான இளைஞர்களும் இளமகளிரும் வந்தனர். விடுதலை உணர்வு மேலோங்கிய இக்காலக்கட்டம் பஞ்சத்தின் கொடுமையை உணர்த்தியதோடு துன்பத்தின் எல்லையையும் காட்டியது

சப்பானியர் ஆட்சியின் தொடக்கம்

1941-ஆம் ஆண்டு ஜப்பான் மலேசியாவைக் கைப்பற்றியது, இதன் விளைவாக பிரிட்டிஷ் ஆட்சி முடிவுக்கு வந்தது. மலாயாவில் சப்பானியர்களின் ஆட்சி 15 பிப்ரவரி 1942 தொடங்கி 12 செப்டம்பர் 1945 வரை நீடித்தது. வாணிகப் போட்டியை மையமாகக் கொண்ட இரண்டாம் உலகப் போரின் தொடர்ச்சியாக மலாயாவை சப்பானியர்கள் கைப்பற்றினர். பிரிட்டிஷ் ஆட்சியை அகற்றித் தன்னாட்சியை நிறுவ சப்பான் மலாயா மீது போர்தொடுத்தது. "ஆசியாவை ஆசியர்களே ஆளவேண்டும்" என்ற சப்பானியர்களின் குறிக்கோள் இந்தப் போருக்கு அடித்தளமிட்டது என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. ஆசிய நாட்டை வெள்ளையரிடமிருந்து மீட்டு அதனை ஆசியர் கையில் ஒப்படைப்பது ஒன்றே சப்பானிய அரசின் கொள்கையாக இருந்தது. இந்தக் கொள்கையானது மலாயா மக்களின் வரவேற்பைப் பெற்றது. இருப்பினும், மிகக் குறுகிய காலத்தில் நடந்த நிகழ்வுகள் அவர்களின் மனப்போக்கினை மாற்றியது. வெள்ளையர்களுக்கும் சப்பானியர்களுக்குமிடையே நடந்த போர் தென்னிந்திய தொழிலாளர் வாழ்வை மிகமிகக் கடுமையாகச் சீரழித்தது. பல்லாயிரக்கணக்கானோர் உயிர்களையும் உறவுகளையும் இழந்து பரிதவிக்கும்

கொடுஞ்சூழல் பிறந்தது. இரண்டாம் உலகப் போரின்போது சப்பானியர் வசம் வீழ்ச்சி கண்ட மலாயா ஏறத்தாழ மூன்றரை ஆண்டுகள் கொடுங்கோல் ஆட்சியில் சிதைந்தது. முதலாம் உலகப்போர் முடிந்து இருள்சூழ்ந்த இக்காலம் அவலங்கள் நிறைந்ததாகும். இக்காலக்கட்டத்தில் ஏற்பட்ட பஞ்சமும் பட்டினியும் எக்காலத்திலும் ஏற்பட்டதில்லை. உயிரிழப்பு மிகுந்த சப்பானியர் காலம் ஒவ்வொரு தமிழர்களின் நெஞ்சை இன்றளவும் பிழிகிறது. (சத்தியானந்தா, 1957. பக் 66).

சப்பானிய ஆட்சியின் தாக்கம்

சப்பானிய ஆட்சி மலேசியாவில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியது. மலேசியத் தமிழர்களின் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார வாழ்க்கையில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சப்பானியர், பிரிட்டிஷ் காலனிய ஆட்சியாளர்களைப் போலவே, தமிழர்களை ஒரு தொழிலாளர் வர்க்கமாகவே பயன்படுத்தி, அவர்களின் அடக்குமுறையை மேலும் தீவிரப்படுத்தினர். அவர்கள் எதிர்கொண்ட கொடுமைகள், அடக்குமுறைகள், சமூக மாற்றங்கள் ஆகியவை இந்த ஆட்சியின் நேரடியான விளைவுகளாக இருந்தன.

அரசியல் தாக்கம்

சப்பானிய ஆட்சியில் மலேசியா முழுவதும் புதிய நிர்வாக அமைப்பு அமல்படுத்தப்பட்டது. தமிழர்கள் அரசியல் வாழ்வில் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டனர். சப்பானியர்கள், மலாயர்களை ஆதரித்து, இந்தியர்களையும் சீனர்களையும் குறைந்த முக்கியத்துவம் உள்ளவர்களாகப் பார்த்தனர். இதன் விளைவாக, பல தமிழர்கள் அரசியல் அதிகாரத்தை இழந்தனர். மேலும், சப்பானியர்கள் இந்திய தேசிய ஆர்மி (INA) உருவாக்கத்தை ஆதரித்தனர். சுபாஷ் சந்திரபோஸ் தலைமையிலான INA, மலேசியத் தமிழர்களிடையே இந்திய விடுதலைப் போராட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இதனால், மலேசியத் தமிழர்கள் INA-வில் சேர்ந்து இந்திய விடுதலைக்காக போராடத் தொடங்கினர் (முரசு, 2007, பக் 45). சப்பானியர் ஆட்சியில் தமிழ் சமூகத்தின் அரசியல் நிலை மேலும் மோசமடைந்தது. அரசியல் அமைப்புகளும் தமிழ் சங்கங்களும் சரிந்து விழுந்தன. பிரிட்டிஷ் காலத்தில் அரசியல் உரிமைகளுக்காக தமிழ் சமூகத் தலைவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் முற்றிலும் நசுக்கப்பட்டன. இதனால், தமிழர்கள் அரசியல் தளத்தில் பின்தங்கினர். பிற்காலக் காலனித்துவக் கோட்பாடு பார்வையில், பிரிட்டிஷ் ஆட்சி முடிந்தபோதும், சப்பானியர்கள் புதிய காலனித்துவர்களாக தமிழர்களைப் பயன்படுத்தியுள்ளனர். புலம்பெயர் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழர்கள் அடிக்கடி புதிய ஆட்சியாளர்களுக்கேற்ப தங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

சப்பானியர்களின் நிர்வாக மாற்றங்கள்

சப்பானியர்கள் மலேசியாவில் புதிய நிர்வாக மாற்றங்களை மேற்கொண்டனர். அவர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளை அகற்றியதுடன், புதிய நிர்வாகத்தையும் உருவாக்கினர். மலாயர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது, ஆனால் தமிழர்கள் இரண்டாம் நிலை குடிமக்களாகக் கருதப்பட்டனர். இதனால், தமிழர்கள் அரசியல் மற்றும் சமூக வாழ்வில் பின்தங்கினர். மேலும், சப்பானியர் ஆட்சியில் தமிழ் தலைவர்கள் இருவேறு நிலைப்பாடுகளை எடுத்தனர்; சிலர் சப்பானியர்களுடன் இணைந்து பணியாற்றினர், ஆனால் சிலர் சப்பானிய ஆட்சியை எதிர்த்து போராடினர் (சுந்தரம், 2005, பக் 102). சப்பானியர்கள் கட்டாய வேலை முறையை (forced labor) செயல்படுத்தினர், குறிப்பாக ரயில்வே கட்டுமானத்திலும் தோட்டத் தொழிலிலும் தமிழர்களை வலுக்கட்டாயமாக இணைத்தனர். இதனால், தொழிலாளர்கள் கடுமையான சித்திரவதை அனுபவிக்க நேர்ந்தது (ராமச்சந்திரன், 2010, பக் 67). சப்பானிய ஆட்சியில் தமிழ் பள்ளிகள் சில செயல்பட்டாலும், ஆங்கிலக் கல்வி முற்றுமுழுதாக தடைசெய்யப்பட்டது. மேலும், ஜப்பான் மொழி கற்பதை கட்டாயமாக்கியதால், கல்வி துறையிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டது (முருகப்பன், 2012, பக் 88). தமிழ் சமூக அமைப்புகள் பலவீனமடைந்து, பொருளாதாரத்தில் பின்தங்கியதால், தமிழர்கள் கடுமையான வாழ்க்கை சிக்கல்களை எதிர்கொண்டனர். பிரிட்டிஷ் ஆட்சி முடிந்தபோதும், சப்பானியர்கள் புதிய காலனித்துவர்களாக தமிழர்களைப் பயன்படுத்தியுள்ளனர். புலம்பெயர் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழர்கள் அடிக்கடி புதிய ஆட்சியாளர்களுக்கேற்ப தங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

பொருளாதார தாக்கம்

சப்பானியர்கள் மலேசியாவைக் கைப்பற்றிய பிறகு, மலேசியத் தமிழர்கள் பல்வேறு கட்டாய வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டனர் (Ramasamy, 1994). குறிப்பாக, பர்மா-தாய்லாந்து "மரண ரயில்பாதை" (Death Railway) கட்டுமானத்தில் தமிழர்கள் பெரிதும் ஈடுபடுத்தப்பட்டனர். மலேசியாவில் தமிழர்கள் பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்களாக இருந்தனர். ஆனால், சப்பானியர்கள் அவர்களை தங்களது போருக்காகக் கட்டாய வேலைக்கு அழைத்தனர். இந்த திட்டத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் மிகக் கடுமையான சூழ்நிலைகளில் வேலை செய்து உயிரிழந்தனர். உணவு பற்றாக்குறை, நோய்கள், மிகுந்த உழைப்பு ஆகியவை அவர்களின் வாழ்க்கையை சீரழித்தன. மேலும் தோட்டங்கள், தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள் போன்ற பொருளாதார மூலோபாயங்கள் சப்பானியர்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றதால், பல தமிழர்கள் வேலை இழந்தனர். சப்பானியர்கள் வழங்கிய குறைந்த ஊதியம் மற்றும் பொருட்களின் விலை உயர்வு காரணமாக, தமிழர்கள் உணவுக் கிடைப்பதற்காகப் பெரும் போராட்டம் மேற்கொண்டனர். இதன் விளைவாக, தமிழர்கள் பொருளாதார ரீதியாக பெரும் பாதிப்புகளைச் சந்தித்தனர். தோட்டங்கள், தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள் போன்ற பொருளாதார நிறுவனங்கள் சப்பானியர்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றதால், பல தமிழர்கள் வேலை இழந்தனர். சப்பானியர்கள் வழங்கிய குறைந்த ஊதியம் மற்றும் பொருட்களின் விலை உயர்வு காரணமாக, தமிழர்கள் உணவுக் கிடைப்பதற்காகப் பெரும் போராட்டம் மேற்கொண்டனர்.

சப்பானியர் ஆட்சிக்குப் பின்

சப்பானியர் ஆட்சி, இரண்டாம் உலகப் போர் இவை இரண்டிற்குப் பின் தொடங்கி நாடு விடுதலை பெற்றது வரையிலான காலம் கலப்பு நிகழத் தொடங்கிய காலமாகக் கருதப்படுகிறது. இவை இரண்டும் ஏற்படுத்திய நிகழ்வுகளுள் விடுதலை உணர்வு முதன்மையானதாகும். போருக்கு முந்திய காலத்தில் தமிழர்களின் உணர்வுகள் அவர்கள் மூலத் தாயக விடுதலையிலேயே இருந்தது. இதே வேளையில் சப்பானியர்களிடமிருந்து வெள்ளையர்கள் மீண்டும் நாட்டைக் கைப்பற்றினர். அப்பொழுது மக்களிடையெ ஏற்பட்ட சிந்தனை மாற்றம் பல அவலங்களைத் தகர்த்தது என கூறலாம். குடிகொண்டிருந்த நாட்டைத் தாயகமாக ஏற்கத் தொடங்கினர். மக்களிடையே புதிய நம்பிக்கை பிறந்தது. திரும்பி வந்த வெள்ளையர்கள் இதனை உணர்ந்தனர். மக்கள் எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாது என்று உணர்ந்தவர்கள் அவர்களின் உரிமைகளுக்கு மதிப்புக் கொடுக்கத் தொடங்கினர். இக்காலத்தில் சமுதாய வாழ்வு, கடந்த காலக்கட்டங்களை விட சற்று மேம்பட்டிருந்தது. உணவு, உடை, இருப்பிடம் ஆகிய அடிப்படை வசதிகள் விரிவடைந்தன. தோட்டப்புறத்தில் இருந்த இருள் நீங்கத் தொடங்கியது. அதிகாரக் கெடுபிடி குறைந்ததால் வாழ்வில் நம்பிக்கை ஏற்பட்டது. பழமைப் போக்கோடு சீர்த்திருத்தச் சிந்தனைகளும் பரவின. இருப்பினும் சாதியை விட்டுக்கொடுக்காத போக்கும் தொடர்ந்தது என்பதனை சொல்லியே ஆக வேண்டும். இதனால் காதலர்கள் தற்கொலை செய்வதும் கலப்புமணம் புரிந்தோர் குடும்பத்திலிருந்து தள்ளி வைக்கப்பட்டதும் நடந்து வந்தன. தமிழர்களிடையே கிளர்ந்த உரிமை உணர்வு தாய்மொழிகளின் வளர்ச்சிக்கு வித்திட்டன. பள்ளிகளின் வளர்ச்சிக்கு ஆங்கிலேயர் கவனம் அளித்தனர். 1946 ஆம் ஆண்டு கல்விச் சட்டத்தைப் பிறப்பித்தனர். இச்சட்டம் இலவசத் தாய்மொழிக் கல்வியை வலியுறுத்தியது. அதனால், தமிழ்ப்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த நல்கை உயர்ந்தது. பயிற்றல் முறை வகுப்புகள், தகுதிமிக்க ஆசிரியர்களை உருவாக்க மீண்டும் தொடங்கப்பட்டன. அதுமட்டுமல்லாமல் உரிமைகளைத் தைரியத்துடன் தட்டிக் கேட்கும் மனப்பான்மை துளிர்ந்தது. தொழிலாளர்களுக்குக் குரல் கொடுக்கத் தொழிற்சங்கங்கள் உருவாகின. தங்களுக்கும் ஒரு பாதுகாப்புக் குரல் இருக்கின்றது என்றெண்ணி நம்பிக்கையும் ஆறுதலும் அடைந்தனர். இருப்பினும் இச்சங்கங்கள் சமுதாயத்தின் போக்கை மாற்றுவதிலோ, பண்பாட்டுணர்வைப் பரப்புவதிலே, பொருளாதாரத்தில் மேம்பாடுகாணச் செய்வதிலோ கருத்துச் செலுத்தவில்லை. இதனால் வளம்பெற்ற சமுதாயத்தின் உருவாக்கத்தைக் காண முடியவில்லை. தரமற்ற குடியிருப்புகள், சத்துணவு உண்ண வருவாய் போதாமை, குழந்தைகள் கற்பதற்கேற்ற சூழ்நிலை அமையாமை போன்றவை இதற்குக் காரணங்களாக அமைந்தன. மேற்கூறியது போல முந்தையக் காலக் கட்டங்களில் சமுதாய விழிப்புணர்வு குறித்து இவ்வியக்கங்கள் அதிகம் கவனம் செலுத்தவில்லை என்பதனைக் கண்டோம். ஆனால், காலப்போக்கில் இதில் திருப்புமுனை காணப்பட்டது. இயக்கங்களுக்கு முன்னோடியாக இருந்த அகில மலாயாத் தமிழர் சங்கம் செம்மைப்படுத்தப்பட்டு தமிழர் திருநாள் எனும் உயரிய விழாவை உருவாக்கியது. 1952-இல் உருவாக்கப்பட்ட இத்திருநாள் தாய்மொழி, கலை, பண்பாட்டு உணர்வுகளைத் தமிழர்களுக்குப் புகுத்தியது. மேலும் இவ்விழா தமிழர்களுக்குத் தன்னம்பிக்கை, பொருளாதாரச் சிந்தனை, வாழ்வளிக்கும் நாட்டைத் தாயகமாக ஏற்கும் மனப்பான்மை போன்ற புதிய சிந்தனைகளைப் பெற்றுத் தந்தது. சாதி,

KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN *2456-5148 (Online)*
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

மதம் இவை அனைத்தையும் கடந்து தமிழர்கள் ஒன்று திரள வேண்டும் என்ற நோக்கம் கொண்டது; குறித்த வெற்றியையும் கண்டது. அதே வேளையில் பட்டணத்தில் வாழும் தமிழர்களின் நிலை சற்று மேம்பாடு கண்டிருந்தது. அங்கிருந்த இயக்கங்கள் சமுதாயம், கலை, பண்பாடு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தன. மலேசியத் தமிழர்களின் குடியிருப்புகளை நோக்கும்போது பெரும்பாலோர் தோட்டப்புறங்களிலே வாழ்ந்து வந்தனர் என தெரிகிறது. வெளியுலகம் பற்றிய அறிவு அவர்களுக்குப் போதாத காரணத்தினாலும், ஒதுக்குப்புறமான சூழலில் வாழ்ந்ததாலும் பிறருடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டவில்லை. அதனால் அவர்கள் மத்தியில் சிந்தனையில் ஒரு புத்துணர்ச்சியைக் காண்பது அரிதாகியது. ஆக, சுற்றுப் புறச் சூழல் மனிதனின் மனத்தையும் சிந்தனையையும் பாதிக்கின்றது என்பதனை இதன் வழி அறிய முடிகிறது. இதனையடுத்து தமிழர்கள் பிற இனத்தவருடனும் பிற இனத்தவர்கள் தமிழர்களுடனும் சேர்ந்தனர். இது பெரிய சமூக மாற்றத்தை ஏற்படுத்தியது. விடுதலைக்காக மூன்று இனங்களும் ஒற்றுமையுடன் ஒன்றிணைந்தன. கீழ்காணும் கவிதை தமிழர்களின் ஒற்றுமை உணர்வையும், நாட்டுப்பற்றையும், விடுதலை வேட்கையையும் வெளிப்படுத்துகிறது.

“எங்கள் மலாயா தங்கிடும் இன்பம்
பொங்கிட வேண்டாவா?
இந்திய சீனம லேசியர் யுரேசியர்
என்றுமிந் நாட்டினிலே- ஒன்றாய்
நன்றுடன் வாழ்ந்திடுவோம்!
யாவரும் ஈண்டு மலாயர்கள் என்று
இணையற்ற தோரின மாகவே மாறிச்
சத்தியச் செந்நெறிப் பன்னூல் கொண்டு
சாந்தியும் பெற்றிடுவோம்”

ஆனால், தோட்டப்புறத்து மக்களுக்கு விடுதலை கோரும் முழக்கங்கள் எட்டவில்லை. இருப்பினும், ஓரளவு படித்த இளைஞர்கள் வழி அதைப்பற்றி அறிந்து கொண்டனர். விடுதலையைப் பெறப்போகும் காலக்கட்டத்தில் பல சலுகைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றுள் ஒன்று நாட்டின் உரிமை நலத்தை முழுமையாகப் பெறுவதற்குக் குடியுரிமை தேவை. இதனைப் பெற்றுக் கொள்வதில் தமிழர்கள் பெரும்பாலோர் கருத்துச் செலுத்தவில்லை. இதனால், பல இன்னல்களுக்கும் ஆளாக வேண்டியிருந்தது. வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளாத போக்கு தமிழர்களிடத்தில் அதிகம் இருந்தது. விடுதலையால் பல்வேறு துறைகளில் ஏற்படும் நன்மைகளை முழுமையாகப் பெற இவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவில்லை. விடுதலைக்குப் பின்னும் அந்நியருக்கு உழைத்த மனப்போக்கை மாற்றிக்கொள்ளாமலேயே இருந்து வந்தனர். இதனைக் கீழ்கண்ட வரிகளில் காணலாம்.

“மரமிருக்கு உளியிருக்கு
மனமிருக்கு உழைப்பதற்கு
மற்றத் தொழில் நமக்கெதுக்கு வேலப்பா-இதுவே
உற்ற தொழில் இதுநமக்குப் போதுமப்பா”

விடுதலை கண்டாலும் தலை நிமிர்ந்து வாழவேண்டுமென்ற ஆர்வம் தமிழர்கள் மத்தியில் குறைவாகவே இருந்து வந்தது. தோட்டமே நிலையானது என்று இருந்த தமிழர் வாழ்வில் விடுதலை சிறிய மாற்றத்தையே ஏற்படுத்தியது. தொடர்ந்து, சமுதாயச் சீர்கேடு என்று நோக்கையில் தமிழர்கள் வன்முறையில் ஈடுபடாமல் இருந்தனர். குடித்து விட்டு மனைவியைத் துன்புறுத்துவது, உறவினர்களிடையே சிறு சிறு கைகலப்பு போன்றவையே நிலவின. தமிழர்களால் நாட்டுக்கோ அல்லது பிற இனத்துக்கோ எவ்வகை ஊறும் விளையவில்லை. காரணம் புறம்போக்கு நிலப்பகுதியில் குடிசைக் கட்டி வாழ்ந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. தோட்டப்புறமே எல்லாம் என்ற நிலையிலே அவர்கள்

KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN *2456-5148 (Online)*
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

வாழ்ந்தனர். சொந்தத் தொழில், சொந்த வீடு, சொத்து போன்ற சிந்தனையில்லாதவர்களாக இருந்தனர். கட்டுக்குலையாத ஒரு சமுதாய அமைப்பு இருந்து வந்தது. பட்டணப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் நன்மதிப்புடன் இருந்தனர். மருத்துவர், பொறியாளர், வணிகர், அரசு ஊழியர், பொதுப்பணித்துறை ஊழியர் என நல்ல வேலைகளில் அமர்ந்தனர் (முரசு, நெ. (1997).பக் 335). ஆனால் இந்நிலையானது பல காலம் நீடிக்கவில்லை. தோண்டத் துண்டாடல் என்ற போர்வையிலிருந்து சமூகச் சீர்கேடு எழ ஆரம்பித்தது. தோட்டப்புறத் தமிழர்கள் வீடு, வாசல், வேலை இழந்து, தங்க இடமின்றித் தத்தளித்தனர். பட்டணப் பகுதிகளையொட்டிய புறம்போக்கு நிலத்தில் குடிசை அமைத்தனர். மக்களின் இயல்பு வாழ்க்கை பாழாய் போனது. முறையான வாழ்வு நெறி இல்லாததால் சமுதாயக் கட்டமைப்பு சீரழிந்தது. மேலும், இவர்களுக்கு வழிகாட்டவும் குடும்பப் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க நல்லவொரு தலைமையும் இல்லை. இது போதாதென்று தண்ணீர், மின்சாரம், சாலை, சுற்றுச்சூழல் வசதிகளோ, கல்விக் கூடங்களோ இல்லை. இந்நிலைகளே சமூகச் சீர்கேட்டிற்கு வித்திட்டன. சப்பானியர் ஆட்சிக் காலத்திற்கு முன்-பின், முதல் விடுதலைப் பெற்ற காலம் வரை மலேசியத் தமிழர்கள் அனுபவித்த கொடுமைகள் பல. மறுமலர்ச்சியற்று செயல்பட்டு வந்ததால் வாழ்வில் மேன்மை காண இயலவில்லை என்பதை மேற்கண்ட ஆய்வின் வழி அறிய முடிகிறது.

கோட்பாடுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு

பிற்காலக் காலனித்துவக் கோணத்தில் – தமிழர்கள் மற்றும் சப்பானிய ஆட்சி

காலனித்துவ ஆட்சியின் அடக்குமுறைகளை புரிந்துகொள்ள பிற்காலக் காலனித்துவ கோட்பாடுகள் மிகவும் முக்கியமானவை. இவை, ஒரு சமூகத்தின் அடக்குமுறைகளையும், எதிர்ப்பினை உருவாக்கிய விதத்தையும் புரிந்து கொள்ள உதவுகின்றன.

விவரம்	**பிரிட்டிஷ் ஆட்சி** (1786–1942)	**சப்பானிய ஆட்சி** (1942–1945)
அரசியல் கட்டுப்பாடு	நிர்வாக அடக்குமுறை, வட்டாரத் தலைவர்கள் (local leaders) மூலம் ஆட்சி	நேரடியான இராணுவ ஆட்சி, கடுமையான கட்டுப்பாடு
பொருளாதாரம்	தோட்டத் தொழிலாளர்களாக தமிழர்கள் நிலையான (but குறைவான சம்பளம்) வேலை பெற்றனர்	கட்டாயத் தொழிலாளர் வேலைகள், குறைந்த ஊதியம், கடுமையான உழைப்பு
கல்வி	தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கல்வி	தமிழ் கல்வி முற்றிலும் தடை, ஜப்பானிய மொழி கட்டாயம்
சமூக வாழ்க்கை	மத வழிபாடு, சமூக அமைப்பு ஒரு வரையறுக்கப்பட்ட சுதந்திரத்துடன் நடந்தது	கோவில்கள் கட்டுப்படுத்தப்பட்டன, மத வழிபாட்டிற்கு தடைகள்
எதிர்ப்பு இயக்கங்கள்	தொழிலாளர்கள் சிலர் வேலைநிறுத்தம், இந்திய தேசியவாத இயக்கங்கள்	INA (Indian National Army) மூலம் சில தமிழர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்

எட்வர்ட் சைட் கூறியதைப் போல, காலனித்துவத்தால் பிறமையாக்கப்பட்ட சமூகங்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுகின்றன. பிரிட்டிஷ் ஆட்சி தமிழர்களை ஒரு "தொழிலாளர் சமூகமாக" உருவாக்கியது. சப்பானிய ஆட்சி நேரடியான இராணுவ அடக்குமுறையை கொண்டுவந்தது. தமிழர்கள் பிரிட்டிஷ் ஆட்சியில் அடக்குமுறைக்கு நேரடியாக முற்பட்டதில்லை, ஆனால், சப்பானிய ஆட்சியில் நேரடியான தாக்கம் இருந்தது. சப்பானிய ஆட்சி முடிந்தவுடன், தமிழர்கள் மீண்டும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு திரும்பியது ஒரு காலனித்துவ சார்பு நிலையைக் காட்டுகிறது. பிரிட்டிஷ் ஆட்சியின் போது, தமிழர்கள் அவர்களின் கலாச்சாரத்தைத் தக்கவைத்துக் கொண்டிருந்தனர், ஆனால், சப்பானிய ஆட்சியில் ஜப்பானிய மொழி கட்டாயமாக்கப்பட்டதால் கலாச்சார நாசம் அதிகமாக இருந்தது. இது கலாச்சார கலவையை ஏற்படுத்தவில்லை, ஆனால் ஒரு கலாச்சார அழிவை ஏற்படுத்தியது.

முடிவுரை

சப்பானிய ஆட்சிக் காலத்தில் மலேசியத் தமிழர்கள் கடுமையானச் சோதனைகளை எதிர்கொண்டிருந்தனர். அரசியல், பொருளாதார சமூக மாற்றங்கள் அவர்களின் வாழ்வில் கசப்பான தாக்கங்களை ஏற்படுத்தின. ஆயினும், அவர்கள் எதிர்ப்புக் கொண்டாடிய வழிமுறைகள், எதிர்காலத்தில் அவர்களின் அடையாளத்தைக் கட்டியெழுப்புவதற்குத் துணை புரிந்தன. இவ்வாய்வு வரலாற்று மற்றும் அரசியல் சமூக ஆய்வுகளில் பெரிதும் உதவக்கூடியதாக இருக்கும். சப்பானிய ஆட்சி தமிழர்களின் வாழ்க்கையை கடுமையாக பாதித்தது. பிரிட்டிஷ் ஆட்சி ஒரு "தொழிலாளர் அடிமைத்தனம்" கொண்டு வந்தால், சப்பானிய ஆட்சி நேரடியான "இராணுவ அடக்குமுறையை" கொண்டு வந்தது. பிற்காலக் காலனித்துவ கோட்பாடுகளின் அடிப்படையில், தமிழர்கள் இருவேறு காலனித்துவ முறைகளின் பாதிப்புகளையும் எதிர்கொண்டு தங்களது சமூக அமைப்பினை மீண்டும் கட்டமைத்தனர்.

மேற்கோள் நூல்கள்

1. *சுவாமி சத்தியானந்தா .*(1957). *மலாயா சரித்திரம். மனோன்மணி விலாச புத்தக சாலை:*
2. *கோலாலம்பூர்.*
3. *தண்டாயுதம் , இரா .* (1998) *. மலேசிய நாட்டுப்புறப் பாடல்கள். தமிழ்ப் புத்தகாலயம்.*
4. *முரசு , நெ .* (2007). *மலேசியத் தமிழரும் தமிழும்: தற்போதைய மலேசியத் தமிழர்.*
5. *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்: சென்னை.*
6. *முரசு , நெ.* (1997). *மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம். அருள்மதியம் பதிப்பகம்: கிள்ளான்.*
7. Thamburaj, K. P., & Arumugum, L. (2022). Historical background of Malaysian Tamil folk songs. *Time and Mind*, *15*(1), 41-66.
8. Arumugum, L., & Thamburaj, K. P. (2017). *மலேசியத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்களில் தோட்டப்புறத் தமிழ்த் தொழிலாளர்கள்*: Tamil Plantation Labourers in Malaysian Tamil Folk Songs. *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)*, *5*(1), 98-107.

NEITHAL THINAIYIL VARUNAN VALIPADU

P .GURUMOORTHI[1], Dr.S.VAITHEESWARAN[2],
1.Full-time Research Scholar
Department Of Tamil, Kalaignar Karunanidhi Government Arts College, Tiruvannamalai – 606603, Affiliated To Thiruvalluvar University, Serkkdu, Vellore, 632115.
Email: gurumoorthiguru10@gmail.Com , Mob.No:8438832771.
2.Associate Professor, Department Of Tamil, Kalaignar Karunanidhi Government Arts College, Tiruvannamalai – 606603.

Received 30/04/2025
Accepted for publication 30/04/2025
Published 01/05/2025

Abstract

It is known from the Sangam literature that the Tamils structured their living environments very well. They divided the land into five parts and divided them into Land related Items the first, the second, and the third. They divided life into internal and external. In this way, this article explains the worship of Varuna, the god of weaving, which was practiced in the Sangam period and the current worship of Varuna..

Keywords: *Neithal, Varunan, Tamil Lierature*

நெய்தல் திணையில் வருணன் வழிபாடு

ப.குருமூர்த்தி[1], முனைவர் ச.வைத்தீஸ்வரன்[2]

1.முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை, கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை – 606 603. திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது

Email: gurumoorthiguru10@gmail.com , Mob.no:8438832771.

2.இணைப்பேராசிரியர் நெறியாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை, கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை – 606 603.

கட்டுரைச் சுருக்கம்:

சங்க இலக்கியங்களிலிருந்து தமிழர்கள் தங்கள் வாழ்விடங்களை மிகச் சிறப்பாக வடிவமைத்தனர் என்பது அறியப்படுகிறது. அவர்கள் நிலத்தை ஐந்து பகுதிகளாகப் பிரித்து, அவற்றை நிலம் தொடர்பான பொருட்கள் - முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் என வகைப்படுத்தினர். வாழ்க்கையை அகம் மற்றும் புறம் என்று பிரித்தனர். அவ்வகையில், சங்க

காலத்தில் நிலவிய வருண வழிபாட்டையும், தற்போதுள்ள வருண வழிபாட்டையும் இந்த கட்டுரை விளக்குகிறது

முன்னுரை

தமிழர்கள் மிகவும் சிறப்பாக தனது வாழ்வியல் சூழல்களைக் கட்டமைத்து வாழ்ந்தவன் என்பது சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. நிலத்தினை ஐந்தாக பிரித்து அவற்றுக்கு தெய்வம் முதற்கொண்டு முதல், கரு, உரிப்பொருள் என பிரித்துள்ளான். வாழ்வை அகம், புறம் என பகுத்தான். இவ்வகையில் நெய்தல் திணையின் தெய்வமான வருணன் வழிபாடு சங்க காலத்திலேயே வழக்கிழந்தைப் பற்றியும் தற்போதைய வருணன் வழிபாடு பற்றியும் இக்கட்டுரை விளக்குகிறது.

திறவு சொற்கள்

வருணன் – வருணன் வழிபாடு – நெய்தல் திணை – கடற்றெய்வம் – இலங்கையில் வருணன் வழிபாடு – தேவுந்தர – உபுல்வன் – உதகபால – தெவொல் தெய்வம் – நெய்தல் திணைத் தெய்வம்.

நெய்தல் திணை

தமிழர்கள் தாம் வாழும் நிலத்தினை ஐந்தாக பிரித்து அவற்றுக்கு முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என வகைமைப்படுத்தி வாழ்ந்தான்.அவை,

“கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்

முற்படக் கிளந்த எழுதிணை என்ப” *1(தொல்.பொருள்.நூற்.1)*

அவற்றுள்,

“நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்

படுதிரை வையம் பாத்திய பண்பே” *2(தொல்.பொருள்.நூற்.2)*

மேற்காட்டிய நடுவண் ஐந்திணை குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்பனவாம். நெய்தல் திணையின் முதற்பொருள் கடல், கடல் சார்ந்த நிலம். கருப்பொருள் மீன்பிடித் தொழில், உப்பு உற்பத்தி, கடல் வழி பயணம், கடல் சார்ந்த உயிரினங்கள் (மீன், பவளம், நண்டு, கடல் தவளை, கடல் பறவை போன்றவை). உரிப்பொருள் இரங்கல், துயரம், பிரிவு, கடல் சார்ந்த துன்பங்கள். நிலத்துக்குரிய

தொழில் மீன்பிடித் தொழில், உப்பு உற்பத்தி, கடல் வழி வர்த்தகம், நெசவு, மான் வேட்டை. தேவத்தனம் வருணன், கடலாங்காரன், மீனவன், காளி, மார்க்கண்டேயர். மக்கள் மீனவர், உப்பு ஆலைத் தொழிலாளர்கள், வணிகர்கள், நெசவாளர்கள், மான் வேட்டைக்காரர்கள். உடைகள் நெசவுத் தொழில் மூலம் தயாரிக்கப்பட்ட துணிகள், மீன் பிடி வலை, கயிறு. பொழுது கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் பெரும் பொழுதுகளும் வைகறை, எற்பாடு என்னும் சிறுபொழுதும் நெய்தல் நிலத்துக்குரிய பொழுதுகளாகும்.

திணைத் தெய்வங்கள்

திணைத் தெய்வங்கள் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் தெளிவாக குறிப்பிடப்படுகிறது. அவை,

“**மாயோன் மேய காடுறை உலகமும்**

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்

சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே” [3](தொல்.பொருள்.நூற்.5)

நிலத்தை அதன் இயற்கைக்கு ஏற்பக் குறிஞ்சி,முல்லை,மருதம், நெய்தல், பாலை என ஐந்து பிரிவாகப் பிரித்தனர் பண்டைத் தமிழர். அவ்வாறு பிரித்த ஒவ்வொரு நிலப்பிரிவுக்கும் ஒவ்வொரு தெய்வத்தை அமைத்து வழிபட்டார்கள். மலைநாடாகிய குறிஞ்சிக்குத் தெய்வம் முருகன். காட்டு நிலமாகிய முல்லைக்குத் தெய்வம் மாயோன் என்னும் திருமால் . வயல் நாடாகிய மருதத்துக்குத் தெய்வம் வேந்தன் என்னும் இந்திரன். கடற்கரைப் பகுதியாகிய நெய்தல் நிலத்திற்குத் தெய்வம் வருணன். வளம் அற்ற பாலை நிலத்துக்குத் தெய்வம் கொற்றவை ஆகிய காளி, மிகப்பழைய நூலாகிய தொல்காப்பியத்தில் இச்செய்தி கூறப்படுகிறது.

இந்தக் கட்டுரையிலே கடல் தெய்வமாகிய வருணனைப் பற்றிச் சிறப்பாக ஆராய்வோம். வருணன் மேய பெருமணல் உலகம் என்பது வருணனுக்குரிய நெய்தல் நிலம் ஆகும். கும். அலைகடலைத் தமது வாழ்க்கைக் களமாகக்கொண்டு கடற்கரையில்

வாழ்கின்ற பட்டினவரும், கடல் கடந்து கப்பல் வாணிகம் செய்யும் வணிகப்பெரு மக்களும் பண்டைக்காலத்தில் வருணனைத் தமது வழிபடுகடவுளாகக் கொண்டிருந்தார்கள். எனவே, கடற்றெய்வமாகிய வருணன், கடற்கரை ஊர்களில் வாழ்ந்த மக்களுக்கு வாழ்வளிக்கும் தெய்வமாக விளங்கிற்று.

சங்க இலக்கியத்தில் வருணன்

வருணனைப் பற்றிய செய்திகள் சங்க நூல்களில் அதிகமாகக் காணப்படவில்லை. ஏனைய முருகன், திருமால், இந்திரன், கொற்றவை என்னும் தெய்வங்களைப் பற்றிச் சங்க நூல்களில் பல செய்திகள் கிடைக்கின்றன. ஆனால், வருணனைப்பற்றிய செய்தி கள் கிடைக்கவில்லை. இதனால், கடைச்சங்க காலத்திலேயே வருணன் வழிபாடு மறைந்துவிட்டது என்று கருதலாம். வருணன் வழிபாடு மறைந்ததற்குக் காரணமும் உண்டு. அஃதென்ன காரணம் என்றால், மணிமேகலை என்னும் சுடற்காவல் தெய்வத்தின் வழிபாடு புதிதாகப் புகுந்ததுதான். கி.மு. மூன்றாம் நூற்றண்டிலே மதம தமிழ் நாட்டில் இடம் பெற்றது. பௌத்த மதத் தெய்வங்களில் மணிமேகலா தெய்வமும் காரணம் எனலாம். அத்தெய்வம் கடலின் காவல் தெய்வம் ஆகும். கடலில் செல்பவர்களுக்கு இடுக்கண் நேராமல் பாதுகாக்கவேண்டியது மணிமேகலையின் கடமை. எனவே, பௌத்த சமய மணிமேகலை வந்தபிறகு பழைய வருணன் வணக்கம் பையப் பைய மறைந்துபோயிற்றுப் போலும். இக்காரணத்தினாற் போலும் கடைச் சங்க நூல்களிலே வருணனைப் பற்றிய செய்திகள் காணப் படவில்லை.

தொல்காப்பியத்திலே வருணன் பெயர் கூறப்பட்டது. பிறகு சிலப்பதிகாரத்திலே வருணனைப்பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அக்குறிப்பிலும் வருணன் என்னும் பெயர் கூறப்படாமல் கடற்றெய்வம் என்று மட்டும் கூறப்படுகிறது.

"கரியமலர் நெடுங்கட் காரிகைமுன் கடற்றெய்வங் காட்டிக்காட்டி

யரியசூள் பொய்த்தார் அறனிலரென் றேழையம்யாங் கறிகோமைய"[4]

(சிலம்பு: கானல்வரி – 5)

"பூக்கமழ் கானலிற் பொய்ச்சூள் பொறுக்கென்று

மாக்கடற் றெய்வநின் மலரடி வணங்குதும்" [5](சிலம்பு: கானல்வரி - 51.)

இவையன்றி, வருணனைப்பற்றிய வேறு குறிப்புகளைச் சங்கநூல்களில் நான் காணவில்லை. ஆகவே, இத்தெய்வத்தைப்பற்றிய முழு வரலாறு நமக்குக் கிடைக்கவில்லை. கி. பி. 2-ஆம் நூற்றாண்டிலேயே வருணன் வழிபாடு தமிழ்நாட்டில் மறக்கப்பட்டு மறைந்துபோயிற்று என்று கருதலாம். ஆனால், வருணன் வழிபாடு மிகப் பழங்காலத்தில் தமிழ்நாட்டில் நிகழ்ந்துவந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஆரிய வழிபாட்டில் வருணன்

தமிழரைப்போலவே ஆரியரும் வருணனை வணங்கினார்கள். ஆனால், தமிழரின் வருணன் வேறு; ஆரியரின் வருணன் வேறு. இவ்விரு வருணருக்கும் பெயர் ஒற்றுமை தவிர வேறு ஒற்றுமைகள் இல. இங்கு, இரண்டு வருணாகளைப்பற்றிய ஆராய்ச்சியில் புக வேண்டுவதில்லை. தமிழ் வருணனும் ஆரிய வருணனும் ஆதியில் வெவ்வேறு தெய்வங்களாக இருந்தனர். பின்னர்,திராவிட தெய்வங்களுக்கும் ஆரிய தெங்வங்களுக்கும் பிற்காலத்தில் தொடர்பு கற்பிக்கப்பட்டதுபோல, இந்த வருணர்களுக்கும் தொடர்பு கற்பிக்கப் பட்டிருக்கலாம்.

பண்டைக் காலத்திலே தமிழரில் நாகர் என்னும் பெயருள்ள இனத்தினர் இருந்தனர் என்பது சங்க நூல்களினால் தெரிகிறது. நாகர் கடற்கரைப் பகுதிகளிலே வாழ்ந்தனர் என்பதும் அவர்கள் கடல்மீது கலத்தில் சென்றனர் என்பதும் தெரிகின்றன, அவர்கள் இப்போது பட்டினவர் என்று கூறப்படுகிற நெய்தல் நில மக்களின் இனத்தவர்போலும், கடற்கரைப் பக்கங்களில் வசித்த அவர்கள் வருணனை வணங்கினார்கள்போலும்

இலங்கைத் தீவில் வருணன் வழிபாடு

வருணன் வழிபாடு, தமிழ்நாட்டில் மட்டும் நிகழ்ந்ததாகக் கருத வேண்டா. தமிழகத்தை அடுத்துள்ள இலங்கைத் தீவிலும் வருணன் வழிபாடு பண்டைக் காலத்தில் நிகழ்ந்தது. வருணன் வழிபாடுமட்டுமன்று, ஏனைய முருகன், திருமால், இந்திரன் வழிபாடுகளும் இலங்கைத் தீவிலே நடைபெற்றன. இப்போது, வருணன் வணக்கம் இலங்கையில் நிகழ்ந்ததைப் பற்றி மட்டும் கூறுவோம்.

இலங்கைத்தீவிலே வருணன் வழிபாடு தொன்றுதொட்டு நடை பெற்றுவந்தது. தமிழ்நாட்டில் நிகழ்ந்ததுபோலவே இலங்கையிலும் வருணன் வழிபாடு கடற்கரைப் பகுதிகளிலேதான் நிகழ்ந்தன. இலங்கைத் தீவின் தென்கோடியிலே, கடற்கரை ஓரத்திலே தேவுந்தர என்னும் நகரம் உண்டு. தேவுந்தர என்பது தேவிநுவர என்பதன்

திரிபு. தேவிநுவர என்னும் சிங்கள மொழியின் பொருள் தேவநகரம் என்பது. தேவிநுவர என்னும் சொல்லைச் சிங்களவர் தேவுந்தர என்றும் தேநுவர என்றும் வழங்குவர். தமிழர் தனவா என்று வழங்குவர். ஆங்கிலேயர் தொண்ட்ரா என்று வழங்கினார்கள். இந்த நகரத்திலே உபுல்வன் என்னும் தெய்வத்திற்கு ஒருகோயில் இருந்தது. பேர்போன இந்த உபுல்வன் கோயிலைப் போர்ச்சுகீசியர் 18-ஆம் நூற்றாண்டில் இடித்துத் தகர்த்து அழித்துவிட்டார்கள். சிங்கள மொழியில் உபுலவன் என்றால் வருணனைக் குறிக்கும்.

வருணனுக்கு உபுல்வன் என்னும் பெயர் எப்படி உண்டாயிற்று? உதகபால வருணன் என்னும் சொல்லின் சிதைவுதான் உபுல்வன் என்பது. உதகபாலன் என்றால் நீரை ஆட்சி செய்கிறவனென்பது பொருள். சிங்கள இலக்கண முறைப்படி உதகபால என்பது உதபால என்றாகிப் பின்னர் உதபால என்பது உபுல் என்றாயிற்று என்பர் சிங்கள மொழி அறிந்தவர். வன் என்பது வருணன் என்னும் சொல்லின் திரிபு என்பர். வருணன் என்பது வணன் என்றாகிப் பின்னர் வணன் என்பது வன் என்றாயிற்று. எனவே, உதகபால வருணன் என்னும் சொல்லின் திரிபு உபுல்வன் என்பது உதகபாலன் என்பது நீர்க்கடவுளாகிய வருணனையே குறிக்கும். தேவுந்தர நகரத்தில் கோயில்கொண்டிருந்த உபுல்வன் (உதகபால வருணன்) தெய்வம்,கடலிலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. அப்படி என்றாற் பொருள் என்ன? உபுல்வன்,கடல் தெய்வம் என்பது தானே பொருள். உபுல்வன் தெய்வத்தை கிஹிராளி உபுல்வன் என்பர் சிங்களவர். கிஹிராளி என்றால் செஞ்சந்தன மரம் என்பது பொருள். செஞ் சந்தன மரத்தினால் செய்யப்பட்ட உபுல்வன் (வருணன்) உருவம் கடலில் மிதந்து வந்து தேவுந்தர நகரத்துக் கடற் கரையில் ஒதுங்கியதாகவும் அதனை எடுத்துவந்து கோயிலில் வைத்து வழிபாடு செய்ததாகவும் கூறுவர்.

இலங்கைத் தீவின் தென்மேற்குப் பகுதியிலும் கடற்கரை யோரத்தில் வருணனுக்கு ஒரு கோயில் இருந்ததாகத் தெரிகிறது. அக்கோயிலில் எழுந்தருளியிருந்த தெய்வத்திற்குச் சிங்களவர் தெவொல் என்று பெயர் கூறுவர். தெவொல் என்பது உதகபால என்னும் சொல்லின் திரிபு என்பர். உதக, தக, உத என்னும் சிங்களச் சொற்களுக்குத் தண்ணீர் என்பது பொருள் நீர்க்கடவுள் என்னும் பொருள் உள்ள தகபால என்னும் சிங்களச் சொல் தகபல என்றாகி, பிறகு தகபல என்பது தயவல் என்றாகி, பின்னர் தயவல என்பது தெவல என்றாகி, தெவல என்பது தெவொல் என்றாயிற்று என்று கூறுவர் சிங்கள அறிஞரான டாக்டர். S. பரணவிதன அவர்கள். எனவே தெவொல் என்னும் பெயர் உதகபாலனாகிய வருணனைக் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை.தெவொல்

தெய்வம் இலங்கைக்கு வந்த வரலாறு கூறப்படுகிறது. அது என்னவென்றால்: தமிழ்நாட்டுக் கப்பல் வாணிகன் ஒருவன் கடலிற் சென்றுகொண்டிருந்தபோது, அவனுடைய மரக் கலம் உடைந்து, கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தான். அவ னுடைய அல்லலைக் கண்ட கடற்காவல் தெய்வமாகிய மணிமேகலை (இது பௌத்த மதத்தைச் சேர்ந்த கடற்காவல் தெய்வம்), அவனுக்குக் தெப்பம் ஒன்றைக் கொடுத்து அவனைக் கரையேற்றியது.) அந்த வணிகனுக்கு ஏற்பட்ட கோயில்தான் தெவொல் கோயில்.

இந்தக் கதையை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால், இதில் சில உண்மைகள் மறைந்து கிடக்கின்றன. தமிழ்நாட்டு வாணிகனுக்கு மணிமேகலா தெய்வம் உதவிசெய்திருந்தால் அந்த நன்றிக்காக அவன் கட்டிய கோவிலில் மணிமேகலா தெய்வத்தை வைத்துப் பூசை செய்திருக்க வேண்டும். ஆனால், அதற்கு மாறாக தெவொல் (உதகபாலன்) தெய்வத்தை வைத்துப் பூசை செய்திருக்கிறான். தமிழ்நாட்டு வாணிகன், தனக்கு உதவிசெய்த தெய்வம் உதகபாலன் ஆகிய வருணன் என்று நம்பியபடியால் அத்தெய்வத்திற்குக் கோயில் அமைத்து வழிபட்டான். தமிழருடைய பழய கடற்றெய்வம் வருணன் ஆகையால் அந்த முறைப்படி வருண னுக்குக் கோயில் கட்டி வணங்கினான். பின்னர், பௌத்த மதம் பரவிய காலத்தில், பௌத்த மதத்தின் கடற்றெய்வமாகிய மணிமேகலை வணக்கம் ஏற்பட்ட காலத்தில், தமிழ வணிகனுக்குக் கடலில் உதவிசெய்த தெய்வம் மணிமேகலைதான் (வருணன் அல்லன்) என்பதை வற்புறுத்த மணிமேகலை வணிகனுக்கு உதவி செய்தது என்னும் கதை கற்பிக்கப்பட்டதுபோலும். எனவே, தெவொல் தெய்வம் என்பது தமிழரின் வருணன் என்பது உறுதிப்படுகிறது.

பழந்தமிழ் நாட்டில் நிகழ்ந்த வருணன் வணக்கம் இலங்கைத் தீவில் எப்போது இடம்பெற்றது? இலங்கைத்தீவு பௌத்தமதத்தின் கோட்டை போன்றது. எனவே, இலங்கைத்தீவில் பௌத்த மதம் பரவிய பிறகு, தமிழரின் வருணன் வணக்கம் இலங்கையில் புகுந்திருக்க முடியாது இலங்கையில் பௌத்தமதம் புகுவதற்கு முன்பே வருணன் வணக்கம் அங்குச் சென்றிருக்கவேண்டும். கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பௌத்தமதம் இலங்கைக்குச் சென்றது என்பது சரித்திர உண்மை. பௌத்தமதம் இலங்கைக்குச் செல்வதற்கு முன்பு, இலங்கையில் வாழ்ந்திருந்த மக்கள் யாதொரு தெய்வ வழிபாடும் இல்லாமல் மிருகங்களைப்போல வாழவில்லை, அவர்கள், தமிழர் வணங்கிவந்த முருகன், திருமால், இந்திரன், வருணன் முதலிய தெய்வங்களை வணங்கிவந்தனர். பௌத்தமதம் இலங்கையில் பரவி வேர் ஊன்றியபிறகும் பழைய

தெய்வ வணக்கங்கள் மறைந்துவிடவில்லை. ஆனால், ஒரு மாறுபாடு ஏற்பட்டது. அது என்னவென்றால், புத்தர் வணக்கம் (புத்தர் வழிபாடு) முதன்மை இடம் பெற்றது. முருகன், திருமால், வருணன் முதலிய தெய்வங் கள் பின் அணியில் நின்றன. அதாவது,பழைய தெய்வங்கள் சிறு தெய்வங்களாகக் கருதப்பட்டன. ஆனால், இத்தெய்வங்களின் வணக்கம் மறைந்துவிடவில்லை.

தற்போதும் நடைபெறும் வருணன் வழிபாடு

இலங்கைத் தீவின் தென்கோடியில் தேவுந்தர நகரத்தில் இருந்த உபுல்வன் (வருணன்) கோயில் போர்ச்சுகீசிய மதவெறியர்களால் தகர்த்து அழிக்கப்பட்டபோதிலும், அத்தெய்வத்திற்கு ஆண்டுதோறும் விழா நடைபெறுகிறதாம். அவ்விழாவில் வருண னுடைய முத்துக்குடை ஊர்வலமாகக் கொண்டுபோகப்படுகிறதாம். வருணன், கடலுக்குத் தெய்வம் ஆகையால், கடலில் கிடைக்கும் சிறந்த பொருளாகிய முத்தினால் குடையமைத்து வருணனை வழிபடுகிறார்கள்.

வரலாறு திரிப்பு

இலங்கையில் இருந்த வருணன் வழிபாடு, வட இந்தியாவிலிருந்து ஆரியர்கள் இலங்கையில் புகுத்திய வழிபாடு என்று சிங்கள அறிஞர்கள் கருதுகிறார்கள். இது தவறான கருத்து. இலங்கைக்கு அருகில் உள்ள தமிழ் நாட்டிலே, சங்க காலத்திலே வருணன் வழிபாடு நிகழ்ந்து வந்தது என்னும் உண்மையை அவர்கள் அறியார். அறிந்திருந்தால் தமிழ் நாட்டிலிருந்து வருணன் வழிபாடு இலங்கைக்குச் சென்றது என்னும் உண்மையை ஒப்புக் கொள்வார்கள். "வருணன் மேய பெருமணல் உலகம்" என்னும் தொல்காப்பிய சூத்திரத்தை ஓதியுணர்ந்து அவர்கள் உண்மை யறிவார்களாக.

கிராமங்களில் வருணன் வழிபாடு

தற்போது உள்ள கிராமங்களில் மழைப் பொழிவு நீண்ட நாட்களாக இல்லை என்றால் அவ்வூர் மக்கள் சேர்ந்து நீர் நிலைகளின் அருகாமையில் பொங்கல் வைத்து உயிர் பலி இட்டு வருணனை வேண்டுகின்றனர். இம்முறை எவ்வாறாக இருப்பினும் வழிபடும் இறைவன் வருணனாக இருக்கிறான். வருணனுக்கு என்று தமிழகத்தில் சிறப்பு தனி வழிபாடுகள் இல்லை என்றாலும், சான்றாக திருவண்ணாமலையில் வருணன் இலிங்கம் உள்ளது போன்று புராணம் தொடர்புடைய இடங்களில் வருணன் பற்றிய நினைவுகள் தமிழகத்தில் மீதம் உள்ளனர்.

முடிவுரை

தமிழரின் நெய்தல் திணைத் தெய்வமான வருணன் வழிபாடு தமிழகத்தில் கி.பி இரண்டாம் நூற்றாண்டிலேயே மறைந்துவிட்டது.இருப்பினும் பக்கத்து தீவான இலங்கையில் பல்வேறு வரலாற்று திரிபுகளின் மத்தியிலும் அந்த வழிபாடு இலங்கையில் சமீபகாலம் வரையில் நிகழ்ந்து வந்தது. ஏன்? கோயில் அழிந்து விட்டபோதிலும், இன்றும் வருணன் திருவிழா நடைபெறுகிறது! இந்த உண்மையினை அறிந்து தமிழரின் பழமையான வருணன் வழிபாட்டினை மீதம் இருக்கும் இடங்களிலாவது தொடர்ந்து நடைபெற வேண்டும்.

துணைநூற்பட்டியல்

1.திருஞானசம்பந்தம்,முனைவர்.ச.,தொல்காப்பியம் மூலமும் உரையும்,கதிர் பதிப்பகம்,திருவையாறு.

2.வேங்கடசாமி நாட்டார், ந.மு., சிலப்பதிகாரம் (மூலமும் உரையும்), ராமையா பதிப்பகம்.

KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN ***2456-5148*** *(Online)*
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

Ritual Practices of the Malayarayars in the Novel "Chinna Arayathi"

Dr. D. Neeladevi
Assistant Professor, Department of Tamil Studies Holy Cross College (Autonomous), Tiruchirappalli - 620 002
eMail: dneelatamil@gmail.com

Received 30/04/2025
Accepted for publication 30/04/2025
Published 01/05/2025

Abstract

Rituals hold a very important place among cultural identities. They reveal the uniqueness and tradition of a society. Rituals intertwined with various stages of human life are important, such as birth rituals (rituals performed when a child is born), puberty rituals (rituals performed when a girl reaches puberty), marriage rituals (rituals performed during marriage), divorce rituals (rituals performed during divorce), pollution rituals (rituals observed during sad occasions), and death rituals (rituals performed after death). We can learn about how these rituals are performed among tribal people, what their unique characteristics are, and what their social significance is through the novel "Chinna Arayathi." The aim of this study is to explore the role of these rituals in the lives of the Malayarayars and how they reflect their beliefs and lifestyles. Rituals are considered to be the most important cultural symbols. Rituals related to human life include birth rituals, puberty rituals, marriage rituals, divorce rituals, purification rituals, and death rituals. The methods used by these rituals among tribal people are known from the Chinna Arayathi Pudinam.

Keywords: *Maternity rituals, Child rituals*

சின்ன அரயத்தி புதினத்தில் மலையரையர்களின் சடங்கு முறைகள்

முனைவர் து.நீலாதேவி
உதவிப்பேராசிரியர் தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி-620 002
eMail: dneelatamil@gmail.com,

கட்டுரைச் சுருக்கம்:

பண்பாட்டு அடையாளங்களுள் சடங்குகள் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. இவை ஒரு சமூகத்தின் தனித்துவத்தையும் மரபையும் வெளிப்படுத்துகின்றன. மனித வாழ்வின் பல்வேறு நிலைகளுடன் பின்னிப்பிணைந்த சடங்குகளான பிறப்புச் சடங்கு (குழந்தை பிறக்கும்போது நடத்தப்படும் சடங்குகள்), பூப்புச் சடங்கு (பெண் பூப்பெய்தும் போது நடத்தப்படும் சடங்குகள்), மணச்சடங்கு (திருமணத்தின் போது நடத்தப்படும் சடங்குகள்), மணவிலக்குச் சடங்கு (விவாகரத்தின் போது நடத்தப்படும் சடங்குகள்), தீட்டுச் சடங்கு (துக்கமான நிகழ்வுகளின்போது கடைப்பிடிக்கப்படும் சடங்குகள்), இறப்புச் சடங்கு (இறந்த பிறகு நடத்தப்படும் சடங்குகள்) ஆகியவை முக்கியமானவை. இந்த சடங்குகள் பழங்குடி மக்களிடையே எவ்வாறு நிகழ்த்தப்படுகின்றன, அவற்றின் தனித்தன்மைகள் என்ன, அவற்றின் சமூக முக்கியத்துவம் என்ன என்பது பற்றி சின்ன அரயத்தி புதினத்தின் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடியும். மலையரையர்களின் வாழ்வில்

இந்த சடங்குகளின் பங்கு, அவை எவ்வாறு அவர்களின் நம்பிக்கைகள் மற்றும் வாழ்க்கை முறைகளை பிரதிபலிக்கின்றன என்பதை ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கம்.

திறவுச்சொற்கள்: பேறுகாலச் சடங்குகள் குழந்தைச் சடங்குகள்

முன்னுரை

மனிதர்களின் வாழ்க்கைப் பயணத்தில், பல்வேறு சவால்களையும், இன்னல்களையும் எதிர்கொண்டு, ஒரு சமூகமாக ஒன்றிணைந்து வாழ்வதற்கு வழிகாட்டும் நடைமுறைகளே சடங்குகள் ஆகும். பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும், இலக்கண நூல்களிலும் 'சடங்கு' என்ற சொல் நேரடியாகக் காணப்படவில்லை என்றாலும், சடங்குகளைக் குறிக்க 'விழா' எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பரிபாடல் காட்டும் சான்று இதனை உறுதி செய்கிறது:

"காஅய் கடவுள் சேஎய் செய்வேள் சால்வ தலைவ எனப் பேஎ விழவினுள் வேலன் ஏத்தும் வெறியும் உளவே"

இப்பாடல் வரிகள், வேலன் வெறியாட்டம் ஒரு விழாவாகக் கொண்டாடப்பட்டதைச் சுட்டிக்காட்டுகின்றன. இதன் மூலம், சடங்குகள் பண்டைக்காலத்தில் விழாக்களின் ஒருங்கிணைந்த அங்கமாக இருந்தன என்பதை அறியலாம்.

உண்மையில், சடங்குகளே விழாக்களின் அடித்தளம். பல சடங்குகள் ஒன்றிணைந்து ஒரு விழாவாக உருவெடுக்கின்றன. சடங்குகள், ஒரு சமூகத்தின் நம்பிக்கைகள், விழுமியங்கள் மற்றும் உலகப் பார்வையை வெளிப்படுத்துகின்றன. தமிழ் லெக்சிகன் சடங்கு குறித்து ஒரு விரிவான விளக்கத்தை அளிக்கிறது:

"மனிதன் கருவுயிர்ப்பது முதல் இறப்புவரை பல கட்டங்களை அடைகிறான். ஒவ்வொரு கட்டத்திலும் அவன் நுழையும்போது அந் நிகழ்ச்சியைக் குறிப்பதற்காகவும் சில சிறப்பையும் பண்பையும் பயனையும் நினைவூட்டுவதற்காகவும் சில கிரியைச் செயல்களைச் செய்யுமாறு ஒவ்வொரு மன்னர்களும் இனத்தார்க்கு விதிகள் உண்டாக்கியிருக்கின்றனர்."

இந்த வரையறையின்படி, சடங்கு என்பது மக்கள் பரம்பரை பரம்பரையாகவும், முறையாகவும் பின்பற்றி வரும் ஒரு குறிப்பிட்ட செயல்பாடு ஆகும். இது தனிமனித வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளைக் குறிக்கின்றது, அவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது, மேலும் சமூகத்தின் கலாச்சார விழுமியங்களை நிலைநிறுத்துகிறது.

மனிதனின் அறிவுத்திறன் மேம்படவும், வாழ்க்கைத்தரம் உயரவும், நாகரிகம் தழைத்தோங்கவும் சடங்குகளின் எண்ணிக்கையும், அதன் நோக்கமும் விரிவடைந்தது. சடங்குகள் பெரும்பாலும் மரபு சார்ந்தவை; அவை மனிதர்களுடனும், இனக்குழுக்களுடனும் பிரிக்க முடியாத வகையில் பிணைந்துள்ளன. இந்தச் சடங்குகள் ஒவ்வொரு இனத்திற்கும், சமூகத்திற்கும் மாறுபடும் தன்மை கொண்டவை. மேலும்,

அவை ஒவ்வொரு இடத்தின் தனித்தன்மை, புவியியல் சூழல் மற்றும் சமூக-பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப மாறுபடும் இயல்புடையவை. ஒரு குறிப்பிட்ட சடங்கு ஒரு இடத்தில் ஒரு விதமாகவும், வேறொரு இடத்தில் வேறு விதமாகவும் கடைபிடிக்கப்படலாம். அந்தந்தப் பகுதியின் கலாச்சாரம், நம்பிக்கை, வாழ்க்கை முறை மற்றும் வரலாற்றுப் பின்னணி ஆகியவற்றிற்கு ஏற்ப சடங்குகளில் மாற்றங்கள் நிகழ்வது இயல்பே. இந்த மாற்றங்கள், சடங்குகளின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிடாமல், அவை காலத்திற்கேற்ப தகவமைத்துக்கொள்ளும் தன்மையையே காட்டுகின்றன.

சடங்குகளின் முக்கியத்துவத்தை ஆராயும் போது, அவை சமூகக் கட்டமைப்பை வலுப்படுத்துவதிலும், தனிமனித மன அமைதியை உறுதி செய்வதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சடங்குகள், சமூகத்தின் அங்கீகரிக்கப்பட்ட நடத்தைகளை வலியுறுத்துகின்றன, ஒழுக்க நெறிகளைப் போதிக்கின்றன, மேலும் சமூக ஒற்றுமையை ஊக்குவிக்கின்றன. உதாரணமாக, திருமணச் சடங்குகள் குடும்ப உறவுகளை வலுப்படுத்துகின்றன, வாரிசுகளை உருவாக்குவதை உறுதி செய்கின்றன, மேலும் சமூகத்தின் தொடர்ச்சியைப் பாதுகாக்கின்றன. அதேபோல், இறப்புச் சடங்குகள் துக்கம் அனுசரிப்பதற்கும், இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்கும், இழப்பைச் சமாளிப்பதற்கும் ஒரு கட்டமைப்பை வழங்குகின்றன.

சடங்குகள் வெறும் பழக்கவழக்கங்கள் மட்டுமல்ல; அவை ஆழமான அர்த்தங்களையும், அடையாளங்களையும் கொண்டிருக்கின்றன. அவை ஒரு சமூகத்தின் வரலாறு, மரபுகள் மற்றும் நம்பிக்கைகளை தலைமுறையிலிருந்து தலைமுறைக்குக் கடத்துகின்றன. சடங்குகள் மூலம், தனிநபர்கள் தங்கள் சமூகத்துடன் ஒரு பிணைப்பை உணர்கிறார்கள், தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துகிறார்கள், மேலும் ஒரு பொதுவான கலாச்சாரத்தில் பங்கேற்கிறார்கள்.

மேலும், சடங்குகள் மனிதனின் உளவியல் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன. அவை நிச்சயமற்ற சூழ்நிலைகளில் ஒரு கட்டுப்பாட்டை வழங்குகின்றன, கவலை மற்றும் பயத்தை குறைக்கின்றன, மேலும் நம்பிக்கையை அதிகரிக்கின்றன. உதாரணமாக, நோய்வாய்ப்பட்டவர்கள் குணமடையச் செய்யும் சடங்குகள், அவர்களுக்கு உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் ஆறுதல் அளிக்கின்றன. அதேபோல், ஆபத்தான தொழில்களில் ஈடுபடுபவர்கள் பாதுகாப்புக்காகச் செய்யும் சடங்குகள், அவர்களுக்கு தைரியத்தையும், மன உறுதியையும் அளிக்கின்றன.

இருப்பினும், எல்லா சடங்குகளும் நன்மை பயப்பவை என்று கூற முடியாது. சில சடங்குகள் காலப்போக்கில் அர்த்தமற்றவையாக மாறக்கூடும், அல்லது தீங்கு விளைவிக்கும் நம்பிக்கைகளை ஊக்குவிக்கலாம். சாதி, மதம், பாலினம் போன்ற காரணங்களின் அடிப்படையில் பாகுபாடுகளை நியாயப்படுத்தும் சடங்குகள் சமூகத்தில் பிளவுகளை ஏற்படுத்தக்கூடும். எனவே, சடங்குகளை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்வதும், அவற்றின் விளைவுகளைப் புரிந்து கொள்வதும் அவசியம்.

முடிவாக, சடங்குகள் மனித வாழ்க்கையின் ஒரு அங்கமான, சிக்கலான மற்றும் பல பரிமாணங்களைக் கொண்ட நிகழ்வு ஆகும். அவை தனிமனித மற்றும் சமூக

வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சடங்குகளைப் பற்றிய ஒரு விரிவான புரிதல், மனித கலாச்சாரத்தைப் பற்றியும், சமூக நடத்தையைப் பற்றியும் மேலும் ஆழமாக அறிய உதவுகிறது. மேலும், சடங்குகளின் முக்கியத்துவம், அவற்றின் பரிணாம வளர்ச்சி, மற்றும் சமகால சமூகத்தில் அவற்றின் பங்கு ஆகியவற்றை ஆராய்வது, ஒரு சமூகத்தின் விழுமியங்களையும், நம்பிக்கைகளையும் புரிந்து கொள்ள ஒரு சிறந்த வழியாகும்.

பிறப்புச் சடங்கு

மண வாழ்க்கை மேற்கொள்ளும் பெண் அடையும் பேறுகளுள் மகப்பேறு சிறந்ததாகக் கருதப்படுகிறது. குழந்தை பிறப்பதற்கு முன் கருவுற்ற பெண்ணிற்கு அவளுடைய தாய் வீட்டிலும், கணவன் வீட்டிலும் பல சடங்குகள் நடைபெறுகின்றன. பிறப்புச் சடங்கினை இருநிலைகளாகப் பகுத்துக் காணலாம். அவை: 1. பேறுகாலச் சடங்குகள், 2. குழந்தைச் சடங்குகள் என்பனவாகும். பெண் கருவுற்றதிலிருந்து சடங்குகள் தொடங்கிவிடுகின்றன. குழந்தை பிறந்ததிலிருந்து வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சடங்குகள் நடைபெறுகின்றன. இத்தகைய சடங்குகள் வெறும் சம்பிரதாயங்களாக மட்டுமின்றி, குடும்ப உறவுகளை வலுப்படுத்துவதற்கும், சமூகப் பிணைப்பை மேம்படுத்துவதற்கும் உதவுகின்றன.

பேறுகாலச் சடங்குகள்

பெண் கருவுற்றவுடன், அவளை மிகுந்த கவனத்துடன் பராமரிக்கத் தொடங்குகின்றனர். அக்கால வழக்கப்படி, கருவுற்ற பெண்ணிற்கு முதல் மூன்று மாதங்கள் மிகவும் முக்கியமானவை. இந்த சமயத்தில், பெண்ணிற்கு வாந்தி, தலைசுற்றல் போன்ற உடல் உபாதைகள் ஏற்படும். ஆகையால், அவளுக்கு பிடித்தமான உணவுகளை சமைத்துக் கொடுத்து, மனதிற்கு இதமான விஷயங்களைச் செய்து, மகிழ்ச்சியாக வைத்திருக்கிறார்கள்.

வளைகாப்பு: பொதுவாக, கருவுற்ற பெண்ணிற்கு ஐந்தாம் மாதம் அல்லது ஏழாம் மாதம் வளைகாப்பு விழா நடத்துகிறார்கள். இது, தாய் மற்றும் சேய் இருவரையும் நோயிலிருந்து காக்கும் ஒரு சடங்காகக் கருதப்படுகிறது. இந்த விழாவில், கர்ப்பிணிப் பெண்ணிற்கு வளையல்கள் அணிவித்து, இனிப்பு பலகாரங்கள் கொடுத்து, பாட்டு பாடி, நடனமாடி மகிழ்வார்கள். கர்ப்பிணிப் பெண்ணிற்கு பிடித்தமான தாம்பூலம், ரவிக்கை, மற்றும் பல பரிசுப் பொருட்களும் கொடுப்பார்கள். வளைகாப்பு விழாவின் முக்கிய நோக்கமே, கர்ப்பிணிப் பெண்ணை மகிழ்ச்சியாகவும், மன அழுத்தமில்லாமலும் வைத்திருக்க வேண்டும் என்பதுதான்.

சீமந்தம்: இதுவும் வளைகாப்பு போன்ற ஒரு சடங்குதான். ஆனால், சீமந்தம் பொதுவாக கணவன் வீட்டில் நடத்துவார்கள். இந்த விழாவில், கணவன் தன் மனைவியின் நெற்றியில் குங்குமம் இட்டு, இனிப்பு கொடுத்து, ஆசீர்வதிப்பார். இது, தம்பதியர் ஒருவருக்கொருவர் தங்கள் அன்பையும், ஆதரவையும் வெளிப்படுத்தும் ஒரு வழியாகும். சீமந்த விழாவில், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டு, கர்ப்பிணிப் பெண்ணிற்கு வாழ்த்துக்களை தெரிவிப்பார்கள்.

குழந்தைச் சடங்குகள்

குழந்தை பிறந்தவுடன், பல சடங்குகள் செய்யப்படுகின்றன. குழந்தையை குளிப்பாட்டுவது, தொட்டில் போடுவது, பெயர் சூட்டுவது, அன்னப் பிரசனம் செய்வது போன்ற பல சடங்குகள் இதில் அடங்கும். ஒவ்வொரு சடங்கிற்கும் ஒரு குறிப்பிட்ட காரணம் உண்டு.

தொட்டில் போடுதல்: குழந்தை பிறந்தவுடன், தொட்டில் போடும் சடங்கு நடத்துவார்கள். தொட்டில் என்பது குழந்தையின் முதல் வீடு. தொட்டிலில் குழந்தையை படுக்க வைக்கும்போது, உறவினர்கள் மற்றும் நண்பர்கள் குழந்தைக்கு பரிசுகள் கொடுப்பார்கள்.

பெயர் சூட்டுதல்: குழந்தை பிறந்த பதினோராம் நாள் அல்லது இருபத்தியோராம் நாள் பெயர் சூட்டும் விழா நடத்துவார்கள். குழந்தையின் தாத்தா அல்லது பாட்டி குழந்தைக்கு பெயர் சூட்டுவார்கள். பெயர் சூட்டும் விழாவில், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டு குழந்தையை ஆசீர்வதிப்பார்கள்.

அன்னப் பிரசனம்: குழந்தை ஆறு மாதம் ஆனவுடன், முதன் முதலாக அன்னம் ஊட்டும் விழா நடத்துவார்கள். இந்த விழாவில், குழந்தைக்கு பால் சாதம் அல்லது பருப்பு சாதம் ஊட்டுவார்கள். அன்னப் பிரசனம் என்பது, குழந்தை திட உணவை சாப்பிடத் தொடங்கும் ஒரு முக்கியமான தருணம்.

தீண்டாரிச் சடங்கு: (ஒரு குறிப்பிட்ட சமூகத்தில்)

குடிலின் பக்கத்தில் தான் மூங்கில் கொட்டாயுடன் கூடிய ஒரு அறை மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. பிரசவமும் தீண்டாமவிலுப்பும் இந்த அறைக்குள் தான் நடைபெறும். தீண்டாரிப் பெண் ஏழு நாட்கள் இந்த அறைக்குள் தான் இருக்க வேண்டும். அடுப்படிக்குள் நுழையவோ, குடிலின் முன் வரவோ மற்றவர்களைத் தொடவோ கூடாது. அதிலும் வெளிச்சப்பாட்டின் வீட்டிலுள்ள பெண்கள் தீண்டாரிப் பெண்ணுக்கான உணவை இலையில் வைத்துக் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். அவள் உடுத்தியிருக்கும் வேட்டியின் மீது மற்றொரு துண்டைச் சுற்றிக் கொள்வான். கையில் அரிவாளுமிருக்கும். வழி நடக்கும் போது ஆண்களையோ, ஆண் குழந்தைகளையோ தீண்டி விடக் கூடாது. நான்காம் நாள் அவளது உடைகள், படுக்கை போன்ற பொருட்களை வெள்ளாவியில் வேக வைத்துத் துவைக்க வேண்டும். ஓடைக் கரையில் தனியிடமிருக்கிறது. குஞ்ஞிப் பெண்ணின் மகள் பார்வதி பூப்படைந்து விட்டாள். பார்வதி அம்மாவைக் கூப்பிட்ட குரலில் குஞ்ஞிப் பெண் பதற்றமடைந்தாள். மாதவியையும் அழைத்துக் கொண்டு ஓடிச் சென்ற போது மகளின் ஆடைகளின் இரத்த காணம் அம்மாவின் மனம் நிறைந்தது. கையில் அரிவாளை கொடுத்து வீட்டின் பின்பக்கம் உட்கார வைத்தார்கள்.

பாப்பியும் நான்கைந்து பெண்களும் வந்தனர். குஞ்ஞாதிக்கன் மூங்கில் கிச்சால் தெற்குப் புறத் திண்ணையில் ஒரு மறைவு கட்டினாள். பச்சை மஞ்சளை இடித்துப் பிழிந்து நீரை தேங்காய் எண்ணெயில் கலந்து பார்வதியின் உடலில் தேய்த்தாள் பாப்பி.

அது மாமி உரிமை பார்வதியின் அப்பாவிற்கு சகோதரி இல்லையென்பதால் அம்மாவின் சகோதரனின் மனைவிக்குத்தான் இந்த உரிமை. பெண்கள் சுற்றிலும் நின்று குரவையிட்ட போது பார்வதி தலைகுனிந்து உட்கார்ந்திருந்தாள். மாமிமார், நாத்தூன்மார், பேரன்மை, சித்தி போன்ற உறவின் முறைக்காரர்கள் நெய்யப்பம் பொரித்து திரண்ட பெண்ணுக்குக் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

சடங்கு குளிக்கும் பெண்ணுக்கு பாப்பி மாமியும் பவானி நாத்தூனும் சேர்த்து எண்ணெய் தேய்த்தார்கள். ஈஞ்சையும் குறுந்தோட்டியும் சேர்த்து தாளி பதைத்தார்கள். நாத்தூனுடன் சேர்த்து பெண் நீரில் மூழ்கியெழும் போது கரையில் நின்றிருந்த பெண்கள் குரவையிட்டார்கள். முறைப் பையனான ராகவன் வெட்கமும் தயக்கமுமாக ஒரு கல்லின் மீது நின்று பழுத்தப் பாக்கையும் வெற்றிலையையும் நீரில் போட்டுவிட்டு எங்கோ ஓடினான். ஒரு வெற்றிலையை பெண் பிடித்தெடுக்க வேண்டும்.

குடிலுக்கு வந்து புத்தாடைகள் அணிந்து ஏற்றி வைத்துக் குத்துவிளக்கைக் கும்பிட்டான். கறுத்தச் சரடில் கோர்த்த கொக்குறியை அசை அங்குல அகலத்திலான தங்கத்தாடு பாப்பி கொடுத்தாள். முகத்தைக் கைகளால் மூடி வெட்கத்துடனிருந்த பார்வதியின் கழுத்தில் கட்டினாள் பாப்பி. ராகவனுக்கு மனைவியாக வர வேண்டியவள் பார்வதி. ஒவ்வொரு சடங்கும் இப்படித்தான் நடக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் எதுவுமில்லை.

இந்தத் தீண்டாரிச் சடங்கு, சமூகத்தில் பெண்களின் நிலை மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய சடங்குகள் காலப்போக்கில் மாற வேண்டும், பெண்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

சடங்குகளின் முக்கியத்துவம்

சடங்குகள் என்பவை ஒரு சமூகத்தின் கலாச்சார அடையாளங்கள். அவை, தலைமுறை தலைமுறையாக கடத்தப்பட்டு, சமூகத்தின் ஒற்றுமையை வலுப்படுத்துகின்றன. மேலும், சடங்குகள் மனித வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களைச் சுட்டிக்காட்டி, ஒரு புதிய கட்டத்திற்கு மாறுவதற்கு உதவுகின்றன.

இருப்பினும், சடங்குகள் காலத்திற்கு ஏற்ப மாற வேண்டும். பழைய, அர்த்தமற்ற சடங்குகளை கைவிட்டு, புதிய, அர்த்தமுள்ள சடங்குகளை உருவாக்க வேண்டும். சடங்குகள் பெண்களின் உரிமைகளை மதிக்கும் விதமாக இருக்க வேண்டும், எந்தவித பாகுபாடும் காட்டக்கூடாது.

இறுதியாக, பிறப்புச் சடங்குகள் என்பவை ஒரு சமூகத்தின் கலாச்சார பாரம்பரியத்தின் ஒரு பகுதி. அவற்றை மதித்து, போற்றிப் பாதுகாக்க வேண்டும். அதே நேரத்தில், சடங்குகள் காலத்திற்கு ஏற்ப மாற வேண்டும், பெண்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

சூழல்: குழந்தை பெறுதல் முறை

குஞ்ஞிப் பெண்ணு ஏழு மாத கர்ப்பமாக இருந்தாள். ஏழாவது மாதத்தில் சில சடங்குகள் உண்டு. கணவனின் வீட்டிலிருந்தால் யாராவது மாமி, நாத்தனாரும் ஒரு கூடை

பலகாரங்களுடன் போய் அழைத்துக் கொண்டு வர வேண்டும். கொச்சு ராமனுக்கு சொந்த வீட்டில்லை. அப்பனோ அம்மையோ கிடையாது. மனைவியின் வீட்டில் தங்கியிருக்கிறான். ஆகவே அப்படியான சடங்குகளில் ஒன்று நடக்கவில்லை. அவர்களுடைய பொருளாதார நிலையும் அதற்கு ஒத்துழைக்கவில்லை. இருப்பினும், குஞ்ஞிப் பெண்ணின் மீது பாசம் கொண்ட சில உறவினர்கள், தங்களால் முடிந்த உதவிகளைச் செய்ய முன்வந்தனர்.

இட்டியாதிக்கு ஒரு முறையில் சகோதரியும் முண்டனின் மனைவியுமான சக்கி, குத்தரிசி பொங்கிய சாதத்தை வாட்டிய இலையில் நன்றாக பொதிந்துக் கட்டினாள். ஒரு சிறு இரும்புத் துண்டையும் அதே அளவில் எடையுள்ள ஒரு கல்லையும் வெவ்வேறாக மடித்துக் கட்டினாள். எடையோ அளவையோ பார்த்து எந்தப் பொதியில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள இயலாது. சகியும் மகளுமாக குஞ்ஞிப் பெண்ணைப் பார்க்க பொதியுடன் வந்தார்கள். கர்ப்பிணிப் பெண் பொதிச் சோற்றை பிரிக்க வேண்டும். லட்சணம் அறிவதற்காக அனைவரும் சுற்றி அமர்ந்திருப்பார்கள். இது வெறும் சடங்காக இல்லாமல், குஞ்ஞிப் பெண்ணுக்கு ஆதரவாகவும், அவளுடைய பயத்தைப் போக்கும் விதமாகவும் அமைந்தது.

இலையைப் பிரிக்கும் போது கட்டுச் சோறு பிளவுபட்டிருக்கும் என்றால் சகுனம் சரியில்லை என்று நம்புவார்கள். சக்கி தட்டிப் பொதிந்து வைத்திருந்த கட்டுச் சோறு உடைபட்டிருக்கவில்லை. பிறக்கப் போகும் குழந்தை ஆணா பெண்ணா என்பதைப் பார்க்க, சிறு பொதிகளில் ஒன்றைத் தொட்டு விட்டுப் பொதியைப் பிரித்துப் பார்த்தால், இரும்பு இருந்தால் குழந்தை ஆணாக இருப்பதற்கான அறிகுறி, கல்லாக இருந்தால் பெண் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையாக உள்ளது. இது ஒரு வேடிக்கையான சடங்காக இருந்தாலும், அந்தக் குடும்பத்தினர் குழந்தையின் பாலினத்தை அறியும் ஆர்வத்துடன் இதில் கலந்து கொண்டனர். இதுபோன்ற சடங்குகள், அந்தக் கலாச்சாரத்தில் குழந்தை பிறப்பைச் சுற்றியுள்ள நம்பிக்கைகளையும், எதிர்பார்ப்புகளையும் பிரதிபலிக்கின்றன.

தலைப் பிரசவத்தில் எல்லாப் பொறுப்புகளும் பெண் வீட்டாருக்குத்தான். அப்பன் சொன்னபடி குஞ்ஞாதிச்சன் மூங்கில் கொட்டாயின் பழுதுகளைத் தீர்த்தான். பாப்பி தரையில் சாணியிட்டு மெழுகினாள். அந்தக் கொட்டாயை சுத்தம் செய்து, பிரசவத்திற்கு ஏற்ற இடமாக மாற்றினார்கள். குஞ்ஞிப் பெண்ணுக்குப் பிரசவ வலி ஏற்பட்டது. பாப்பி அவளை மூங்கில் கொட்டாய்க்கு மாற்றினாள். கொச்சு ராமன் ஏற்கனவே முடிவு செய்த பச்சிலை மருந்தைப் பறிக்கச் சென்றார்கள். இட்டியாதி குல தெய்வங்களைத் தியானிப்பதில் மூழ்கினான். தாய்க்கும் குழந்தைக்கும் எந்தக் கெடுதியும் செய்துவிடக் கூடாதே என்று பிரார்த்தனை செய்தான். ஜெபித்த ஒரு நுள்ளு நெல்லும் அரிசியும் துணித்துண்டில் மடித்து கூரைக்கம்பில் கட்டினான். இது போன்ற செயல்கள், அந்தக் குடும்பத்தின் நம்பிக்கையையும், பிரார்த்தனையையும் காட்டுகிறது.

பிரசவம் பார்க்கும் அன்று பேறுகாரி முண்டிப்பாட்டி எதுவுமே சாப்பிட மாட்டாள். ஒரு பாத்திரம் கள்ளு கிடைத்தால் போதும் அதுதான் பாட்டிக்கு உணவாக அமைகின்றது.

முண்டிப்பாட்டி பல வருடங்களாக பிரசவம் பார்க்கும் அனுபவம் உள்ளவர். அவருடைய அனுபவமும் திறமையும், அந்தக் கிராமத்து மக்களுக்கு நம்பிக்கையை அளித்தது.

கொச்சானமன் மருந்தை வேகவேகமாக அரைத்துக் குழம்பாக்கினான். இலேசாகச் சூடுள்ள எண்ணெயில் அதைக் கரைத்தான். இதை கர்ப்பிணியின் உடம்பு முழுவதும் நிறைய பூசி விட வேண்டும். வெற்றிலையும் வாங்கி விட்டு மூங்கில குடிலுக்குள் நுழைந்தால் பிறகு பிரசவம் நடக்காமல் முண்டிப்பாட்டி வெளியே வரமாட்டாள். தலச்சன் பிரசவமில்லையா, வலி கொஞ்சம் அதிகமாகத்தான் இருந்தாலும் உடல் முழுவதும் எண்ணெய் புரட்டி மெல்ல நீவி விட்டான். சுத்தமாக அழக்கூடாது. பிறப்பின் அறிகுறிகளைக் கண்டதும் முண்டிப் பாட்டியின் முகம் மலர்ந்தது. இடத்த ஒரு நுள்ளு வெற்றிலையையும் பாக்கையும் வாய்க்குள் திணித்தாள். தாயும் பிள்ளையும் வெவ்வேறாகப் பிரியும் வரைக்கும் கூடவே இருப்பார்கள். முண்டிப்பாட்டியின் அனுபவமும், கொச்சானமனின் மருத்துவ அறிவும் சேர்ந்து, குஞ்ஞிப் பெண்ணுக்கு ஒரு பாதுகாப்பான பிரசவத்தை உறுதி செய்தது.

குஞ்ஞாதிச்சன் எங்கிருந்தோ ஒரு நீளமான பாளையுடன் வந்தான். குழந்தை ஆணாக இருந்தால் பேடி அடிக்க வேண்டும். பாளையைக் கவிழ்த்து முற்றத்தில் அடிக்கும்போது பெண்கள் குரவையிடுவார்கள். குஞ்ஞாதிச்சன் அடுத்த வைத்திருந்த பொமியை அவிழ்த்தான். ஒரு கண்ணிப் புகையிலை, வெற்றிலைப் பாக்கு, பேறுகாரிக்கான பணம், ஏழாம் நாள் குளித்து விட்டு கரையேறும் போதும் வயிறு நிறைய சாப்பாடு. சில நேரங்களில் வேட்டியும் கொடுப்பதுண்டு. பிறகு சோறு ஊட்டும் தான் அவளுக்கு ஏதாவது கொடுப்பார்கள். இவ்வாறு குழந்தை பெறுதல் முறை நடைபெறுகிறது. இது போன்ற சடங்குகள், அந்தக் கலாச்சாரத்தில் தலைமுறை தலைமுறையாக பின்பற்றப்பட்டு வருகிறது. இது வெறும் சடங்காக இல்லாமல், ஒரு கொண்டாட்டமாகவும், குடும்ப உறுப்பினர்களின் ஒற்றுமையையும், மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தும் விதமாகவும் அமைகிறது.

தொகுப்புரை:

மானுட இனக்குழு மக்கள் ஒருமித்து வாழும் சூழலில், அவர்களுக்குள் ஒரு நல்லிணக்கமும், விரும்பத்தக்க இசைவும் ஏற்படும்போது பண்பாடு உருவாகிறது. இவ்விசைவான வாழ்வு முறையையே பண்பாடு எனலாம். மனித சமூகத்தின் அடையாளங்களுள் முதன்மையான இடத்தைப் பெறுவது சடங்குகளே. மானுட சிந்தனை ஆற்றல் பெருகி, வாழ்க்கைத்தரம் உயரும்போது நாகரிகம் தோன்றி வளர்ச்சி பெறுகிறது. இந்த வளர்ச்சிக்கு இணையான வகையில் சடங்குகளும் பன்முகத்தன்மை அடைகின்றன. சடங்குகள் என்பவை மரபு சார்ந்தவை; அவை மனிதனுடனும், இனக்குழுக்களுடனும் பின்னிப்பிணைந்தவை. இந்த சடங்குகள் உலகின் அனைத்து சமூகங்களிலும் காணப்படுகின்றன. குறிப்பாக, இனக்குழு மக்களிடையே இது வாழ்வின் ஆதாரமாகவே கருதப்படுகிறது.

பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் கூட்டு மனசாட்சியின் வெளிப்பாடு. அது தலைமுறை தலைமுறையாக கடத்தப்படும் நம்பிக்கைகள், விழுமியங்கள், பழக்க வழக்கங்கள், கலைகள் மற்றும் அறிவுசார் மரபுகளின் தொகுப்பாகும். ஒரு சமூகம்

தனது சுற்றுச்சூழலுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறது, அதன் உறுப்பினர்களிடையே எவ்வாறு உறவுகளைப் பேணுகிறது, மற்றும் அதன் எதிர்காலத்தை எவ்வாறு வடிவமைக்கிறது என்பதைப் பண்பாடு தீர்மானிக்கிறது. சடங்குகள் இந்த பண்பாட்டு கட்டமைப்பின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்றன.

சடங்குகள் குறிப்பிட்ட நிகழ்வுகளையோ அல்லது மாற்றங்களையோ குறிக்கும் வகையில், முறையாகவும், குறியீட்டு ரீதியாகவும் நடத்தப்படும் செயல்களாகும். அவை ஒரு சமூகத்தின் நம்பிக்கைகள் மற்றும் மதிப்புகளை பிரதிபலிக்கின்றன. மேலும் அவற்றை வலுப்படுத்துகின்றன. சடங்குகள் தனிநபர்களுக்கும், சமூகத்திற்கும் ஒரு முக்கியமான அடையாளத்தை உருவாக்குகின்றன; ஒருமைப்பாட்டை ஊக்குவிக்கின்றன; மற்றும் சமூக ஒழுங்கை பராமரிக்க உதவுகின்றன. இனக்குழு சமூகங்களில், சடங்குகள் அன்றாட வாழ்க்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கின்றன. அவை பிறப்பு, இறப்பு, திருமணம், பருவமடைதல், அறுவடை மற்றும் வேட்டை போன்ற முக்கியமான வாழ்க்கை நிகழ்வுகளுடன் தொடர்புடையவை.

சடங்குகளின் பரிணாமம்:

மனித சிந்தனைத்திறன் வளர வளர, வாழ்க்கை நிலை உயர உயர நாகரிகமும் தோன்றிப் பெருகிவரும் சூழலில் சடங்குகளும் பெருகின என்பது உண்மையே. பழங்கால மனிதர்கள் இயற்கையின் சக்திகளைப் புரிந்து கொள்ளவும். அவற்றைக் கட்டுப்படுத்தவும் முயன்றபோது, சடங்குகள் ஒரு கருவியாக உதவின. சூரியன், மழை, மற்றும் பிற இயற்கை நிகழ்வுகள் மனித வாழ்க்கையை நேரடியாகப் பாதித்தன. எனவே அவற்றைச் சாந்தப்படுத்தவும், அவற்றின் தயவைப் பெறவும் சடங்குகள் உருவாக்கப்பட்டன. உதாரணமாக, மழை வேண்டி யாகங்கள் செய்தல், சூரியனை வணங்குதல் போன்ற சடங்குகள் இயற்கையின் மீதான மனிதனின் நம்பிக்கையையும், அச்சத்தையும் வெளிப்படுத்துகின்றன.

காலப்போக்கில், சடங்குகள் மேலும் சிக்கலானவையாகவும், விரிவானவையாகவும் மாறின. அவை மத நம்பிக்கைகள், சமூக கட்டமைப்புகள், மற்றும் அரசியல் அதிகாரத்தின் வெளிப்பாடுகளாகவும் செயல்பட்டன. அரசர்கள் முடிசூட்டிக் கொள்ளும் சடங்குகள், போர் தொடங்கும் சடங்குகள், மற்றும் சமூக விழாக்களின்போது நடத்தப்படும் சடங்குகள் ஆகியவை அதிகாரத்தையும், சமூக ஒழுங்கையும் நிலைநிறுத்தும் கருவிகளாக பயன்படுத்தப்பட்டன.

இனக்குழுக்களும் சடங்குகளும்:

இனக்குழு மக்களிடம் சடங்குகள் வாழ்வாதாரமாகவே காணப்படுகின்றன. அவர்களின் வாழ்க்கை முறை இயற்கையோடு இணைந்திருப்பதால், சடங்குகள் அவர்களின் அன்றாட நடவடிக்கைகளிலும், நம்பிக்கைகளிலும் ஆழமாக ஊடுருவி உள்ளன. வேட்டைக்குச் செல்வதற்கு முன்பு விலங்குகளின் ஆவிகளை சாந்தப்படுத்தும் சடங்குகள், அறுவடைக்கு முன்பு நிலத்திற்கு நன்றி செலுத்தும் சடங்குகள், மற்றும் நோய்களைக் குணப்படுத்த உதவும் சடங்குகள் இனக்குழு மக்களின் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

சடங்குகள் இனக்குழு சமூகங்களில் ஒருமைப்பாட்டை வலுப்படுத்துகின்றன. சடங்குகளில் பங்கேற்பதன் மூலம், தனிநபர்கள் தங்கள் சமூகத்துடன் ஒரு வலுவான பிணைப்பை உணர்கிறார்கள். மேலும், சடங்குகள் சமூக விழுமியங்களையும், மரபுகளையும் அடுத்த தலைமுறைக்கு கடத்துகின்றன. இதன் மூலம் இனக்குழுவின் தனித்துவம் பாதுகாக்கப்படுகின்றது.

சான்றெண் விளக்கம்:

1. ச.வே.சுப்ரமணியன் (ப.ஆ), சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப.524. - சங்க இலக்கியத்தில் சடங்குகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலப்பகுதிகளில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகள், அவர்கள் பின்பற்றிய சடங்குகள் பற்றிய தகவல்களை சங்க இலக்கியம் வழங்குகிறது.

2. தமிழ் லெக்சிகன், ப.115 - பண்பாடு மற்றும் சடங்கு குறித்த வரையறைகளைத் தமிழ் லெக்சிகன் வழங்குகிறது.

3. நாராயணன், சின்ன அரயத்தி, ப.45. - சின்ன அரயத்தி நாவலில், அரயத்தி இன மக்களின் சடங்குகள் பற்றிய விவரணைகள் உள்ளன.

4. நாராயணன், சின்ன அரயத்தி, ப.56. - அரயத்தி இன மக்களின் வாழ்க்கை முறையில் சடங்குகளின் முக்கியத்துவம் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது.

5. நாராயணன், சின்ன அரயத்தி, ப.62. - அரயத்தி இன மக்கள் பின்பற்றும் குறிப்பிட்ட சடங்குகள் பற்றிய கூடுதல் தகவல்கள் இந்நூலில் உள்ளன.

முடிவுரை:

பண்பாடும், சடங்குகளும் ஒரு சமூகத்தின் அடையாளத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சடங்குகள் மரபு சார்ந்தவை. மனிதனோடும், இனக்குழுவோடும் தொடர்புடையவை. இனக்குழு சமூகங்களில் சடங்குகள் அவர்களின் வாழ்வாதாரமாகவும், சமூக ஒருமைப்பாட்டின் அடையாளமாகவும் திகழ்கின்றன. நவீன உலகில் பல மாற்றங்கள் நிகழ்ந்தாலும், இனக்குழு மக்கள் தங்கள் மரபுவழி சடங்குகளைப் பாதுகாத்து வருகின்றனர். இது அவர்களின் பண்பாட்டு விழுமியங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. இருப்பினும், நவீனமயமாக்கல், சுற்றுச்சூழல் சீர்கேடு, மற்றும் பிற காரணங்களால் இனக்குழுக்கள் தங்கள் பாரம்பரிய வாழ்க்கையை இழந்து வருகின்றனர். எனவே, அவர்களின் பண்பாட்டையும், சடங்குகளையும் பாதுகாப்பது நமது கடமையாகும்.

பார்வை நூல்கள்:

1. நாராயணன், குளச்சல் மு.யூசப் - சின்ன அரயத்தி, காலச்சுவடு பதிப்பகம், கே.பி.சாலை, நாகர்கோவில். டிசம்பர் - 2010

2. அல்போன்சா. எஸ். - மலைவேடர்களின் நம்பிக்கைகள், பதிப்புத்துறை, மதுரைகாமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1985.

3. அறவாணன், க.ப. - தமிழ் மக்கள் வரலாறு, தமிழ்க்கோட்டம், சென்னை, 2005.
4. அறிவுடை நம்பி, சே.க. - பண்டைய தமிழரும் இன்றைய, செந்தமிழ்ப் பதிப்பகம், மேட்டுவலசு, 2001.

References:

1. Narayanan, Kulachal M. Yusuf - Chinna Arayathi, Kalachuvadu Publishing House, K.P. Road, Nagercoil. December - 2010
2. Alphonsa. S. - Beliefs of Mountaineers, Publishing House, Madurai Kamarajar University, Madurai, 1985.
3. Aravanan, K.P. - Tamil People's History, Tamilkottam, Chennai, 2005.
4. Arivudai Nambi, S.K. - Ancient Tamils and Today, Senthamil Publishing House, Mettuvalasu, 2001.

Agaththil Aram

Dr. V. Jayapunithavalli
M.A,(NET,JRF) Ph.D.,
eMail: Punithamj15@yahoo.com

Received 30/04/2025
Accepted for publication 30/04/2025
Published 01/05/2025

Abstract

Sangam literature divides the lives of the people of the Sangam period into two categories: internal life and external life. Sangam literature divides stories about domestic life into internal life and stories about gifts, war, heroism, and rule into external life. Among these, internal life is when a man and a woman fall in love and enjoy each other. Thus, the feelings they experience between themselves, i.e., internal, are called internal by ancient Tamil literature. The oldest Tamil grammar book available to us today, Tolkappiyam, explains internal and external life in detail in its content. In Sangam literature, internal life is a literary genre that expresses the love between a hero and a heroine. It is called manalathu, and it focuses on pleasure in domestic life.

Keywords*: Sangam Literature, Agathil Aram*

அகத்தில் அறம்

டாக்டர் வி.ஜெயபுனிதவல்லி

கட்டுரைச் சுருக்கம்:

அக இலக்கியம் என்பது, ஒரு தலைவன், தலைவி இருவரிடையே ஏற்படும் காதல், காமம், இன்பம் போன்ற அகத்தே நிகழும் உணர்வுகளைப் பற்றியும், அவற்றின் வெளிப்பாடுகளையும் விவரிக்கும் இலக்கியங்களாகும்.ஆணுக்கும் ஒருபெண்ணுக்கும் இடையில் ஏற்படும் காதல் உணர்ச்சியைப் பற்றிக்கூறுவதாகும் களவு ஒழுக்கம் என்பது தலைவனும் தலைவியும் பெற்றோர் அறியாமல் தாமே எதிர்ப்பாராமல் சந்தித்துக் கூடுவது. இக்களவு பிறரின் பொருள்களை அவர்கள் அறியாமலேயே கவர்ந்து கொள்ளும் களவு போலத் தீயது அன்று. அத்தலைமக்கள் பின்பு மணம் செய்துகொண்டு மனையறம் காக்கும் கடமை உள்ளதால் இவையும் அறமாகவே கருதப்படுகிறது.

திறவுச்சொற்கள்: *அக இலக்கியம், காதல், காமம், இன்பம்*

முன்னுரை

சங்ககால மக்களின் வாழ்க்கை நிலை இரண்டு பிரிவுகளாக இருந்துள்ளதைச் சங்க இலக்கியங்கள் வழி அறியலாம். இல்லற வாழ்க்கை பற்றிய செய்திகளை அகம் என்றும், கொடை, போர், வீரம், ஆட்சி, முதலியவற்றைப் பற்றிய செய்திகளைப் புறம் என்றும் சங்க இலக்கியங்கள் பிரித்துக் காட்டுகின்றன.

பழந்தமிழ் இலக்கியங்கள் மக்களின் அகவாழ்க்கை பற்றி மிகவும் விரிவாகப் பேசுகின்றன. தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் இலக்கியங்களில் அகப்பொருளைக் கையாள்வது பற்றிய இலக்கணங்களை வகுப்பதுடன், அக்காலத்தின் அக வாழ்வின் பல்வேறு அம்சங்கள் பற்றியும் எடுத்துரைக்கின்றது.

ஐந்திணை

அகத்திணையின் உட்பிரிவுகளாகிய ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை என்னும் மூன்றனுள் கைக்கிளை நிகழா ஒழுக்கம், விளையாக் காமம் என்னும் ஒரு துறையளவில், காட்சியளவில் தோன்றும்போதே முடிவடைந்து விடுகிறது. பெருந்திணையாவது கழிபேரொழுக்கம், மிகுதி காட்டும் ஏறிய மடற்றிறம், இளமை தீர்திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், மிக்க காமத்து மிடல் என்ற துறைகளில் அமைகிறது. ஐந்திணையாவது இயல்பொழுக்கம். அகத்திணையின் அடிப்படையான அன்பின் பண்பினை விரிவாகவும், விளக்கமாகவும் அறிதற்கு ஐந்திணையே உறுதுணையாக அமைகிறது. ஐந்திணையின் துறைகள் எண்ணற்றவையாக விளங்குகின்றன.

ஒல்காப் புகழ்பெற்ற தொல்காப்பியர் பண்டைய இலக்கியங்களின் வழிநின்று காதலால் கலப்புற்று மணம் செய்து மாண்புடன் வாழ்ந்த தமிழ் மக்களின் பெருநிலையினைக் கண்டார். மேலும் நூல்களை அமைக்கும் பொருட்டு குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற ஒழுக்கம் நிகழுமிடம் என ஐந்தாகப் பகுத்தார். அவ்வொழுக்கத்தைப் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐந்தாகக் கண்டார்.

தலைவன், தலைவி, தோழி, செவிலி, பார்ப்பார். பாங்கன், நற்றாய், தந்தை, அன்னை, அறவோர், கண்டோர், இளையர், வாயில், கூற்று, கேட்போர் என அத்துறைகளின் படியும் மக்களைப் பலபடியாகத் தொகுத்தார். புலநெறி வழக்குப்படி இலக்கணத்திற்கு இலக்கியமாகவும், இலக்கியத்திற்கு இலக்கணமாகவும் இவை இன்றளவும் அமைகின்றது.**அன்பின் ஐந்திணை ஒழுகலாற்றில் புலவர் நிலையில் நின்று பேசுபவர்களாக, அறிவு நிரம்பிய தோழியே உள்ளாள் என்று சுருக்கமாகக் கூறிவிடலாம்** (பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள், ப.252.)என்பர்.
அகப்பாடல் உயிர்களின் பிறப்பிற்கும், பிறப்பதற்கும் அடிப்படை இன்பவுணர்வை உலகின் மருங்கு மறாது வழிமுறை காக்கும் காமத்துடிப்பைப் பொருளாகக் கொண்ட தன்மையுடையது என அறியத்தகும் (வ.சுப.மாணிக்கம், தமிழ் காதல், ப.1.)
என்பர் .

அக இலக்கியம்

அகத்திணைப் பாடல்கள், சுட்டி ஒருவர் பெயர் கொள்ளாமல் தலைவன், தலைவி, தோழி எனப் பொதுப்படவே அமைகின்றன.

மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்,

சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறா அர் (தொல். புறத். 57)

என்பது தொல்காப்பிய நூற்பா.

ஐந்திணை காதல் ஒழுக்கங்கள் அனைத்து மக்களுக்கும் பொது ஆகும். ஆதலினால் அவற்றைத் தழுவி ஒருவர் பெயர் சுட்டிப் புலவர்கள் பாடார் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

பெயர் சுட்டிக் கூறா மரபு ஏன் இவ்வக இலக்கியங்களில் போற்றப்பட்டது என்பதைக் காணும் போது இவ்வகப் பாடல்களின் மாண்பை அறியலாம்.

நாட்டுப்புறப் பாடல்களும் அக இலக்கியங்களும்

வாய்மொழி இலக்கியப் பண்பைச் சங்க இலக்கியப் பாடல்கள் பெற்றுள்ளன. தமிழண்ணல், **நாட்டுப் பாடல்களில் தான், காதற்பாட்டுக்களில் பெயரின்றி அமையும் மரபுண்டு. மனித வாழ்வின் அடிமனப் பண்புகளையெல்லாம் கண்டு கூறும் இப்பாடல்கள் மனித இனப் பொதுமையுடையனவாக மதிக்கப்படுகின்றன. மக்கள் அனைவருக்கும் பொதுவுரிமை உடைமையால் இது தனித்தவர் பெயர் சுட்டப்பெறாது. உலகில் வாய்மொழிப் பாடலின் இவ்வடிப்படைப் பண்பை அப்படியே பெற்று வளர்ந்த பேரிலக்கியம் தமிழிலுள்ள அகத்திணை இலக்கியமாகும்**

தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, ப.188. என்று குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு வாழ்வு நிலையுடைய மக்கள் குறிப்பிட்ட ஒரு காதல் நிலையில் எவ்வாறெல்லாம் நினைப்பர், சொல்லுவர், செய்வர் என்ற உணர்வுத் திறங்களை அகத்திணை சுட்டி உரைக்கிறது.

நல்ல கவிஞன் மடைமாற்றம் பெற்று, போட்டிகளில் புதைந்து போய்விடக்கூடாது என்று கருதிய முன்னைய தமிழறிஞர் திட்டமிட்டு வைத்த சட்டமே, அகப்பாடல்களில் பெயர் புனையக்கூடாது என்பது ஆகும்.

அகநானூறு குறிப்பிடும் களவு ஒழுக்கம்

பெண்களுக்கு மதிப்பளித்தலும் பெண்ணின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தலும் பண்டைய அக இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. மணப்பருவம் எய்திய தலைவன், தலைவி தாமாகவே கூடும் கூட்டத்தினை களவு என்பர். தலைவன், தலைவி ஒழுக்கத்திலும் பண்பாடு தெரிகிறது. பண்பாட்டில் அக்கறையுடையவளாகத் தலைவியும், தோழியும் விளங்குகின்றனர். தலைவன் தலைவியைத் தினைப்புனத்தின் கண்ணே கண்டதும் காதல் கொள்கிறான். அவனுடைய அரவணைப்பைத் தலைவி விரும்பினாலும் தன் விருப்பத்தை முதலிலேயே தலைவனிடம் தெரிவித்து விடக்கூடாது என்பதற்காகத் தலைவனிடம் கடும்சொற்கள் கூறி அவனைவிட்டு விலகி நிற்கும் மாண்பை,

சூர மகளிரின் நின்ற நீ மற்று

யாரையோ? எம் அணங்கியோய்! உண்கு' எனச்

சிறுபுறம் கவையினனாக, அதற்கொண்டு

இகு பெயல் மண்ணின் ஞெகிழ்பு, அஞர் உற்ற என்

உள் அவன் அறிதல் அஞ்சி, உள் இல்

கடிய கூற, கை பிணி விடாஅ (அகம். 32:7-12)

என்ற பாடல் விளக்குகிறது.

தலைவனின் அன்பின் மிகுதி

களவு ஒழுக்கத்தின், பின்னர் தலைவியிடத்து உள்ள அன்பினால் அவளைப் பிரிய மனமில்லாது வருந்தும் தலைவனையும் காணமுடிகிறது என்பதை,

நெஞ்சு நடுங்கு அரும்படர் தீர வந்து,

குன்றுழை நண்ணிய சீறூர் ஆங்கண்

……………………………….

சேய ஆயினும், நடுங்குதுயர் தருமே (அகம். 152:1-24)

என்ற பாடல் தலைவனின் மனவருத்தத்தை வெளிப்படுத்தும் நிலையில் அமைந்துள்ளதை அறியலாம்.

அறத்தொடு நிற்கும் பண்பு

தமிழர் அகவாழ்வின் உயர்ந்த பண்பாக அறத்தொடு நிற்றல் திகழ்கிறது. நடந்ததை நடந்தவண்ணம் தலைவி, தோழி ஆகியோர் உள்ளமையை உண்மையாக எடுத்துக்கூறும் முறையே அறத்தொடு நிற்றலாகும். ஆகவே மன உணர்வின் உண்மை வெளிப்பாடாகத் திகழ்வது அறத்தொடு நிற்றலாகும்.

அறத்தொடு நிற்றலாவது, தலைவன், தலைவியரிடையே தோன்றிய களவொழுக்கம் பிழையாது, அக்களவினைத் தலைவி தோழியிடம், தோழி செவிலியிடமும், செவிலி நற்றாயிடமும், நற்றாய் தந்தையிடமும் முறையாக வெளிப்படுத்துவதாகும்.

களவு கற்பாக மாற வேண்டியது அறமாதலின், அதனை உரியவரிடம் உரிய நேரத்தில் உரிய வகையில் வெளிப்படுத்தும் செயல் அறத்தொடு நிற்றல் எனப்பட்டது. களவு ஒழுக்கமான காதல் ஒழுக்கத்தை முறையே வெளிப்படுத்துவது அறத்தொடு நிற்றலாகும்.

அறம் எனப்படுவது பல பண்புகளையும் தழுவிய பொதுச் சொல்லாயினும், ஈண்டு பெண்ணுக்கு உரிய முதற்பண்பான கற்பையே குறிக்கும். கற்பென்னும் கடைப்பிடிப்பில் நின்று களவொழுக்கத்தைப் பெற்றோருக்கு வெளிப்படுத்தல் என்பது இத்துறையின் பொருள். பெற்றோருக்கு அறிவித்தல் தோழியின் நோக்கம் இல்லை. அவ்வெண்ணம் அறிவிப்பது தலைவி கற்பு நெறிப்பட்டு விட்டாள் என்பதனை, முதன்மையாக வலியுறுத்துவதே அவள் நோக்கம்

(வ.சுப. மாணிக்கம், தமிழ் காதல், ப.68.) **என்பர்**.

அறத்தொடு நிற்றலில் சிறப்பான பண்பாட்டைச் சங்க இலக்கியம் நெறிப்படுத்திக் காட்டுகின்றது. களவொழுக்கத்தில் தலைவனின் மேல் விருப்பம் தோன்றிய தலைவிதான் அறத்தொடு நிற்றலைத் தொடங்கி வைக்கக் கூடியவள். தன் உயிரினும் மேலான தோழிக்குத் தலைவியும், தன்னைப் பெற்ற தாயாகிய செவிலிக்குத் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்த

நற்றாய்க்குச் செவிலியும், தன் இல்லத் தலைவனாகிய தந்தைக்கு நற்றாயும் அறத்தொடு நிற்க வேண்டுமென்பது சங்க இலக்கியம் காட்டும் மரபாகும்.

களவு ஒழுக்கத்தில் ஒழுகும் தலைவியின் அக வாழ்வை கற்பொழுக்கமாக மாற்றி, சமுதாயத்தில் அவளுக்கு நன்மதிப்பைப் பெற்றுத் தருவதில் தோழி மிகுந்த அக்கறையுடையவளாகச் செயல்படுகிறாள். அதனாலேயே தலைவியின் உடல் மெலிவு கண்டு தாய் வினவியதும், தலைவியொருத்தி தோழியிடம் அறத்தோடு நிற்கிறாள்.

மலர் தார் மார்பன், நின்றோற் கண்டோர்

பலர் தில், வாழி, - தோழி! - அவருள்,

ஆர் இருட் கங்குல் அணையொடு பொருந்தி,

ஓர் யான் ஆகுவது எவன் கொல்

நீர் வார் கண்ணொடு, நெகிழ் தோளேனே? (அகம். 82:14-18)

தோழி அறத்தொடு நிற்றல்

நாணமும் கற்பும் மகளிர் காக்கத் தகும் இரு பேரொழுக்கங்கள். ஆனால் நாணத்தை விட்டேனும் கற்பைத் தலையாகப் போற்றியொழுக வேண்டும் என்பது தமிழர் கண்ட மனையியல் கோட்பாடு. அக இலக்கியத்தில் தோழி எல்லையற்ற உரிமையுடையவள். தலைவியின் உரிமையையும் செயலையும் தன் உரிமையாகக் கொள்ளும் உறவுடையவள், எனினும் தலைவியின் விருப்பமின்றி அறத்தொடு நிற்கும் உரிமை மட்டும் தோழிக்கு இல்லை. இதனை,

அறத்தொடு நிற்கும் காலத் தன்றி

அறத்தியல் மரபிலர் தோழி (தொல். கற். 45.)
என்று தொல்காப்பியர் சுட்டுகிறார்.

வரைவு கடாதல்

சங்க கால மக்கள் இல்லற வாழ்க்கையையே பெரிதும் பாராட்டி வந்தனர். ஒருவனும், ஒருத்தியும் இணைந்து வாழ்வாங்கு வாழ்வாராயின் அவர்களுக்கு வீடுபேறு தானாக வந்தெய்தும் என்பது தமிழரின் கொள்கையாக இருந்தது. அக்காரணத்தினாலேயே அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலையே தமிழரின் பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டாகக் கொள்வது மரபு.

களவு ஒழுக்கமானது இரண்டு மாத காலத்துக்கு மேல் நீடிக்கக் கூடாது என்பது மரபு (இரா. ஜெகதீசன் (ப.ஆ.), அகநானூறு ஆய்வுக்கோவை, ப.1428.)
அதனாலேயே தோழியும் தலைவியின் மேல் அக்கறை கொண்டு பண்பாட்டிற்கேற்பத் தலைவியின் களவு ஒழுக்கத்தைக் கற்பொழுக்கமாக மாற்ற முற்படுகிறாள்.

தோழியொருத்தி தலைவனிடம் தலைவியின் களவு ஒழுக்கம் பலருக்குத் தெரியும் முன்பே, விரைவில் அவளை மணந்துகொள் என்று கூறுகிறாள் என்பதனை,

என் ஆம்கொல்லோ - தோழி - மயங்கிய

மையற் பெண்டிர்க்கு நொவ்வல் ஆக

ஆடிய பின்னும், வாடிய மேனி

பண்டையின் சிறாவதுஆயின், இம்மறை

அலர் ஆகாமையோ அரிதே, அஃதான்று (அகம். 98:21-25)

என்ற பாடல் உணர்த்துகின்றது. இப்பாடலில், அடிப்படையாக வேலன் வெறியாட்டு நிகழ்ந்தபின் இக்களவொழுக்கம் பலரும் தூற்றும் வண்ணம் இருந்துவிடக்கூடாது என்ற பண்பாட்டு உணர்வுடன் தோழி அடையும்; கவலையையும் புலனாகின்றது.

கற்பின் மாண்பு

பெண் தன் உயிரைக் காட்டிலும் நாணத்தைப் போற்ற வேண்டும். அந்நாணத்தை விட கற்பு சிறந்தது எனப் போற்ற வேண்டும். கற்பைப் பேணுவதற்கு உயிர், நாணம் இவற்றை விடவேண்டி இருந்தால் தயங்குதல் கூடாது என்பதனை,

உயிரினும் சிறந்தன்று நாணே! நாணிலும்

செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று எனத்

தொல் லோர் கிளவி (தொல். கள. 23.)

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் கற்பின் திறத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

முடிவுரை

தலைவனும், தலைவியும் கூடி வாழும் வாழ்க்கை அகத்திணை என்றும், ஐந்திணை என்றும், களவு நெறியென்றும், கற்பு நெறியென்றும் தொகுத்தும் வகுத்தும் சான்றோர்கள் கூறியுள்ளனர். அதன் அடிப்படையில் தமிழர் உலகின் எம்மொழியிலும் எந்நாட்டிலும் இல்லாத போற்றத்தக்க வளமையான வாழ்வியல் முறைகளையும், வாழ்ந்த நிலத்துடன் நெறிப்படுத்தி இரண்டையும் ஒருங்கிணைத்துக் கடைப்பிடித்தனர்.

குறிப்பு (REFERENCE)

1.**தமிழர் பண்பாடு** , கந்தையாபிள்ளை. ந.சி. சைவசித்தாந்த கழகம், சென்னை –18,

2.**அகநானூற்றுக் காட்சிகள் ,** தமிழண்ணல் பரமேஸ்வரி கிராபிக்ஸ், சென்னை.

KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN ***2456-5148*** *(Online)*
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

Themes in Vairamuthu's Short Stories

K. Mohanalakshmi,
Ph.D. Research Scholar (Reg. No: CRE/TAM22PNOV288/2022), Karuppanna Mariyappan College, Muthur, Tirupur District, Tamil Nadu 638105
Email: lakshmimohana2011@gmail.com

Received 25/04/2025
Accepted for publication 30/04/2025
Published 01/05/2025

Abstract

Literary works serve as invaluable mirrors to the past and present, faithfully reflecting the prevailing emotions, anxieties, and aspirations of the people, as well as the significant social, political, and cultural shifts that shape their world. Literary writers, acting as keen observers and interpreters of their times, portray the environment they inhabit and the pressing problems occurring within their society through the unique lens of their individual artistic styles. This depiction of the lived experience and its attendant challenges inherently forms the core theme and underlying message conveyed in their creative endeavors. Vairamuthu, a multifaceted personality in the Tamil literary field, distinguished as a renowned poet, accomplished novelist, celebrated film lyricist, and insightful essayist, has enriched the literary landscape with his diverse talents. His short stories, often overlooked amidst his other achievements, powerfully demonstrate that he possesses a rare and captivating flair for crafting compelling narratives within the concise and impactful format of the short story. This article aims to delve into the thematic depths of Vairamuthu's short stories, analyzing the recurring motifs, underlying social commentary, and profound observations about human nature that permeate his collection of short-form fiction. By examining these themes, we hope to gain a deeper understanding of Vairamuthu's literary vision and his contribution to the rich tapestry of Tamil literature.

Keywords: *Short Stories, Vairamuthu, Tamil Literature, Social Life*

வைரமுத்து சிறுகதைகளில் கதைக்கரு

கு. மோகன லட்சுமி
முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர் (Reg. No: CRE/TAM22PNOV288/2022), கருப்பண்ண மாரியப்பன் கல்லூரி, முத்தூர். திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு 638105

கட்டுரைச் சுருக்கம்:

இலக்கியங்கள் மக்களின் மன உணர்வுகளையும், சமுதாய மாற்றங்களையும் வெளிப்படுத்தும் காலக்கண்ணாடிகள். இலக்கியப் படைப்பாளர்கள் தான் வாழும் சூழல் மற்றும் சமூகத்தில் நடக்கும் பிரச்சனைகளை தனக்கே உரிய பாணியில் தனது படைப்புகளில் வெளிப்படுத்துகின்றனர். அதுவே அவர்களது படைப்புகளில் கருவாக அமைகின்றது. இலக்கியத்துறையில் கவிஞர், நாவலாசிரியர், திரைப்படப் பாடலாசிரியர் , கட்டுரையாளர் என்னும் பன்முகத்தன்மை கொண்டவர் வைரமுத்து. அவர் சிறுகதை படைப்பதிலும் திறமை

மிக்கவர் என்பதை புலப்படுத்துவதாக அவரது சிறுகதைகள் அமைகின்றன. அச்சிறுகதைகளின் கதைக்கருவை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது..

திறவுச் சொற்கள்: *பெருங்குடிப் பண்பாடு, பரவலான பண்பாடு (popular culture), தோற்கருவிகள், மிருதங்கம், செண்டை, பறை*

முன்னுரை:

உரைநடையின் வளர்ச்சியும், புதினங்கள் மற்றும் சிறுகதைகளின் தோற்றமும் சமுதாயத்தை மையப்படுத்தியதாக அமைக்கப்பட்டன. சிறுகதையானது குதிரை ஓட்டம் போல் அமைவதாயினும் அதன் கதைக்கருவும் அந்த அளவிற்கு முக்கியத்துவம் பெறுகிறது. “கருவானது கதையின் முழுப்பொருளாகும்”1 என்கின்றார் தா.ஏ.ஞானமூர்த்தி. கதைக்கான கருவை சரியாகத்தேர்வு செய்தால்தான் சிறுகதையின் அமைப்பும், பொருள் நோக்கும் சரியாக அமையும். இத்தகைய சிறப்புமிக்க கதைக்கருவை படைப்பாளர் வைரமுத்து யதார்த்தமான வாழ்வியல் கண்ணோட்டத்தில் படைத்துள்ளார். வைரமுத்து சிறுகதைகள் அவரின் கதைக்கரு உருவாக்கத்திற்கான நுட்பத்தை புலப்படுத்தக் கூடியதாக அமைகின்றது.

கவிப்பேரரசர் வைரமுத்துவின் சிறுகதைகள்: வாழ்வியல் ஆவணம்

கவிதை உலகில் முடிசூடா மன்னராகத் திகழும் கவிப்பேரரசர் வைரமுத்து, தனது படைப்புத் திறனை சிறுகதை வடிவிலும் வெளிப்படுத்தி, வாசகர்களின் மனங்களில் நீங்கா இடம் பிடித்தவர். அவரது சிறுகதைகள் வெறும் கதை சொல்லும் தளத்தைக் கடந்து, ஆழமான வாழ்வியல் உண்மைகளையும் மனித மனங்களின் சிக்கல்களையும் படம்பிடிக்கும் கண்ணாடியாக விளங்குகின்றன. நீங்கள் குறிப்பிட்டது போல, கதைக்கரு, கதைப் பின்னல், கையாளும் உத்திகள் எனப் பல்வேறு களங்களில் வைரமுத்துவின் சிறுகதைகள் தனித்தன்மை உடையனவாக மிளிர்கின்றன.

வைரமுத்துவின் சிறுகதைகளின் அடிப்படைக் கரு, எதார்த்தமான வாழ்வின் பிரதிபலிப்புதான். இயல்பான வாழ்வியல் கண்ணோட்டத்தை தனது கதைகளில் அவர் தத்ரூபமாகப் பதிவு செய்கிறார். மனிதர்களின் அன்றாடப் போராட்டங்கள், எதிர்பாராத திருப்பங்கள், இன்பங்கள், துன்பங்கள் என வாழ்வின் அத்தனை வண்ணங்களையும் அவரது கதைகளில் காணலாம். இது வாசகர்கள் தங்களை அல்லது தங்களைச் சுற்றியுள்ளோரை அக்கதைகளில் உருவகித்துக்கொள்ள வழிவகுக்கிறது.

குறிப்பாக, குடும்ப உறவுகளே அவரது பல சிறுகதைகளின் மையப்புள்ளியாக அமைகின்றன. கணவன்-மனைவி உறவுக்குள் இருக்கும் அன்பு, அர்ப்பணிப்பு, அதே சமயம் சின்னச் சின்ன

ஈகோக்களால் ஏற்படும் விரிசல்கள்; பெற்றோர்-பிள்ளைகளுக்கிடையேயான பாசம், தலைமுறை இடைவெளியால் வரும் கருத்து வேறுபாடுகள்; அண்ணன்-தங்கை, அண்ணன்-தம்பி உறவுக்குள் இருக்கும் விட்டுக் கொடுத்தல், தியாகம் எனப் பல்வேறு குடும்ப உறவுகளின் சிக்கலான மற்றும் அழகான பரிமாணங்களை மிக நுட்பமாகச் சித்தரிக்கிறார். இவை வெறும் பிரச்சனைகளாக இல்லாமல், அந்த உறவுகளுக்குள் புதைந்துள்ள ஆழமான அன்பையும், புரிதலையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. உறவுகளுக்குள் ஏற்படும் சிக்கல்களையும், மனக்கசப்புகளையும் தத்ரூபமாக வெளிப்படுத்துவதோடு, அவற்றை மனிதர்கள் எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் அல்லது எதிர்கொள்ள வேண்டும் என்ற பார்வையையும் அவர் முன்வைக்கிறார்.

குடும்பம் என்ற சிறிய வட்டத்தைத் தாண்டி, சக மனிதர்களுக்கிடையேயான உறவு நிலை, நட்பு, பிரிவு, ஏமாற்றம், நம்பிக்கை போன்ற உணர்வுகளையும் தனது கதைகளில் கொண்டு வருகிறார். மனிதர்களுக்குள் இருக்கும் நல்ல மனப்பான்மை, குறிப்பாக விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையின் அவசியம், புரிதலின் முக்கியத்துவம் போன்ற தார்மீக விழுமியங்களையும் கதைகளின் ஊடாக வலியுறுத்துகிறார். தற்போதைய வேகமான உலகில், மனித உறவுகளில் பணம் மற்றும் சமூக அந்தஸ்து ஏற்படுத்தும் தாக்கத்தையும், இதனால் உறவுகளில் ஏற்படும் பந்தப் பிணைப்புகளின் தளர்வையும் அவரது கதைகள் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

இன்றைய சமூகச் சூழலின் தாக்கமும் அவரது கதைகளில் வலுவாகப் பதிந்துள்ளது. நகரமயமாதல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சமூக மாற்றங்கள், கலாச்சாரப் பரிமாற்றங்கள் ஆகியவை மனித வாழ்விலும், உறவுகளிலும் ஏற்படுத்தும் சவால்களை அவர் தனது படைப்புகளில் பிரதிபலிக்கிறார். காலத்திற்கேற்ற நவீன பிரச்சனைகளையும், அவற்றால் பாதிக்கப்படும் அல்லது பழகிக்கொள்ளும் மனிதர்களின் மனநிலையையும் அவர் விவரிக்கிறார். இந்தப் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து, அதில் இருந்து மீண்டு வரும் மனிதர்களின் மனவலிமையையும், சில சமயங்களில் தோல்விகளையும் அவர் யதார்த்தமாகப் பதிவு செய்கிறார்.

ஒரு கவிஞராக இருந்து சிறுகதை எழுத்தாளராக மாறியவர் என்பதால், வைரமுத்துவின் மொழிநடை தனித்துவமான அழகியல் கொண்டது. கவிதையின் மென்மையும் வீரியமும் அவரது உரைநடையில் இழையோடுகின்றன. எளிய சொற்கள் மூலமும், அழகான உவமைகள் மற்றும் உருவகங்கள் மூலமும் காட்சிகளையும், கதாபாத்திரங்களின் உணர்வுகளையும் கண்முன்னே நிறுத்துகிறார். அவரது வர்ணனைகள் வாசகர்களின் மனதில் ஆழமாகப் பதிகின்றன. கதாபாத்திரங்களின் மனவோட்டங்களைச் சித்தரிக்க அவர் கையாளும் உளவியல் நுட்பங்களும், யதார்த்தமான மற்றும் கூர்மையான உரையாடல்களும் கதைக்கு மேலும் வலு சேர்க்கின்றன. கதைப் பின்னலில் எதிர்பாராத திருப்பங்களை வைப்பதும், வாசகனைச்

சிந்திக்க வைக்கும் வகையில் மௌனமான கேள்விகளோடு கதையை முடிப்பதும் அவரது சிறப்பான உத்திகளில் சில.

தூரத்து உறவு

நவீன மயமான இவ்வுலகில் பெற்ற பிள்ளை தன் தாய், தந்தையை சுமையாகக் கருதுவதைக் கதைக்கருவாகக் கொண்டு படைக்கப்பட்ட சிறுகதை தான் 'தூரத்து உறவு'. தன் வாழ்க்கை மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக வெளிநாடு சென்ற மகன் தன் பெற்றோர்களையே சுமையாக நினைக்கிறான். பெற்றோரிடம் உண்மையான அன்பும், உறவின் அருமையும் தெரியாத மகனின் அவல நிலையை தூரத்து உறவு சிறுகதையின் மூலம் சிறப்பான முறையில் எடுத்துக்காட்டுகிறார். தந்தையின் இறப்பை அறிந்து இறுதிச்சடங்கிற்காக அயல்நாட்டிலிருந்து தாய் நாட்டிற்கு வருகிறான் மகன். தந்தையின் இறுதிச் சடங்கு முடித்த பின்பு தாய் மட்டும் தனித்திருக்கும் நிலையில் தனது சொத்தை விற்றுவிட்டு தாயை முதியோர் இல்லத்தில் சேர்க்க நினைக்கும் மகனின் மனநிலை கதையில் விளக்கப்படுகிறது. பெற்று வளர்த்து, படிக்க வைத்து, ஆளாக்கி அவர்களை சமூகப் பொறுப்பு உள்ளவர்களாக ஆக்கிய தன் பெற்றோர்களையே சுமையாக நினைக்கும் போக்கு நவீன வாழ்க்கையில் பெருகுவதை 'தூரத்து உறவி'ன் கதைக்கரு வெளிப்படுத்துகிறது. முதியோர் இல்லத்தில் உள்ள அம்மாவும் இறந்து போக அம்மாவின் இறுதிச்சடங்கில் கூட கலந்து கொள்ளாமல் இணையத்தின் வழியாக இறுதிச் சடங்கை கண்டதாக மகனின் நிலையை பதிவு செய்திருக்கும் கருத்து நடப்பியல் அவலத்தை புலப்படுத்தக் கூடியதாக உள்ளது. "பெசன்ட் நகர் மயானத்துக்கும் மென்ஹாட்டனுக்குமான 13,462 கிலோமீட்டர் தூரத்தில் 'ஸ்கைப்'பில் எரிந்து கொண்டிருந்தாள் அம்மா".2

வேதங்கள் சொல்லாதது

மனிதர்களுக்குள் பிறப்பால் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு கிடையாது. பிறப்பால் அனைவரும் சமமே. சமூக ஏற்றத்தாழ்வுகளைத் தாண்டி மனித வாழ்க்கையில் இரக்க குணமே தலையானது. மனிதனுக்கு மனிதன் உதவிக் கொள்வதே வாழ்வின் சிறப்பு என்பதை வைரமுத்து 'வேதங்கள் சொல்லாதது' என்னும் சிறுகதையில் கருவாக அமைத்திருக்கிறார். சமயங்கள், சடங்குகள், வழிபாடு எல்லாம் மனிதனாலேயே சிறப்படைகின்றன. நல்லதை நினைத்து நன்மை செய்பவர்களுக்குக் குலம், கோத்திரம் இல்லை. "ஆசை என்பது மற்றவர்கள் மூலம் நீ சந்தோசப்படுவது. அன்பு என்பது உன்மூலம் மற்றவர்கள் சந்தோஷப்படுவது. காளியப்பன் இருளாகி விளக்கேற்றியதில் பரமசந்தோசம்தானே அடைந்திருக்க முடியும் பரமாச்சாரியார். அவருக்கு விரோதமாக எதுவும் இந்த வீட்டில் புலங்கக்கூடாது என்பதுதானே நிபந்தனை. கடவுள் எல்லா உயிர்களிலும் நிறைந்திருக்கிறார் என்ற அத்வைதம் பொய்யா? அது ஆச்சாரியாருக்கு விரோதமா? எனக்கு தெரிந்து விரோதம் இல்லை"3. நற்குணம் உடையவர்கள் எங்கும்

பிறப்பார்கள். ஆனால் பிறப்பால் அவர்கள் தாழ்ந்தவர்கள் ஆகிவிட முடியாது. குணமே உயர்ந்தது என்னும் சிந்தனை 'வேதங்கள் சொல்லாதது' கதையில் வெளிப்படுகிறது.

ஏழையின் தாஜ்மஹால்

வரலாறு என்பது மனித நாகரிகத்தின் பதிவேடு. ஆனால், அந்தப் பதிவேட்டில் யாரெல்லாம் இடம்பெறுகிறார்கள்? எந்தெந்த நிகழ்வுகள் முக்கியத்துவம் பெறுகின்றன? சற்று உற்று நோக்கினால், வரலாறு என்பது பெரும்பாலும் வெற்றியாளர்களாலும், ஆட்சி அதிகார பீடத்தில் இருப்பவர்களாலும் எழுதப்பட்டதே என்ற உண்மை தெளிவாகும். பிரமாண்டமான போர்கள், அரசர்களின் சாதனைகள், ஆட்சிக் கவிழ்ப்புகள் போன்றவையே வரலாற்றுப் பக்கங்களை நிரப்புகின்றன. ஆனால், இந்த நிகழ்வுகள் அனைத்திற்கும் அடித்தளமாய் இருந்த, இந்த வரலாற்றுப் பதிவுகளின் நிழலில் வாழ்ந்த கோடிக்கணக்கான சாதாரண மக்களின் வாழ்வு, அவர்களது போராட்டங்கள், கனவுகள், இழப்புகள் பெரும்பாலும் இருட்டடிப்பு செய்யப்பட்டுவிடுகின்றன. சமூக வரலாறு என்பது சாதாரண மக்களின் வரலாறுதான் என்றபோதும், அதிகாரத்தின் குரலே ஓங்கி ஒலிப்பதால், பலரின் வாழ்வு அர்த்தம் இல்லாமல், எந்தப் பதிவிலும் இடம்பெறாமல் முடிந்துபோகிறது.

இந்த கசப்பான யதார்த்தத்தை, வரலாற்றின் இந்த ஓரவஞ்சனையை உணர்வுபூர்வமாக வெளிச்சம் போட்டுக் காட்டும் ஒரு கலைப் படைப்புதான் கவிஞர் வைரமுத்துவின் 'ஏழையின் தாஜ்மஹால்' சிறுகதை. உலகமே வியந்து போற்றும் தாஜ்மஹால், முகலாயப் பேரரசர் ஷாஜகான் தன் மனைவி மும்தாஜின் நினைவாகக் கட்டிய காதலின் அழியாச் சின்னமாகப் போற்றப்படுகிறது. கோடிக்கணக்கான சிற்பிகளையும் தொழிலாளர்களையும் பயன்படுத்தி, பல வருடங்கள் செலவிட்டு எழுப்பப்பட்ட இந்தக் கலைப்படைப்பு, அரசரின் அளப்பரிய காதலை உலகிற்கு பறைசாற்றுவதாகப் பரவலாக நம்பப்படுகிறது. ஆனால், வைரமுத்துவின் கதை, இந்த அதிகாரபூர்வமான காதலின் சின்னத்திற்குப் பின்னால், ஒரு ஏழையின் காதல் ஒன்றின் தியாகத்தையும், அது வரலாற்றிலிருந்து எவ்வாறு மறைக்கப்பட்டது என்பதையும் புதிய கோணத்தில் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. தாஜ்மஹால் வெறும் ஓர் அரசனின் காதலின் சின்னம் மட்டுமல்ல, அதன் அஸ்திவாரத்தில் புதைக்கப்பட்ட ஒரு சாதாரண மனிதனின் துயரக் காதல் கதையின் நினைவுச் சின்னமும்கூட என்பதை கதை அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

கதையின் முக்கியப் பாத்திரமான இப்ராஹிம், தாஜ்மஹால் கட்டப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் வாழ்ந்த ஒரு சாதாரண மனிதன். அவன் அலிமா என்ற ஏழைப் பெண்ணைக் காதலித்தான். இவர்களது காதல் அரண்மனைகளின் உயரத்தில் இல்லை; அது மண் குடிசைகளின் எளிமையிலும், அன்றாடப் போராட்டங்களின் மத்தியிலும் மலர்ந்தது. தாஜ்மஹால் கட்டுமானப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அலிமா அந்தப் பிரமாண்டமான திட்டத்தில் ஒரு சாதாரணத் தொழிலாளியாகப் பணிபுரிந்தாள். அவள் கல்

சுமந்தாள், மண் சுமந்தாள், கட்டடத்தின் ஒவ்வொரு செங்கல்லுக்கும் தன் வியர்வையை அர்ப்பணித்தாள். இது சாதாரணத் தொழிலாளர்களின் வாழ்வு, எந்தப் பெருமையும் இன்றி, எந்தப் பதிவிலும் இன்றி கடந்து சென்றதைக் காட்டுகிறது.

ஒருநாள், இப்ராஹிம் தன் காதலி அலிமாவைக் காண வருகிறான். ஆனால் அவனைக் காணவில்லை. அவன் அவளைத் தேடி அலைகிறான். மண்ணெங்கும் தேடிய அவனுக்குக் காத்திருந்தது பேரதிர்ச்சி. அலிமா பூமிக்கடியில் புதைக்கப்பட்டிருந்தாள். எங்கே? உலகம் போற்றும் தாஜ்மஹாலின் அஸ்திவார ஆழத்தில்! இப்ராஹிமின் கூற்று இதுதான்:

“அவளோ இந்தக் கல்லறைக்கு மண் சுமந்தாள். காதல் வெறியோடு திரும்பி வந்தேன். காணவில்லை என் கண்மணியை. பூமி எல்லாம் தேடிப் பார்த்தேன் அவளோ பூமிக்கடியில் புதைக்கப்பட்டிருந்தாள். எங்கு தெரியுமா? இதோ இந்த தாஜ்மஹாலின் அஸ்திவார ஆழத்தில். இந்த தாஜ்மஹாலில் மும்தாஜ் க்கு முன்பே புதைக்கப்பட்டவள் என் ஆசை அலிமா தான். அவளைப் பலியிட்டது உங்கள் கட்டடக்கலையின் மூடநம்பிக்கையா? இல்லை உங்கள் அதிகார வர்க்கத்தின் காமசேட்டையா? எதுவும் தெரியாது”

இந்த கூற்று, ஒரு பைத்தியக்காரனின் புலம்பலாகக் கதையில் சித்தரிக்கப்பட்டாலும், அது தாஜ்மஹாலின் உருவாக்கத்தின் பின்னால் மறைக்கப்பட்ட ஒரு கொடூரமான உண்மையின் சாட்சியமாக அமைகிறது. இப்ராஹிமின் காதலி அலிமா, மும்தாஜுக்கு முன்பே அந்த மாபெரும் கட்டடத்தின் அஸ்திவாரத்தில் புதைக்கப்பட்டிருக்கிறாள் என்ற அவனது கண்ணீர் கதறல், அதிகாரப்பூர்வ வரலாற்றின் மீது ஒரு மிகப்பெரிய கேள்வியை எழுப்புகிறது. தாஜ்மஹால் மும்தாஜின் நினைவாகக் கட்டப்பட்டதாக உலகம் நம்பும்போது, அதன் ஆழத்தில் ஒரு சாதாரண ஏழைப் பெண்ணின் வாழ்வும், அவளது காதலும் பலியிடப்பட்டிருக்கிறது என்பது இதயத்தை உலுக்குகிறது.

அலிமாவின் இறப்புக்கான காரணம் என்ன என்ற இப்ராஹிமின் கேள்வி, இரண்டு சாத்தியக்கூறுகளை முன்வைக்கிறது: முதலாவது, கட்டடக்கலையின் மூடநம்பிக்கை (Superstition). சில பிரமாண்டமான கட்டடங்கள் கட்டப்படும்போது, அதன் உறுதிப்பாட்டிற்காக மனிதர்களைப் பலியிடும் கொடூரமான மூடநம்பிக்கைகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. அப்படியான ஒரு பலிக்கு அலிமா ஆளானாளா? இரண்டாவது, அதிகார வர்க்கத்தின் காமசேட்டை (Lust/Cruelty of the ruling class). இது அதிகாரத்தில் இருப்பவர்களின் மிருகத்தனமான காம வேட்கையாலோ அல்லது பிற வகையிலான சுரண்டலாலோ அலிமா கொல்லப்பட்டு, பின்னர் அவளது மரணம் மறைக்கப்பட்டு அஸ்திவாரத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற கொடூரமான யூகத்தை விதைக்கிறது. இந்த இரண்டு காரணங்களில் எது உண்மையானது என்பது இப்ராஹிமுக்குத் தெரியாது. இந்த அறியாமை, வரலாற்றின் இருண்ட பக்கங்களில்

சாதாரண மனிதர்களின் வாழ்வு எவ்வளவு அற்பமாகக் கருதப்பட்டது என்பதைக் காட்டுகிறது. அவர்களது மரணம்கூட விசாரணையின்றி, பதிவின்றி மறக்கப்பட்டது.

இப்ராஹிம் தன் காதலியை இழந்த துயரிலும், அவளது மரணத்திற்கான காரணத்தைத் தேடியும் பைத்தியம் ஆகிறான். அவனது பைத்தியக்காரத்தனம்தான், வரலாற்றின் அதிகாரப்பூர்வப் பதிவேடுகளில் இடம்பிடிக்காத அலிமாவின் துயரக் கதையைச் சுமந்து திரியும் ஒரே பெட்டகமாக அமைகிறது. தாஜ்மஹால் என்னும் பிரம்மாண்டமான சின்னம் ஒரு புறம் ஷாஜகான்-மும்தாஜ் காதலைப் போற்றுகிறது என்றால், மறுபுறம், அதன் கண்ணுக்குத் தெரியாத அஸ்திவாரத்தில், இப்ராஹிம்-அலிமாவின் தீரமிகுந்த, ஆனால் துயரத்தில் முடிந்த காதலின் தியாகம் புதைக்கப்பட்டிருக்கிறது என்பதை வைரமுத்து தன் சிறுகதையின் மூலம் உணர்த்துகிறார்.

வைரமுத்துவின் இந்தக் கதை, தாஜ்மஹால் குறித்த நமது பொதுவான பார்வையைக் கேள்விக்குள்ளாக்குகிறது. பிரமாண்டமான நினைவுச் சின்னங்கள் வெறும் கலை அல்லது காதலின் அடையாளங்கள் மட்டுமல்ல; அவை கட்டப்பட்டபோது சிந்தப்பட்ட வியர்வையின், உழைப்பின், சில சமயங்களில் உயிர்களின் விலையையும் கொண்டுள்ளன என்பதை நினைவூட்டுகிறது. அதிகாரமும் செல்வமும் கொண்ட ஒரு காதலுக்கு விண்ணுயர்ந்த நினைவாலயம் எழுப்பப்படும்போது, ஏழையின் காதலும் வாழ்வும் அதே மண்ணில், அதே கட்டடத்தின் அடியில் பலியிடப்படுவதும் மறைக்கப்படுவதும் வரலாற்றின் முரண்நகை.

இப்ராஹிமின் காதலிக்கு நினைவுச்சின்னம் இல்லை. அவளது பெயர் வரலாற்றின் பக்கங்களில் இல்லை. அவளது கதை அதிகாரபூர்வப் பதிவேடுகளில் இடம்பெறவில்லை. ஆனால், இப்ராஹிமின் மனதில், அவனது பைத்தியக்காரத்தனத்தில், அவனது கண்ணீரில் அவளது காதல் வாழ்கிறது. அதுதான் அவனது, 'ஏழையின் தாஜ்மஹால்'. வைரமுத்து, இந்த ஏழையின் காதலையும், அதன் துயர முடிவையும், உலகம் கொண்டாடும் தாஜ்மஹாலின் காதலுக்கு நிகராக, ஒரு மாற்றுப் பார்வையில், ஆனால் சமமான முக்கியத்துவத்துடன் எடுத்துக்காட்டுகிறார். இது வரலாற்றைப் படிக்கும்போது, அதிகாரக் குரல்களுக்குப் பின்னால் மறைந்திருக்கும் சாதாரண மக்களின் கதைகளையும், அவர்களின் வாழ்வின் மதிப்பையும் தேட வேண்டும் என்ற சமூகப் பொறுப்புணர்வை வாசக மனதில் விதைக்கிறது. தாஜ்மஹால் என்ற புறச் சின்னத்திற்குப் பின்னால், அலிமாவின் மறைக்கப்பட்ட தியாகமும், இப்ராஹிமின் மறக்கப்படாத காதலும்தான் உண்மையான 'ஏழையின் தாஜ்மஹால்' என்பதை இச்சிறுகதை உணர்த்துகிறது.நீரில் எழுதிய காதல்

எல்லா உயிர்களுக்குள்ளும் மென்மையான காதல் உணர்வு உண்டு என்பதையும், அவைகளுக்குள் உள்ள தூய அன்பின் தன்மையையும் 'நீரில் எழுதிய காதல்' என்னும் சிறுகதையின் கருவாக அமைத்திருக்கிறார் வைரமுத்து. காதல் என்பது அனைத்து

உயிர்களுக்கும் பொதுவானது. அஃறினை உயிர்களுக்கு உள்ள காதலும், அதன் உணர்வுகளும் அவ்வளவாக புரிந்து கொள்ளப்படுவதில்லை. மஞ்சளாறு அணையில் இரண்டு மீன்கள் ஒன்றை ஒன்று காதலித்தன. உயிருக்குயிராய் நேசித்தன. இரண்டு மீன்களும் அணையில் இணைபிரியாமல் வாழ்ந்தன. காலச்சுழச்சியில் ஒன்றையொன்று பிரிந்து விடுகிறது. இறுதியில் ஒன்று மீன் வளர்க்கும் தொட்டியில் மற்றொன்று உணவுக்காக சமைக்கும் இடத்தில் குழம்புக்காக அறுக்கப்படுகிறது. இதைக் கண்ட தொட்டியில் இருந்த மீனும் தன் துணையை விட்டு வாழ விரும்பாமல் தானும் உயிரை விடுகிறது. “பேயம்மாள் அரிவாள் மணை எடுத்து வந்த காட்சிதான் 'கீ' கடைசியாய்ப் பார்த்தது; குழம்பு கொதிக்கும் சத்தம்தான் கடைசியாய்க் கேட்டது. மறுநாள் குழம்புக்கு அவள் தொட்டி மீன்களை எல்லாம் தொட்டு தூக்கி போது எல்லா மீன்களும் உயிரோடு இருந்தன; 'கீ' மட்டும் செத்து கிடந்தது”5. இக்கதை கற்பனை கதையாக இருப்பினும் அஃறிணைக்கும் உணர்வு உண்டு, காதல் உண்டு என்பதை எடுத்துரைக்கிறார்.

பகல் இருட்டு: பார்வையற்றவர்களின் உலகில் வெளிச்சம் தேடும் ஒரு தேடல்

வைரமுத்துவின் 'பகல் இருட்டு' என்ற சிறுகதை, அதன் தலைப்பிலேயே ஒரு முரண்பாட்டைத் தாங்கி நிற்கிறது. வெளிச்சத்தால் நிறைந்திருக்க வேண்டிய பகல் நேரத்தில், பார்வையற்றவர்களின் வாழ்வில் சூழும் இருளைப் பற்றிய ஆழ்ந்த சித்திரத்தை இச்சிறுகதை வெளிக்கொணர்கிறது. குறிப்பாக, நகரமயமாதலின் வேகமான சூழலில் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளின் அன்றாட வாழ்வில் அவர்கள் சந்திக்கும் சவால்களையும், மனிதநேயம் அருகி வரும் அவல நிலையையும் இக்கதை அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

கதையின் தொடக்கத்திலேயே, இந்தியாவில் சுமார் எழுபது லட்சம் பார்வையற்றவர்கள் வாழ்கின்றனர் என்ற புள்ளிவிவரத்தை வைரமுத்து சுட்டிக்காட்டுகிறார். இது வெறும் எண்ணிக்கையல்ல, மாறாக கவனிக்கப்பட வேண்டிய, ஆதரவு தேவைப்படும் மாபெரும் மனிதக் கூட்டம் என்பதை உணர்த்தும் ஒரு முயற்சி. கண்பார்வை பெற்ற சமூகத்தினர், பார்வையற்றோருக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும் என்ற அடிப்படை அறத்தை இக்கதை கேள்விக்குள்ளாக்குகிறது. இன்றைய அவசர உலகத்தின் ஓட்டத்தில், ஒவ்வொருவரும் தங்கள் சுயநலப் பணிகளிலும், இலக்குகளை நோக்கிய ஓட்டத்திலுமே முனைப்புக் காட்டுகின்றனர். பிறரைப் பற்றிய சிந்தனைக்கோ, குறிப்பாக உதவி தேவைப்படுபவர்களைக் கண்டுகொள்ளவோ அவர்களுக்கு நேரம் இல்லை என்ற கசப்பான யதார்த்தத்தை வைரமுத்துவின் எழுத்துக்கள் மூலம் உணர முடிகிறது.

கதையின் மைய நிகழ்வாக, சாலையைக் கடக்க முடியாமல் தவித்து நிற்கும் ஒரு பார்வையற்ற மனிதர் சித்தரிக்கப்படுகிறார். பரபரப்பான சாலை, வாகனங்களின் இரைச்சல், அவசரமாகச் செல்லும் மக்கள் - இவர்களுக்கு மத்தியில் அவர் தனித்து நிற்கிறார். அவரது நிலையைக் கண்டு சிலர் ஒரு கணம் இரக்கம் கொள்கிறார்கள். ஆனால், அந்த இரக்கம் வெறும் மன உணர்ச்சியோடு

நின்றுவிடுகிறது, செயலாக உருவெடுக்கவில்லை. அவருக்கு உதவ யாரும் முன்வருவதில்லை. இதுதான் கதையின் முதல் வலிமையான காட்சி. மனித மனங்களில் இரக்கம் இருந்தாலும், அது வெறும் மனதளவில் மட்டுமே தேங்கிவிடுவதையும், அதைச் செயல்படுத்தும் துணிவோ, நேரமோ பலரிடம் இல்லை என்பதையும் இக்காட்சி கூர்மையாகச் சுட்டிக்காட்டுகிறது. நகர வாழ்வின் அந்நியத்தன்மை மற்றும் சுயநலப் போக்கு ஆகியவை பார்வையற்றவர்களின் வாழ்க்கையை எந்தளவுக்குப் பாதிக்கிறது என்பதற்கான நேரடி உதாரணம் இது.

இறுதியாக, ஒரு போக்குவரத்துக் காவலர் அந்தப் பார்வையற்றவரின் கையைப் பிடித்து சாலையைக் கடக்க உதவ முன்வருகிறார். இது ஒரு சிறிய நம்பிக்கைக் கீற்றை அளிக்கிறது. ஆனால், அந்த நம்பிக்கை நிலைப்பதில்லை. சாலையின் பாதியிலேயே தனது மேலதிகாரியைக் கண்டதும், தனது கடமைக்கோ அல்லது பணியிட விதிமுறைகளுக்கோ முக்கியத்துவம் கொடுத்து, அந்தப் பார்வையற்றவரைக் கைவிட்டுவிடுகிறார் அந்தக் காவலர். இந்தச் சம்பவம் மனிதாபிமான உதவிகள் சிலசமயம் நிபந்தனைக்குட்பட்டவையாக அல்லது சூழலுக்கு ஏற்ப மாறக்கூடியவையாக இருக்கின்றன என்பதை உணர்த்துகிறது. அதிகார அமைப்புகளின் அழுத்தம் அல்லது சுயநலமான பாதுகாப்புகள் கூட உதவிகளைத் தடுத்து நிறுத்திவிடுகின்றன என்பதை இது காட்டுகிறது.

இந்தக் கைவிடப்பட்ட சூழலில்தான் கதையின் மிக முக்கியமான திருப்பம் நிகழ்கிறது. அந்தப் பார்வையற்றவரை சாலையின் நடுவில் இருந்து, மற்றொருவர் வந்து கையைப் பிடித்து சாலையின் மறுபுறம் பத்திரமாக அழைத்துச் செல்கிறார். உதவி செய்தவர் யார் என்ற கேள்வி நம் மனதில் எழுகிறது. அவர்கள் இருவருக்கும் இடையே நடைபெறும் உரையாடல்தான் கதையின் ஆணிவேராகவும், அதன் வலிமையான செய்தியாகவும் அமைகிறது.

உதவி பெற்ற பார்வையற்றவர், தன்னைக் காப்பாற்றியவருக்கு நன்றி கூறுகிறார். அதற்கு உதவி செய்தவர், "பரவாயில்லை; நீங்கள் கைவிடப்பட்டவராய் இருக்க வேண்டும் என்ற அனுமானம்தான் என்னை உதவி செய்யத் தூண்டியது" என்று பதிலளிக்கிறார். இந்த பதில், உதவி செய்தவரும் இதே போன்ற சூழல்களைச் சந்தித்திருக்கக் கூடும் என்ற யூகத்தை ஏற்படுத்துகிறது. பின்னர், உதவி பெற்றவர், "எனக்கு இன்னொரு உதவி செய்ய வேண்டும்" என்கிறார். "என்ன?" என்று கேட்கிறார் உதவி செய்தவர். "இப்போது நாம் எந்தச் சாலையில் நிற்கிறோம். படித்துச் சொல்ல முடியுமா?" என்று கேட்கிறார் முதல் பார்வையற்றவர். இந்தக் கேள்விக்கு உதவி செய்தவர் கொடுக்கும் பதில்தான் கதையின் உச்சகட்டம்: "'மன்னிக்க வேண்டும். உங்களுக்குப் படிக்கத்தான் தெரியாது; எனக்குப் பார்வையே தெரியாது'".

இந்த ஒற்றை வரி, கதையின் மொத்தப் பரிமாணத்தையும் மாற்றிவிடுகிறது. உதவி செய்தவரும் பார்வையற்றவர்தான் என்பது தெரிய வருகிறது. கண்பார்வை அற்ற ஒருவரால் கைவிடப்பட்ட மற்றொரு பார்வையற்றவருக்கு உதவுபவர், கண்பார்வை உள்ள சமூகம் அல்ல; மாறாக, அதே

'பகல் இருட்டு'க்குள் வாழும் மற்றொரு பார்வையற்றவரே. இது சமூக யதார்த்தத்தின் ஒரு சோகமான வெளிப்பாடு. கண்பார்வை உள்ள பெரும்பான்மைச் சமூகம், பார்வையற்றவர்களின் நிலையைக் கண்டும் காணாமல் கடந்து செல்லும்போது, அதே துயரைப் பகிரும் மற்றொருவரே உதவிக்கு முன்வருகிறார். இது மாற்றுத்திறனாளிகளுக்குள் இருக்கும் பரஸ்பர புரிதல், வலி, மற்றும் ஒருவருக்கொருவர் ஆதரவாக நிற்கும் உயரிய பண்பை அழுத்தமாகப் பதிய வைக்கிறது.

வைரமுத்து இச்சிறுகதை மூலம் மனிதாபிமானம் குறைந்து வருவதையும், பிறருக்கு உதவும் பண்பு அருகி வருவதையும் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார். குறிப்பாக, நகரச் சூழலில் தனிமனிதர்கள் எவ்வாறு தங்களுக்குள்ளேயே முடக்கப்பட்டு, சமூகப் பொறுப்புணர்வு அற்றுப் போகிறார்கள் என்பதைச் சாடுகிறார். எண்ணற்ற கண்பார்வை உள்ள மனிதர்கள் தினமும் பலமுறை சாலையைக் கடந்து சென்றும், ஒரு பார்வையற்றவருக்கு உதவ மனமற்றுப் போகும் சூழலையும், இறுதியாக அதே 'ிருளுக்குள்' வாழும் மற்றொரு பார்வையற்றவரே உதவிக்கரம் நீட்டும் நுட்பமான முரண்பாட்டையும் அவர் கண்முன் நிறுத்துகிறார்.

'பகல் இருட்டு' வெறும் ஒரு கதையல்ல, இது ஒரு சமூக விமர்சனம். பார்வையற்றவர்களின் அன்றாடப் போராட்டங்களைப் பற்றிய ஒரு விழிப்புணர்வுப் பதிவு. கண்பார்வை பெற்ற சமூகம் தன்னுடைய அவசரப் போக்கைக் கைவிட்டு, சுற்றி இருப்பவர்களின் தேவைகளை, குறிப்பாக மாற்றுத்திறனாளிகளின் தேவைகளை உணர்ந்து உதவி செய்ய முன்வர வேண்டும் என்ற அறைகூவலே இக்கதையின் அடித்தளமாக அமைகிறது. பார்வையற்றவர்களின் உலகில் வெளிச்சம் பாய்ச்ச வேண்டிய பொறுப்பு கண்பார்வை உள்ளவர்களுக்கு உண்டு என்பதை இக்கதை அழுத்தமாக நினைவூட்டுகிறது. அந்த வெளிச்சம், வெறும் இரக்கமாய் இல்லாமல், செயலாய் மாற வேண்டும் என்பதே வைரமுத்துவின் ஆழமான செய்தியாகும்.

மனிதர்களால் ஆனது வாழ்வு

உலகில் உள்ள மற்ற உயிர்களைக் காட்டிலும் மனித இனத்திற்குத் தனிச்சிறப்பு ஒன்று உண்டு. அத்தனிச்சிறப்பு காரணமாக மக்கள் இப்புவியில் மேம்பட்டு வாழ்கின்றனர். மனிதர்கள் ஒருவருக்கொருவர் இணைந்து செயலாற்றும்போது தான் சமுதாய நடவடிக்கைகள் உயிர்பெறுகின்றன. கணவனால் கைவிடப்பட்டு உறவுகள் கசந்த பின் வளர்ப்பு பிராணியான பூனை மீது அன்பு கொண்டு தன் அன்பு முழுவதையும் பூனைக்கே காட்டுகிறாள். ஒரு நாள் பூனை இறந்த பின்பு அவள் தனிமைப்படுத்தப்படுகிறாள். உற்றார் உறவினர், ஊர்க்காரர்கள், அக்கம் பக்கத்தினர் என்று யாருடனும் உறவின்றி அவளுடைய வாழ்க்கை முடிந்து போகிறது. பிற உயிர்கள் மீது அன்பு செலுத்தினாலும் தன்னைச் சார்ந்த மனிதர்களோடும் உறவுகளோடும் சேர்ந்து வாழும் போது தான் வாழ்க்கை இன்பம் தரும். "பூனையின் மரணம் கொண்டாடப்படுகிறது; மனிதரின் மரணம் அனாதையாகிறது. இளமையோ - முதுமையோ -

உறவோ- பகையோ - பிராணி மட்டும் போதாது மனிதர்களுக்கு; சொல்லிவிட ஆள் வேண்டும்”7. எத்தனை இடர்கள் வந்தாலும் மனிதர்களோடும், உறவுகளோடும் சேர்ந்து வாழ்கின்ற வாழ்க்கை தான் இன்பம் தருவது என்னும் சிந்தனையை வைரமுத்து இச்சிறுகதையில் பதிவு செய்கிறார்.

தொகுப்புரை

வைரமுத்துவின் சிறுகதைகள் வெறும் பொழுதுபோக்கிற்காகப் படிக்கப்படும் கதைகள் அல்ல. அவை வாழ்வின் அனுபவப் பாடங்களாக அமைகின்றன. மனித மனங்களின் ஆழங்களையும், உறவுகளின் முக்கியத்துவத்தையும், சமூகத்தின் யதார்த்த நிலையையும் அவை வாசகர்களுக்கு உணர்த்துகின்றன. அன்றாட வாழ்வின் எளிய தருணங்களுக்குள்ளும் ஆழமான வாழ்வியல் தத்துவங்கள் இருப்பதை அவரது கதைகள் அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. அவரது சிறுகதைகள் தமிழ் சிறுகதை இலக்கியப் பரப்பில் ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்த்துள்ளன என்பதோடு, காலத்தைக் கடந்து நிற்கும் வாழ்வியல் ஆவணங்களாகவும் திகழ்கின்றன. கதைக்கரு, கதைப் பின்னல், உத்திகள் முதலான களங்களில் வைரமுத்துவின் சிறுகதைகள் தனித்தன்மை உடையனவாக மிளிர்கின்றன. வைரமுத்துவின் சிறுகதைகள் வாழ்வியலை கதைக் கருவாகக் கொண்டது. இயல்பான வாழ்வியல் கண்ணோட்டம், குடும்ப உறவுகள், குடும்ப உறவுகளுக்குள் ஏற்படும் சிக்கல்கள், மனிதர்களின் உறவு நிலை, மனிதர்களுக்குள் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, இன்றைய சமூகச் சூழல் போன்றவற்றை கதைக் கருவாகக் கொண்டு சித்தரிக்கப்பட்டது வைரமுத்துவின் சிறுகதைகள்.

பார்வை நூல்கள்

1. தா. ஏ.ஞானமூர்த்தி இலக்கிய திறனாய்வியல் பக்கம் 335
2. வைரமுத்து சிறுகதைகள் பக்கம் 25
3. மேலது பக்கம் 33
4. மேலது பக்கம் 42
5. மேலது பக்கம் 62
6. மேலது பக்கம் 187

References:

1. Literary Criticism by T. A. Gnanamoorthy, page 335
2. Vairamuthu Short Stories, page 25
3. Ibid., page 33
4. Ibid., page 42
5. Ibid., page 62
6. Ibid., page 187

KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN ***2456-5148*** *(Online)*
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

Chinna Arayathi Novel Customs And Beliefs Of The People Of The Mountain Araiyar Ethnic Group

Dr. D. Neeladevi

Assistant Professor, Department of Tamil Studies Holy Cross College (Autonomous), Tiruchirappalli - 620 002
eMail: dneelatamil@gmail.com ORCID: https://orcid.org/0009-0006-3831-0030

Received 25/04/2025
Accepted for publication 30/04/2025
Published 01/05/2025

Abstract

The Tribal People Are The Witnesses To The Many Hierarchical Developments .That Have Occurred In The Ancient Social Culture Of Mankind. Literatures Are The Fields That Record Human Life. The Lifestyles Of The Tribal People Have Been Recorded As Documents In The Form Of Fiction Literature, One Of The Literary Forms Of Fiction. By Studying Them, It Is Possible To Know The Ancient Social Development Of The Tamil Nation. Studies On The Tribes Recorded In Literature Are Scarce In The Context Of Tamil Studies. This Study Aims To Shed Light On The Lives Of The Tribal People Featured In The Tamil Ethnographic Novel.

Beliefs And Customs Emerged .At The Time Of The Emergence, Of The Human Race. They Are Intertwined In Human Life And Whatever Action A Human Being Takes, All Those Actions Have The Character Of Expressing The Customs Of The Ethnic Groups To Which He Belongs.

Keywords*: Tribal People, Ancient Social Culture, Mankind. Literatures, Chinna Arayathi Noval*

சின்ன அரயத்தி புதினத்தில்; மலை அரையர் இனக்குழு மக்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள்

முனைவர் து.நீலாதேவி

உதவிப்பேராசிரியர் தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி திருச்சிராப்பள்ளி-620 002

eMail: dneelatamil@gmail.com ORCID: https://orcid.org/0009-0006-3831-0030

கட்டுரைச் சுருக்கம்:

மனித குலத்தின் தொல் சமூகப் பண்பாட்டில் ஏற்பட்ட பல படிநிலை வளர்ச்சிகளை அறிவதற்குச் சாட்சியாகத் திகழ்பவர்கள் பழங்குடி மக்களே. இலக்கியங்கள் மனித வாழ்க்கையைப் பதிவு செய்யும் களங்களாக உள்ளன. புனைகதை இலக்கிய வடிவங்களுள் ஒன்றான புதின இலக்கிய வடிவத்தில் பழங்குடி மக்களின் வாழ்வுமுறைகள் ஆவணங்களாகப் பதிவாகியுள்ளன. அவற்றை ஆய்வு செய்வதன் வழியாகத் தமிழினத்தின் தொன்மைச் சமூக வளர்ச்சியினை அறிய இயலும். இலக்கியங்களில் பதிவாகியுள்ள பழங்குடியினர் குறித்த ஆய்வுகள் தமிழாய்வுச் சூழலில் குறைவு. இவ் ஆய்வு, தமிழ் இனவரைவியல் புதினத்தில் இடம்பெற்றுள்ள பழங்குடி மக்களின் வாழ்வியலைப் புலப்படுத்தும் வகையில் அமைகின்றது.

மானுட இனம் தோன்றிய காலத்திலேயே நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் தோன்றின. அவை மானுட வாழ்வில் இரண்டறக் கலந்து மனிதன் எச்செயலைச் செய்தாலும் அச்செயல்கள் அனைத்தும் அவன் சார்ந்துள்ள இனக்குழுக்களின் பழக்க வழக்கங்களை வெளிப்படுத்தும் தன்மை பெற்றதாக அமைந்துள்ளன..

திறவுச்சொற்கள்: *பழங்குடி மக்கள், பண்டைய சமூகப் பண்பாடு, மனிதகுலம். இலக்கியம், சின்ன அரயத்தி நாவல்*

முன்னுரை

மனிதன் வாழ்க்கை நம்பிக்கையின் அடிப்படையிலேயே அமைகின்றது. அடிமனத்தின் ஆழ் விளைவாக நம்பிக்கைகள் தோன்றுகின்றன. மனிதன் தன் பிறப்பு முதல் இறப்பு வரை பலவிதமான நம்பிக்கைகளைக் கொண்டு வாழ்கின்றான்.

ஒரு சமூக இனக்குழுவில் நம்பிக்கைகள் என்பவை பின்னிப் பிணைந்திருப்பவை. பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் சமுதாயத் தேவைகளின் அடிப்படையில் பிறக்கின்றன. சில நம்பிக்கைகளுக்கு அறிவியல் ஆதாரமாகவும் சில நம்பிக்கைகளுக்கு தத்துவமே ஆதாரமாகவும் இருந்து வருகின்றன.நம்பிக்கைகளை வழி வழியாக மக்கள் தம் வாழ்வில் நம்பி வருகிறார்கள். இந்த நம்பிக்கைகள் நம் முன்னோர்களால் வற்புறுத்தப்பட்டு வந்தவையாகும். இதனால் காலங்காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்குப் பரவி வருகின்றன.

உணவு பழக்க முறை:

கொச்சுராமன் கஞ்சிப்புரைக்குள் நுழைந்து வரவாணத்தில் தொங்கவிட்டிருந்து மூங்கில் குழாயை எடுத்தான்.

> **அதிலிருந்து காய்ந்த பனம்பஞ்சையும் ஒரு துண்டு வார்ப்பு**
> **இரும்பையும் எடுத்தான். அடுப்பில் கிடந்த கரிக்கட்டகளை**
> **ஊதிச் சாம்பலை நீக்கவிட்டு இரண்டையும் சேர்த: வைத்தான்.**
> **அருகிலிருந்து உருண்டைக் கருங்கல்லைத் துடைத்தான்.**
> **கையில் தைத்து கசக்கிச் சூடுபடுத்திய பனம்பஞ்சை**
> **கரிக்கட்டைகளுக்கிடையே வைத்தான். பஞசோடு சேர்த்துப்**
> **பிடித்த இரும்புத்துண்டை கருங்கல்லில் பலமாக உரசினான்.**
> **பறந்து விழுந்த தீப்பொறிகள் பஞ்சில் படர்ந்தன. அதை**
> **மெதுவாக ஊதி தீப்பிடிக்க வைத்தான். அப்போது இரண்டு**
> **மூங்கில் குழாய்கள் நிறைய தண்ணீருடன் வந்த**
> **குஞ்ஞாதிச்சன் பழைய மண் கலயத்தில் ஒரு பிடி**
> **அரிசியைக் கழுவிப்போட்டு அடுப்பில் வைத்தான்.**1

கொச்சுராமன் தீயை மூட்டி பன்றியைச் சுட்டான். கத்தியால் தோலைச் சுரண்டி வெட்டிப்பிளந்து துண்டுகளாகக்கினான். மூதாதையர்களுக்கு நேர்ச்சையாக கருத்தும் ஈரலும் ஒரு பங்கு உறவினர்களுக்கு நல்லதுண்டுகளாப் பார்த்து அடுப்பின் மீது மூங்கில் தட்டில் பரப்பி வைத்தான்.

> **“ உப்புப் புரட்டிய இறைச்சித் துண்டுகளை ஈற்றில்**
> **கோர்த்துத் தீயிலிட்டான் இறைச்சி கருகிய வாசம்.**
> **இரண்டு பேருடைய நாசிகளும் விரிந்தன. வாயில்**

நீருறியது. ஒரு துண்டை சூட்டுடன் கடித்திழத்த
படியே மனைவியைப் பார்த்தான். தீ படர்ந்தெரியும்
போது அவளது கண்களில் நல்ல பிரகாசம்.
உலர்ந்த உப்புகண்டத்தில் குட்டுப்பாளையிலிட்டு
சிரட்டையால் அதன் வாயை மூடிக் கட்டினான்.
ஆசையாக இருக்கும் போது ஒன்றை எடுத்து
அடுப்பிலிட்டு சூடாக்கிக் கடித்துத் தின்னலாம்.
நீரிலிட்டு குளிரவைத்து குழம்பு வைக்கலாம்” 2

இவ்வாறு பாதுகாத்து கொள்வர்கள்.

உழவு முறை:

உழத் துவங்கிய நாளில் விதை நெல்லை ஜெபித்து வருதுபக்குவப்படுதுதிய விளை நிலத்தில் தகுந்த வித்தைப் பாவியது இட்யாதிதான் தானிய தேவனை. சூரிய சந்திராதிகளை மனதில் வருத்தி கிழக்குப் பக்கமாகப் பார்த்துப் பார்த்துத் திரும்பி நின்றபடி ஒரு பிடி கதிர்களைப் பிடித்தான் அறுத்தெடுக்கும் குற்றத்தைப் பொறுத்தருளச் சொல்லி பிராத்தனையுடன் ஒவ்வொரு பிடியாக அறுத்துக் கற்றையாகக்க கட்டினார். மீதியை வாரிகளிடம் அறுக்க சொல்லி விட்டான்.

வெள்ளபட்டு மொழியல் ஒன்று இரண்டும் பொது
தெற்கு வடக்காக மூங்கில் நாட்டி வேறுபடுத்திய
ஒருபகுதி எட்டும் பத்துமாக விரிந்து நிற்கும்
நெல் சீக்கிரமே படர்ந்தோறு3

இப்பகுதியில் விளைவது தான் சோறு. ஓங்கி வளரும் நெல்லினிடையில் மர வள்ளியத் துவளையும் இடையிடையே சோளமும் கேழ்வரகும் விதைக்கப்பட்டிருந்தன. கல்லிலும் மரக்குற்றியிலுமெல்லாம் பீச்கிலும் பயறம். அறுவடை முடிந்தால் எல்லாம் சீக்கிரமாகவே வளர்ந்து விடும். கீழே பூண்டன் உழவுக்கு தயாராக நிற்கும் பத்துப் பதினாறு ஆண்களும் பெண்களும எல்லோருடைய தலைகளிலும் வட்டத் தலைப்பாகை. புளைத் தொப்பி பெண்கள் வால் கொண்டையிட்ட தலையில் துணியும் கட்டி கையில் மண் வெட்டியுடன் தயாராக நின்று அனைவரும் புது வீரியத்துடன் முன்னேறி உழவுத் துவங்கினார்கள். விதையை மூடுமளவுக்கு மட்டும் தான் மண் கிலிளக்க வேண்டும். இவர்களின் முக்கிய உழவு முறையாக மிளகு கருதப்படுகிறது.

வெடி மருந்து தயாரித்தல்:

வெடி மருந்து இழத்து தயார் செய்ய வேண்டும். தோலை நீக்கி நிழலில் உலா வைத்த கைவன் கோல் எரித்த கரி கெட்டியாகக் கலக்கிய வெடி உப்பிலிட்டு வற்ற வைத்து நெடும் பாளையில் வைக்கப்பட்டிருந்தது. சுண்ணாம்பு கலந்த நீரும் எட்கால் பூச்சி படமும் மர உரலும் பூணில்லாத உலக்கைகளும் உடல் வலுவுள்ள இரண்டு பேர் இடிப்பதற்குத் தயாராகி

இடுப்பில் வட்டக் கச்சைகளுடன் களமிறங்கினார்கள். கிழக்குப் புறமாக திரும்பி நின்று உலக்கையை வாங்கி இரண்டு மூன்று தடைவ இடித்தான். தொடர்ந்து கச்சைக் கட்டியவர்கள் இடிதக்கத் துவங்கினார்கள். கண்டா அடையிடையே சுண்ணாம்பு நீரைத் தெளித்து இளக்கி விட்டிக் கொண்டிருந்தான். கரி சூடு மாறிவிடாமல் தொடர்ந்து இடிக்க வேண்டும். கடைசியில் எட்டுக் காலிப் படத்தைச் சேர்த்து இடித்து கட்டையும் பரலுமாக ஆக்கினார்கள். வீரியத்தைப் பரிசோதிப்பதற்காக கட்டையை எறித்தார்கள். நாட்டுத் துப்பாக்கியில் பரல்களை நிறைத்து கருவிட்டு ஏதாவது மரத்தைப் பார்த்து சுட்டுப் பார்த்தார்கள். மரத்தில் எந்த அளவுக்கு அது ஆழமாகப் பாய்ந்திருக்கிறது என்பதைப் பரிசோதித்தார்கள்.

வேட்டையாடுதல்:

வேட்டையாடுவதற்கு ஒரு வாரமாவது காட்டிலும் மேட்டிலும் திரிய வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அரிசிஇ பாத்திரம்இ உப்புஇ வற்றல்இ மிளகுஇ கத்தி போன்றவற்றை மூட்டையாக வைத்து ஒதுக்கிக் கட்டிய அக்குள் மாராப்புகள்இ புறப்படும் நேரத்தில் அனைவரும் மாராப்பைத் தோளில் தூக்கிக் கொண்டு வரிக்கமாலுக்கு வந்தார்கள்.

துப்பாக்கியைக் கையாள்வதில் குஞ்ஞாதிக்கன் மிகவும் திறமையானவன் மட்டுமல்ல வாரிசுரிமை அவனுக்குத்தான். இட்டியாதி தட்டிலிருந்து நிரப்பிய துப்பாக்கியை எடுத்து மந்திரம் சொல்லி காஞ்சியில் ஊதினான் பிறகு மகனிடம் கொடுத்து விட்டுச் சொன்னான்.

இறவைர்ற வழியில் கவனமா இருந்துகணும்
காவல் தெய்வங்க வேட்டையைக் கொண்டு
வரும்போது தோள்பட்டைக் குறவஞ்சி அடிக்கணும்” 4

எரசைச் சாண் குழலுடனான துப்பாக்கி குஞ்ஞாதிக்கனின் உயரத்திலிருந்து கொச்சுராமனுக்கு கொஞ்சம் சிறிது கைக்கு அடக்கமாக இருந்தது. மற்றவர்களின் துப்பாக்கிகளையும் மந்திரம் சொல்லி கொடுத்து விட்டு ஒவ்வொருவருக்கும் அறிவுரை சொன்னான் மாராப்பு தலையில் பாளைத் தொப்பிஇ இடுப்பில் கச்சை தோளில் துப்பாக்கி சின்னன் சங்கு உனும் வேட்டை நாய்களும் உதவிக்கு சென்றார்கள்

இறைச்சிக்குப் போனவன் விறைச்சிச்
செத்தான் ஊட்டுல இருந்தவை கொதிச்சுச்
செத்தான் தெரியுமாடா குட்டிப்புள்ளே
உங்கப்பன் பன்னியைக் கொன்னு
தோள்லே தூக்கிட்டு வருவா” 5

என்று குழந்தையிடம் கூறினார்கள்.

மறைவிடம் கட்டி காவலிலிருந்தும் நாய்களுடன் சென்று காட்டைக் கலைத்ததும் தளர்ந்து போனது அவர்கள் ஒரு காட்டாற்றின் கரையில் அங்குமிங்குமான ஒளிந்திருந்தார்கள். நாய்கள் வழி மறித்து அடித்துக் கொன்ற கூரனின் இறைச்சியை உப்பும் வற்றல் மிளகும் சேர்த்து பச்சை மூங்கில் திணித்து வாய்ப்பகுதியில் இலைகளைக் குத்தி

நிறைத்து எரியும் தீயில் புதைத்து வைத்தார்கள். மூங்கில் கருக வேண்டும். நீரின் அச்சம் வற்றில் பக்குவமான இறைச்சி கிடைக்கும்.

மாக்குடில் கட்டுதல்:

கீறிக்காய வைத்து சுருயாகக் கட்டிய மூங்கில் பிரம்புக் கொடிகளுடன் குஞ்ஞாதிக்கன் வெளியே வந்தான். மரத்தில் சேர்த்துக் கட்டிய கல் மூங்கில் ஏணியின் பிடிகளை கத்தியின் பிடியால் தட்டிப் பார்த்து விட்டு அவன் ஏறினான். யானை எவ்வளவு தான் முயற்சி செய்து பார்த்தாலும் எட்டாத உயரம் மருத நிரத்தின் கிளைகளை வெட்டியெறிந்து பலமான மூங்கில் கட்டிய தாங்கல்களும் இழைகளும் சிதைத் கீறிய இளம் மூங்கிலால் கட்டும் மறைவும். ஆள் உயரமுள்ள நீண்டு வளர்ந்திருக்கும் போதப் புல்லைக் கீறியெடுத்து சிறு கட்டுகளாகச் சேர்த்தடுக்கிய அடுக்கி இரண்டு மூன்று பேர்கள் படுத்துக் கொள்ளும் அளவிலான பாண் தடுப்பை ஒட்டி ஒரு ஆள் வசதியாக நின்று புழங்குவதற்கான தட்டு. அதன் ஒரு ஓரத்தில் கையில் எடுக்குமளவிலான கற்களும் உள்ளன.

காய்ந்த குலைந்த கட்டுகளை மீண்டும் முறுக்கிக்
கட்டி சீவிப் பக்குவப்படுத்திய மூங்கில்
குச்சால் கவண் செய்து அதன் வளையத்தை
வலது கைக் குழாயில் வைத்தனர் நடுவில்
கல்லை வைத்து மறு தலைப்பையும் சேர்த்துப்
பிடித்து ஏறி வாங்கும் யானையும் பன்றியையும்
எலும்பு உடைகிற சுகத்தை அனுபவிக்க
முடியும்” 6

இவ்வாறு குடிலை கட்டி பாதுகாத்தனர்.

சடங்கு முறைகள்:

உலர்ந்த ஈற்றில் துண்டுகளைக் கீறி ஒரு முனையைக் கூர்மையாக்கி மற்றொரு முனையில் பழந்துணியைச் சுற்றி கோல்திரி கைத்திரி தீப்பந்தம் செய்ய வேண்டியது ஆதாவது மிச்சமிருக்கிறதா என்று பார்த்தான். சடங்குகளைச் செய்யும் ஈச்சரன் கோபாலன் ஒவ்வொரு மூர்த்திகளுக்கும் தனியாகத் தண்டுகளை மினுக்கினான். கரும்பச்சை நிறமான எழுகின் கம்பை ஒரு முழம் நீளத்தில் முறித்து இரண்டு முனைகளிலும் தோல் சீவி கரியும் மஞ்களும் புரட்டினால் நீச மூர்த்தியாகிய மறுதாவுக்கு நடுவே தோல் களைந்து மஞ்சள் பூசியார்கள் சாத்தனுக்கு எழிலம் பாலயின் உச்சியிலும் நடுவிலும் இரண்டு முனைகளிலும் மஞ்சள் சுண்ணாம்பு கலந்து பூசி சிவப்பாக்கியது.

பச்சரிசியை தவிட்டுடன் குழைத்து நீளமாக
உருட்டி அலையில் பொதித்துச் சுட்டெடுத்த
பதார்த்தங்கள் அப்பம்இ அவல்இ பொரி வரகுப்
பொடி பழம் நுனியிலை வைட்டிய இலைய இப்படியாக

பல பொருட்களை கொண்டு செய்தன” 7

இவ்வாறு பல சடங்குகளை செய்தன.

சடங்குகளை நிறைவேற்றும் இட்டியாதியும் உதவியாளன் ஈச்சரனும் குளித்துவிட்டு புறப்படத் தயாராக வந்தார்கள். தோட்டத்திலுள்ள சில மரங்களின் கீழ் தான் எல்லா மூர்த்திகளும் இருந்தார்கள். கர்மிஇ புத்தாடையை தார் பாய்ச்சி ஏத்தாப்பு கட்டி வெற்றுடலை மறைத்துவிட்டுப் பிரம்பை கையிலெடுத்தான்.

முதல் சடங்கு மறுதாவுக்கு ஒரு ஆஞ்சிலி மரத்தினடியில் இருந்தாள் அவள் துடைத்து சுத்தப்படுத்திஇ எழுகின் கம்புகளும் ஏழியலம்பாலைக் கம்புகளும் நாட்டிய சிறு பந்தலில் குருந்தோலை செம்பருத்திப்பூ போன்ற அலங்காரங்கள் கரமி பணிவுடன் விளக்கேற்றினான். ஏழிலம் தண்டை ஆஞ்சியில் சாய்த்து வைத்தான். தீப்பந்தங்கள் வரிசையாக எரிந்து கொண்டிருந்தன. நுனியிலையின் அப்பம்இ பதார்த்தம்இ வரகுப்பொடிஇ பொரிஇ கைத்தரிஇ கோல்திரி இலைக் குமிழில் கள்ளும் சாராயமும் வெற்றிலை பாக்கு நெவேத்தியங்கள் வைக்கப்பட்டன. தர்ப்பையும் புல்லால் புனித நீர் தெளிக்கப்பட்டது.

பல நிமிடம் நீண்ட தியானம் முட்டையிடாத கன்னிக கொழியின் அலகுகளையும் கால்களையும் நனைத்த ஒருவன் அதை கர்மியின் கையில் கொடுத்தான். கோழியின் வாயில் அவன் நெல்லையும் அரிசியையும் திணித்தான். சிறகுகளையும் கால்களையும் சேர்த்துப் பிடித்தபடியே அவன் முன்னால் நகர்ந்தான. துணைக் கர்மி கோழியின் தலையை அறுத்து இலையில் வைத்தான். சூடு இரத்தல் நைவேத்தியங்களிலும் விளக்குகளிலும் சிதறி விழுந்தது கோழியை வடக்குப் பக்கம் போட்டான்.

தெய்வ வழிபாடு:

தர்புரான்களுக்கு பூழை செய்வதற்காக மறுதா பயங்கிரி மட்டுமல்ல. பெண் விரோதியும் கூட அவளுக்கு நைவேத்தியம் செய்ய எதையும் வீட்டுக்கும் கொண்டுபோகவோ பெண்கள் தொடவோ கூடாது.

முண்டனும் கோபாலனும் காட்டுக் கற்களால் அடுப்புக் கூட்டினார்கள். பச்சரிசியை வேக வைத்ததார்கள். கோழியை சுத்தம் செய்து வேக வைப்பதற்கான வேலையைத் துவங்கினார்கள்.

புளியாம்புள்ளிக்கு அவலும் பழமும் சர்க்கரைமெல்லாம் வேண்டும். கூடவே கணபதியாருக்கும் வைக்க வேண்டும். புளியாம்புள்ளி கம்புரானுக்கு சேவல் கோழியின் இரத்தம் போதும். இறைச்சி வேண்டாம். குடும்பக்காரர்களுக்கும் உறவினர்களுமெல்லாம் வழிபாடாக நேர்ந்த கோழிகள் தலையற்றுக் கிடந்து துடித்தன. கோழியின் உடல் பகுதி அவரவர்களுக்கு பெண்கள் பக்கத்தில் வந்தமர்வதிலுலோ நைவேத்தியம் உண்பதிலோ தம்புரானுக்கு விரோதமில்லை. சாத்தானுக்கு கள்ளுஇ பட்டைச்சாராயம்இ வரகுப்பொடிஇ வெற்றிலை பாக்குஇ இரத்தமும் இறைச்சியும் பெரியவருக்குத் தேவையில்லை. நைவேத்தியம் முழவதுமே அங்கே கூடியிருப்பவர்களுக்கு கண்டாகர்கணனுக்கு ஒரு கோழி மட்டும் போதும் சாராயமும் பற்றியெரியும் தீப்பந்தத்தில்

கௌளிப் பொடி எறிந்த வெளிச்சமும்.திரும்பவும் மறுதாவின்முன் கோழி இறைச்சியும் பச்சரிசிச் சோறு கூடவே கள்ளும் சாராயங்கள் ஆண்கள் அனைவரும் பங்குபோட்டுத் தின்றார்கள். எல்லாம் முடிந்த பிறகு உதவி கர்மிஇ முக்கண் தேங்காயை உடைத்து இளநீரை இரண்டாகப் பகிர்ந்து வைத்தான். கர்மிஇ துளசியிலையைக் கிள்ளிப்போட்டு நல் நேரத்தை தெரிந்து கொள்வதற்காக ராசி பார்த்தான்.

இதெல்லாம் சமயச் சடங்கு இல்லை. சிலர் செய்து கொண்டிருப்பவை மட்டும் தான். எல்லாவற்றையும் பார்த்தும் பங்கு வகிர்த்தும் சோர்ந்துபோன கொச்சுராமன் விலகி நின்று கொண்டிருக்கும் குஞ்ஞாதிச்சனிடம் ரகசியமாகக் கேட்டா ' அப்பன் மட்டும் சண்டையைப் போடட்டும் நான் எல்லாத்தையும் அள்ளியெடுத்து சாக்கடையிலே வீசிடுறேன்."

பத்தாம் உதயத்தின் போது 'நீரருத்தல்' எனும் பெயரில் வந்து சேரும் உறவினர்களுக்கெல்லாம் சாப்பிடவும் குடிக்கவும் படுக்கவும் இடம் கொடுக்க வேண்டும். அவாகள் தாராளமாக உண்டு. உறங்கி மகிழ்ச்சியுடன் திரும்பிப் போவார்கள் குடிலில் உள்ளவர்களுக்கு மூர்த்தியின் அனுக்கிரகம் அடுத்த வருடமும் இது போலவே நடக்க வேண்டுமென்று எல்லோரும் சொல்வார்கள். இப்படியக எத்தனை வருடங்கள் ஓடிவிட்டன என்று கூறிக் கொண்டார்கள்.

கள்ளுண்ணுதல்:

கொச்சு ராமன் வைத்தியம் செய்வதால் சில நேரங்களில்அவனால் விவசாயம் செய்ய முடியாது அந்த சமயத்தில் வந்து தொல்லை செய்வார்கள் மருந்துகள் தெரியும் என்னும் வி'யத்தை மலையடிவாரக் கிராமத்திலுள்ளவர்கள் அனைவரும் நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார்கள். அது மட்டுமல்ல பிரதிபலனாக எது கொடுத்தாலும் வாங்க மாட்டான் கல்லுவாதுக்கல் சாண்டியின் மகன். நாடன் பன்றி இறைச்சி தின்றிருக்கின்றான். அது ஜீரணமாகாமல் வாந்தியும் பேதியும் வந்தது சாண்டி கொச்சு ராமனைத் தேடியலைந்தான்.

கொச்சு ராமனுக்கு ஒரு கொப்பை நயம் கள்ளு வேண்டுமென்பதில் கொச்சுராமனுக்கு நிர்ப்பந்தமிருந்தது. கள்ளுக் கடைக்குப் போகமாட்டான் மணமில்லையென்பதால் தான் கள்ளு கிலிடப்பதற்கான வழியை இப்படி கண்டு பிடித்திருந்தால் கள்ளு இறக்கும் குஞ்ஞிக் குஞ்ஞை அவன் கூட்டு பிடித்துக் கொண்டான். அவனுக்கு உதவியாக இரண்டோ மூன்றோ பனைகளில் ஏறியிறங்குவான். குலை கட்டவும் பானை சீவவும் என்று அவனுடன் நடந்து இதையும் கற்றுக் கொண்டான். புனங்குலையின் கருத்துகள் ஒவ்வொன்றையும் கவனமாகப் பிடித்து திருப்பி இரண்டு கைகளையும் சேர்த்துப் பிசைந்து கொண்டிருந்தான்.

சாண்டியின் கொச்சுராமன் மருந்துகளை கொடுத்தான் கண்ணன் வாழையிலையில் பொதிஞ்சு அடுப்புக்குள்ள கனல் சாப்பல்லே மூடி வைக்கணும் கொஞ்ச் நேரத்திலே இலை வாடிடும். ஆதை எடத்து எலையிலிருக்கற தண்ணீரோடு சேத்து

மருந்த அரைச்சு இந்துப்பு கலந்து
நாக்குலே தேச்சுச் கூடு மாறிடம் தாகம்
அதிகமா இருந்தா சூடான கஞ்சித் தண்ணி
கொஞ்சம் குடுக்கலாம்" 7

சாண்டி வைத்தியனை உள்ளே அழைத்தாள் குழைய வேக வைத்த மரச்சீனிக் கிழங்கு உலர வைத்த இறைச்சி ஒரு குப்பியில் சாராயம் கொச்சு ராமன் சந்தேகமாகக் கேட்டான் இது இறைச்சி தான என்று கேட்டான் மாடு நல்ல ஒண்ணா நம்பர் சாதனம் கொச்சு ராமனுக்கு குடல் வெளியே வந்துவிடும் போல் குமட்டியது. ஆனால் அவன் வெளியே இறக்கினான். கோமாமிசம் மலை அரயனுக்குக் கூடாது. இது சமைக்கும் வீட்டிலிருந்து தண்ணீர் கூட அவர்கள் குடிக்க கூடாது. அதுதான் அவர்களின் பாரம்பரியமாகும்.

தொகுப்புரை:

மானுட இனக்குழு மக்கள் சேர்ந்து வாழும் பொழுது அவர்களுள் விரும்பத்தக்க நிலையில் ஒரு நல்ல இசைவு அமையுமானால் அங்கே பண்பாட்டைக் காண இயலும். இவ்வாறு இசைந்து ஒழுதுதலைப் பண்பாடு' எனலாம். பண்பாட்டுஅடையாளங்களுள் முதன்மையானதாகச் சடங்குகள் கருதப்படுகின்றன. மனிதனது சிந்தனைத்திறம் வளர வளரஇ வாழ்க்கை நிலை உயர உயர நாகரிகமும் தோன்றிப் பெருகிவரும் சூழலில் சடங்குகளும் பெருகின. சடங்குகள் மரபு வழிப்பட்டவை. மனிதனோடும் இனக்குழுவோடும் தொடர்புடையன. இச்சடங்குகள் அனைத்துத் தரப்பு மக்களிடமும் உள்ளன. இனக்குழு மக்களிடம் இவை வாழ்வாதாரமாக உள்ளன.

சான்றொண் விளக்கம்

1. நாராயணன் சின்ன அரயத்தி. ப.28
2. நாராயணன் சின்ன அரயத்தி. ப.35
3. நாராயணன் சின்ன அரயத்தி. ப.45
4. நாராயணன் சின்ன அரயத்தி. ப.48
5. நாராயணன் சின்ன அரயத்தி. ப.52
6. நாராயணன் சின்ன அரயத்தி. ப.68

7 நாராயணன்இ சின்ன அரயத்தி. ப.72

பார்வை நூல்கள்:

1. நாராயணன், and குளச்சல் மு.யூசப். *சின்ன அரயத்தி*. காலச்சுவடு பதிப்பகம், கே.பி.சாலை நாகர்கோவில், டிசம்பர் 2010.
2. அல்போன்சா, எஸ். *மலைவேடர்களின் நம்பிக்கைகள்*. பதிப்புத்துறை, மதுரைகாமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1985.
3. அறவாணன், க.ப. *தமிழ் மக்கள் வரலாறு*. தமிழ்க்கோட்டம், சென்னை, 2005.
4. அறிவுடை நம்பி, சே.க. *பண்டைய தமிழரும் இன்றைய*. செந்தமிழ்ப் பதிப்பகம், மேட்டுவலசு, 2001.

References:

1. Narayanan, and Kulachal M. Yusuf. *Chinna Arayaththi*. Kalachuvadu Pathippagam, K.P. Salai Nagarkoil, Dec. 2010.
2. Alphonsa, S. *Malaivedargalin Nambikkaigal*. Pathipputhurai, Maduraikamarajar Palkalaik Kazhagam, Madurai, 1985.
3. Aravanan, K.P. *Tamil Makkal Varalaru*. Tamizhkkottam, Chennai, 2005.
4. Arivudai Nambi, Se.K. *Pandaiya Tamizharum Indrayaiya*. Senthamizh Pathippagam, Mettuvallasu, 2001.

KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN **2456-5148** *(Online)*
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

The Lifestyle Rituals of the Malayali Tribal people of Kolli hills

Dr. S. Anulakshmi
Assistant Professor, Department of Tamil Studies Holy Cross College (Autonomous), Tiruchirappalli - 620 002
eMail: anuganeshan2018@gmail.com ORCID: https://orcid.org/0009-0001-9183-8145

Received 25/04/2025
Accepted for publication 30/04/2025
Published 01/05/2025

Abstract

The Kurinji land is the most important of the ancient Tamil lands. The people who have been carrying out their livelihoods based on this land are the tribal people. Although there are various types of people living in the world, the tribal people are the ones who have followed the most ancient culture in the long evolution, but today's modernizing environment is changing the uniqueness of the cultural traditions of these tribal people and making them live a monotonous life. However, there are some tribal communities in the world that have the power to maintain their own lifestyle traditions in the face of such attacks. By identifying and studying these tribal communities, it is possible to restore their ancient cultural identities. It is noteworthy that the Malayali tribal community is preserving its tribal traditions in today's Tamil environment. In this way, this article is based on documenting the lifestyle rituals of the people.

Keywords*: Tribal People, Ancient Social Culture, Mankind. Literatures, Kurinji land, Kolli Hills*

கொல்லிமலை மலையாளி பழங்குடி மக்களின் வாழ்வியல் சடங்குகள்

முனைவர் சு.அனுலெட்சுமி
உதவிப்பேராசிரியர் தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி-620 002
eMail: anuganeshan2018@gmail.com ORCID: https://orcid.org/0009-0001-9183-8145

கட்டுரைச் சுருக்கம்:

மனித குலத்தின் தொல் சமூகப் பண்பாட்டில் ஏற்பட்ட பல படிநிலை வளர்ச்சிகளை அறிவதற்குச் சாட்சியாகத் திகழ்பவர்கள் பழங்குடி மக்களே. இலக்கியங்கள் மனித வாழ்க்கையைப் பதிவு செய்யும் களங்களாக உள்ளன. புனைகதை இலக்கிய வடிவங்களுள் ஒன்றான புதின இலக்கிய வடிவத்தில் பழங்குடி மக்களின் வாழ்வுமுறைகள் ஆவணங்களாகப் பதிவாகியுள்ளன. அவற்றை ஆய்வு செய்வதன் வழியாகத் தமிழினத்தின் தொன்மைச் சமூக வளர்ச்சியினை அறிய இயலும். இலக்கியங்களில் பதிவாகியுள்ள பழங்குடியினர் குறித்த ஆய்வுகள் தமிழாய்வுச் சூழலில் குறைவு. இவ் ஆய்வு, தமிழ் இனவரைவியல் புதினத்தில் இடம்பெற்றுள்ள பழங்குடி மக்களின் வாழ்வியலைப் புலப்படுத்தும் வகையில் அமைகின்றது.

திறவுச்சொற்கள்: *பழங்குடி மக்கள், பண்டைய சமூகப் பண்பாடு, மனிதகுலம். இலக்கியங்கள், குறிஞ்சி நிலம், கொல்லி மலைகள்*

ஆய்வுச்சுருக்கம்

பண்டைய தமிழ் நிலங்களில் முதன்மையானதாக திகழ்வது குறிஞ்சி நிலம் ஆகும். இந்நிலத்தினை மையமாகக் கொண்டு தமது வாழ்வியலை மேற்கொண்டு வருபவர்கள் பழங்குடி மக்கள். உலகில் பல்வேறு வகையான மக்கள் இனம் வாழ்ந்து வந்தாலும் நீண்ட நெடிய பரிணாம வளர்ச்சியில் மிகவும் தொன்மையான பண்பாட்டை பின்பற்றுபவர்களாகத் திகழ்பவர் பழங்குடிகள் ஆனால் இன்றைய நவீனமயமாக்கள் சூழல் இப்பழங்குடி மக்களின் பண்பாட்டு மரபுகளின் தனித்துவத்தை மாற்றி ஒற்றை தன்மை கொண்ட வாழ்க்கைக்கு உட்படுத்தி வருகின்றது. எனினும் இத்தகைய தாக்குதல்களை எதிர்கொண்டு தமக்குரிய வாழ்வியல் மரபுகளை தக்க வைத்துக்கொள்ளும் வல்லமை உடைய சில பழங்குடி சமூகங்களும் உலகில் இருப்பதை காணப்படுகின்றன. இப்பழங்குடி சமூகங்களை இனம் கண்டு ஆராய்வதன் மூலம் அவர்களின் தொன்மையான பண்பாட்டு அடையாளங்களை மீட்டெடுக்க இயலும் இன்றைய தமிழ் சூழலில் மலையாள இன பழங்குடி சமூகம் தனது தொல்குடி மரபுகளை காத்து வருவது குறிப்பிடத்தக்கது அவ்வகையில் மக்களின் வாழ்வியல் சடங்குகளை ஆவணப்படுத்துவதன் அடிப்படையில் இக்கட்டுரையானது அமைகின்றன.

முன்னுரை

தமிழகத்தில் 63க்கும் மேற்பட்ட பழங்குடியினர் பல்வேறு நிலப்பகுதியில் வசித்து வருகின்றனர். அவர்களில் மலையாள இனப் பழங்குடி மக்களும் அடங்குவர் இவர்கள் கிழக்கு தொடர்ச்சி மலையை தங்களின் வாழ்விடமாக கொண்டுள்ளனர். ஜவ்வாது மலை ஏலகிரி மலை, பச்சை மலை, கொல்லிமலை என மலைப்பகுதியில் வாழ்கின்றனர் கொல்லிமலையில் வாழும் மலையாளி பழங்குடியினர் வாழ்வியல் சடங்குகள் என்பது மக்களின் கலாச்சாரம் நம்பிக்கைகள் மற்றும் மரபுகளை பிரதிபலிக்கும் விதமாகவே ஒவ்வொரு சடங்குகளும் அமைந்துள்ளன இயற்கையுடன் இணைந்து வாழும் இவர்களின் வாழ்க்கை இயற்கையோடு கொண்ட ஆழமான உறவு மற்றும் ஆன்மீக நம்பிக்கைகளை உள்ளடக்கிய காணப்படுகின்றன. பலவிதமான சடங்கு முறைகளை அவர்களின் வாழ்க்கையோடு பின்னி பிணைந்துள்ளன முன்னோர்களின் வழிகாட்டுதலின் படி வழிவழியாக இவை நிகழ்த்தப்படுகின்றன அத்தகைய சடங்குகளின் வகைகளையும் அவற்றை கையாளும் முறைமைகளையும் ஆராயப்படுகின்றன.

ஆய்வு நோக்கம்

கொல்லிமலை மலையாளி பழங்குடி மக்களிடையே காணலாகும் சடங்கு முறைகளையும் அவை நிகழ்த்தப்பெறும் விதத்தினையும் ஆராய்வதே நோக்கமாகும்.

பிறப்பு சடங்கு

ஒவ்வொருவரின் வாழ்விலும் வெவ்வேறு கட்டங்களில் சடங்குகள் இடம் பெறுகின்றன பிராமண குருமார்கள் திருமணம் போன்ற சடங்குகளை நடத்த அழைக்கப்படுவதில்லை. குழந்தை பிறப்பு என்பது குடும்பத்திற்கு ஒரு புதிய உறவை வரவேற்கும் நிகழ்;வாகும் பெண்கள் கருத்தரிப்பை ஒட்டியே பிறப்பை ஒட்டியே அல்லது குழந்தைக்கு பெயர் வைக்கும் நாளையொட்டியை எந்தவொரு முக்கியமான சடங்குகளும் இம்மக்களிடம் இடம் பெறுவதில்லை. கொல்லிமலையில் பெரும்பாலும் கீழ்க்காணும் பெயர்களையெ தங்களுடைய குழந்தைகளுக்கு சூட்டுகின்றனர் ஆண் குழந்தை எனில் கொங்கன் வடமன் பிடாரி சீரங்கன் சின்னமுத்து, பொன்னுசாமி காளி என்ற பெயர்களை சூட்டுகின்றனர் அதேபோல பெண்களுக்கு கொங்காயி வடமாயி பொன்னம்மா, பாப்பாயி பிடாரி காளி என்ற பெயர்களை பெண்களுக்கு சூட்டுகின்றனர் தற்போது சினிமா நடிகர்களின் பெயர்களே மலையாளர்களிடம் பிரபலமாகி காணப்படுகின்றது

குழந்தை பிறந்தவுடன் எந்த சடங்கு இல்லையெனில் ஏழு முதல் பதினைந்து நாட்கள் தாயும் குழந்தையும் தூய்மையற்றவர்களாக கருதுகின்றனர் பிறப்புக்கு பின் மூன்றாவது நாளில் தாய்க்கும் குழந்தைக்கும் ஒரு சம்பிரதாயமான குளியல் நடத்தப்படுகிறது தாய்க்கு கோழி குழம்புடன் கேழ்வரகு களி அல்லது நெல் சோறு அளிக்கப்படுகிறது இவ்வாறு குளிப்பாட்டி மேற்கூறிய உணவை தாய்க்கு அளிப்பதும் மூன்றாம் நாள் தீட்டு கழிகிறது என்று அழைக்கப்படுகிறது இதுபோலவே ஏழாவது நாளும் தீட்டு கழிக்கப்படுகிறது சில வீடுகளில் பதினைந்தாம் நாளும் இது தொடர்கிறது. குழந்தை பிறந்த பிறகு தாய்க்கு தொடர்ந்து தினை கஞ்சி வழங்கப்படுகிறது இது தாயின் வயிற்றை சுத்தப்படுத்த உதவுகிறது என்று கூறுகிறார்கள். குழந்தை பிறந்த பிறகு ஒரு குறிப்பிட்ட நாட்கள் வரை குடும்பத்தினருக்கும் குழந்தையின் நெருங்கிய தந்தை வழி உறவினர்களும் தீட்டு பட்டவர்களாகவே கருதப்படுகின்றனர் குடும்பத்தினர் அல்லாதவர்கள் பெரும்பாலும் தீட்டுக்கொண்ட குடும்பத்திலிருந்து உணவு உட்கொள்வதில்லை.

ஐந்தாவது அல்லது நான்காவது மாதத்தில் சம்பிரதாயமாக உணவு ஊட்டுதல் நடக்கிறது. இனிப்பு பொங்கல் தயாரித்து கடவுளுக்கு படையல் இட்டு வழிபட்டபின்னர் பெரியவர்கள் குழந்தைக்கு இனிப்பு பொங்கலை ஊட்டுகிறார்கள் குழந்தைக்கு உணவு ஊட்ட குறிப்பாக நல்ல மனம் கொண்டவர்களை அழைப்பார்கள். நெருங்கிய உறவினர்கள் மட்டுமே அழைக்கப்படுவார்கள் இச்சடங்கின் முடிவில் விருந்து அளிக்கப்படுகிறது ஓராண்டு நிறைந்த பிறகு எளிய முறையில் விருப்பத்திற்குரிய கோவிலில் குழந்தைக்கு மொட்டை அடிக்கும் சடங்கு நடைபெறுகிறது. பெண் குழந்தைக்கும் ஆண் குழந்தைக்கும் காது குத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் இது வழக்கமாக குழந்தைகளுக்கு ஒன்றரை வயதாகும் பொழுது செய்யப்படுகிறது. காது குத்துதல் என்பது சமூக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும் இந்நிகழ்ச்சியில் ஓரளவிற்கு விமர்சனயமாக கொண்டாடப்படுகிறது உறவினர்கள் குழந்தைக்கு பரிசுப்பொருளாகவோ பணமாகவோ வழங்குகிறார்கள்.

பூப்புச் சடங்கு

இச்சடங்கில் குழந்தையின் தாய் மாமன் மிக முக்கிய பங்கு உண்டு. பாரம்பரியமாக பெண் குழந்தைகள் பூப்படையும் நிகழ்வினை ஆடம்பரமாகவோ விரிவாகவோ சடங்குகள் எதுவும் செய்யப்படுவதில்லை. ஏனென்றால் அது தீட்டு சார்ந்த விஷயமாகவே கருதப்படுகிறது மேலும் இது குடும்பத்தினருக்கும் பெற்றோருக்கும் ஒரு மகிழ்ச்சியான தருணமாக கருதப்படுகிறது. பூப்படைதலை ஒட்டி பெண்ணை 15 முதல் 30 நாட்கள் வரை தனித்திருக்க செய்கிறார்கள்.

தீட்டு குடிசை எனப்படும் ஒரு குடிலில் பெண்ணை இருக்க செய்கிறார்கள் பெண்ணுக்கு உளுந்தங்களி முட்டை மற்றும் நல்லெண்ணெய் அளிக்கப்படுகிறது தீட்டு நாட்களில் நெருங்கிய உறவினர்கள் நல்ல உணவுப் பொருள்களுடன் பெண்ணை வந்து சந்திக்கிறார்கள் வழக்கமாக புளிசோறு கொண்டு வருகிறார்கள். ஓடையிலோ கிணற்றிலோ அவளுக்கு குளியல் நடத்தப்படுகிறது அன்று அவளுக்கு புது துணிகளை உடுத்தக் கொடுக்கிறார்கள் இச்சடங்கானது முக்கியமாகவும் மிக எளிமையாகவும் ஆடம்பரமின்றி நடந்து வருகிறது. மூன்று மாதத்திற்கு பின் பெண்ணும் அவள் குடும்பத்தினரும் தீட்டுப்பட்டவராகவே கருதப்படுகின்றனர் பெண் மூன்று மாதத்திற்கு அதிகமாக வெளியில் நடமாடுவதில்லை.

திருமணச்சடங்கு

திருமணம் மலையாளர்களின் மரபுப்படி மிக எளிய செலவற்ற சடங்கு தான் இருப்பினும் உறவினர்களும் நண்பர்களும் ஒன்று சேர ஒரு மகிழ்ச்சியான சடங்காக கருதப்படுகிறது.

“வளையாத பட்டுக்கு

நனையாத காரைக்கு

நெருப்புல சந்தனம்மா

நெதானிச்சு அண்ணா

பொண்ணு தாரியுh அண்ணா"

மாப்பிள்ளை வீட்டார் பெண் கேட்பதை தொடங்குகிறார்கள் ஒரு நல்ல நாளில் மணமகனின் நெருங்கிய உறவினர்கள் ஊர் பெரியவர்கள் ஆகியோருடன் இணைந்து பெண் வீட்டிற்கு செல்கின்றனர். பெண்வீட்டார் மகிழ்வுடன் உபசரிக்கின்றனர் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாரை விசாரிக்கும் மரபு இனிமையானது பெண் வீட்டார் சார்பாக அந்த ஊர் பெரிய தனக்காரர் ஒருவர் மாப்பிள்ளை உறவினரை பார்த்து **அன்ன கண்டு வந்தது உறவுமுறை?** என்று கேட்கிறார்கள் அங்கு வந்ததற்கு என்ன காரணம் என்பதையே இப்படி கேட்கிறார்கள் மாப்பிள்ளை வீட்டாரின் சார்பில் அந்த ஊர்க்கவுண்டர் **பெண்ணுள்ள வீட்டிற்குள் பூவுள்ள வீட்டிற்குள் பெண் கேட்க வந்தேன்** என்று கூறுகிறார் மீண்டும் முதலில் கேட்ட கேள்வியை பெண் வீட்டார்; கேட்பார்கள் அதற்கு மாப்பிள்ளை கேட்டார் **விக்னேஸ்வரனை கண்டு வந்தேன்** என்று கூறுவார்கள் அதற்கு பின்னரும் ஒருமுறை அந்த கேள்வியை பெண் வீட்டார் கேட்கும் பொழுது மாப்பிள்ளை வீட்டார் **சந்திர சூரியனை கண்டு தேரடியில் உட்கார்ந்தேன் பெண்ணுப் பரிசத்தத்தைச் சொல்லுங்க** என்று கூறுவார்கள். இதற்குப் பின் இரு வீட்டாரும்; இணைந்து பரிசு தொகையை பேசி முடிவு செய்வார்கள்.

பரிசுத்தொகை என்பது பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டாரால் வழங்கப்படும் தொகை அந்நாட்களில் அதாவது 60 ஆண்டுகளுக்கு முன் பரிசுத்தொகை ரூபாய் ஐந்து என்று அளவில் இருந்ததாக பெரியவர்கள் நினைவு கூறுகிறார்கள். மரபுப்படி பரிசு பணம் என்பது பதினொன்றாக இருந்தது ஆனால் அத்தொகை இதைவிட சில ரூபாய்கள் அதிகமாக இருக்கலாம் பரிசு பணத்தை பொருத்தவரை மற்றொரு குறிப்பிட்ட தக்க செய்தி என்னவெனில் அதில் ஒரு பங்கு பெண்ணின் தாய்மாமனுக்கு வழங்கப்படுவதாகும். அதை உரிமைக்காரன் காசு என்று வழக்கத்தில் கூறுகிறார்கள் சகோதரியின் மகனை அல்லது மகளை திருமணம் செய்யும் உரிமை முதலில் தாய் மாமனுக்கு இருப்பதால் உரிமைக்காரன் காசு மாமனுக்கு வழங்கப்படுகிறது. திருமணத்திற்கு சீர் சாமான்கள் வாங்க பயன்படுத்துகின்றனர் திருமணத்திற்கு முந்தைய தினம் ஆடு அரிசி நெல் வெற்றிலை பாக்கு உப்பும் மிளகாய் மஞ்சள் புளி போன்ற பொருட்களை மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்கு எடுத்துச் செல்வார்கள் இந்த வழக்கம் **ஆடு அரிசி** அல்லது **ஆட்டரிசி கொண்டு போவது** என்று அழைக்கப்படுகிறது ஆட்டரிசி கொண்டு சென்ற பிறகு பெண் எடுப்பது உறுதியானதாக கருதுகிறார்கள் அதுவரை திருமணம் நடக்கும் என்ற உத்திரவாதம் கிடையாது .

ஆடும் அரிசியும் வந்த பிறகுதான் மணமக்கள் வீட்டார் உணவு சமைக்க துவங்குகிறார்கள் மாப்பிள்ளை வீட்டார் கொண்டுவரும் ஆட்டரிசியை கொண்டு சமைக்கும் உணவையே விருந்தினருக்கும் உறவினருக்கும் பரிமாறுவார்கள் பொதுவாக திருமணம் மாப்பிள்ளை வீட்டில் தான் நடக்கிறது. அண்மைக்காலம் வரை மலையாளிகளின் திருமணம் கோவில் மந்தைகளில் தான் நடத்தப்பட்டன **செங்கூரிச் சேலை** எனப்படும் சேலையை மணமகளின் பெற்றோர் மணமகளின் வீட்டிற்கு வருவார் இதுபோலவே மாப்பிள்ளைக்கு அவர் பெற்றோர் **முண்டாங்கி வேட்டி** என்ற வேட்டியை வழங்குவார்கள், தாரை தப்பட்டை போன்ற இசைவாத்தியங்கள் முழங்க நாட்டுப்புறப் பாடல்கள் பாடிக்கொண்டே மணப்பெண்ணை அழைத்துச் செல்வார்கள் மாப்பிள்ளை வீட்டை நெருங்கிய உடன் ஊர் பெரிய தனக்காரர் மணமகளின் நெற்றியில் சந்தன பொட்டு வைத்து வரவேற்பார். அவரும் ஊரின் மற்ற பெரியவர்களும் பாட்டு பாடி மணப்பெண்ணே வரவேற்பார்கள் மணமகன் வீட்டிற்குள் மணப்பெண் நுழைவது செல்வத்திற்குரிய தெய்வமான லட்சுமி வருகையை ஒப்பிடப்படுகிறது.

ஊர் கவுண்டரின் தலைமையில் திருமணச் சடங்கு நடைபெறுகிறது. கரக்காரர் திருமணச் சடங்குகளை நடத்தி வைக்கிறார். ஊர்க்கவுண்டர் மணமக்களை நெற்றியில் சந்தன பொட்டு வைத்து மணவறைக்கு வரவேற்கிறார்கள் சம்பிரதாயமாக தாய்மாமன் மணப்பெண்ணை மணவறைக்கு அழைத்துச் செல்கின்றான். ஊர் பெரிய தனக்காரரின் ஆசிப் பெற்ற பிறகு தாலி கட்டும் சடங்கு நடக்கிறது திருமணத்தின் அடையாளமாக அணிவிக்கப்படும் தாலி தங்கம் அல்லது வெள்ளியில் செய்யப்படும் அணிகலன்களாகும். தாலியையும் மாப்பிள்ளை பெண்ணின் கழுத்தில் வைத்தவுடன் கரகக்காரர் முதல் முடிச்சை போட்டவுடன் மற்றதை மாப்பிள்ளை போடுவார் முகூர்த்தம் முடிந்த பின்னர்

“ஆல போல தளை தளைஞ்சு
அருகு போல வேர் ஊணி
கல்லிலே நீர் பூத்தாப்பல
கனத்த எரும பாலு கறந்தாப்பல
நெல்லுல நீர் பூத்தாப்பல
மூங்கி போல தள தளைஞ்சி
முறியாத வாந்திரு”

பல பாடல்களைப் பாடி மணமக்களை வாழ்த்தி மகிழ்கின்றனர். தாலி கட்டுவதை தொடர்ந்து கெணங்காட்டப்போறது என்ற ஒரு சடங்கும் நடத்தப்படுகிறது சடங்கின்படி மணப்பெண்ணை ஒரு குளம் அல்லது நீரோடக்கு அழைத்து செல்கின்றனர். மேள வாத்தியங்களுடன் உறவினர்களும் உடன் செல்வார்கள் தாரை தப்பட்டை முழங்க உறவினர்கள் பாடிக்கொண்டே கூட வருவார்கள்.

கங்கண வெற்றிலையைத் தண்ணீரில் விடுவார்கள் கங்கண வெற்றிலை என்பதை மஞ்சள் வைத்து கயிற்றில் ஊர்க்கவுண்டர் அவர்களால் பெண்ணிற்கும் மாப்பிளைக்கும் கட்டுவதாகும் இதை தண்ணீரில் விட்ட பிறகு அரிசி முதலியவற்றை வைத்து சாமி கும்பிடுகின்றனர் அதன் பிறகு மணப்பெண் தன் தலையில் ஒரு சொம்பு நிறையத் தண்ணீரை சுமந்து கொண்டு வீட்டிற்குள் செல்வார்.

இச்சடங்கு முடிந்த பின்னர் மாப்பிள்ளை வீட்டார் மணப்பெண்ணுக்கு கூறைப் புடவை ஒன்றை அன்பளிப்பாக வழங்குவார்கள் இதை தன் பிறந்து வீட்டிற்கு செல்லும் பொழுது மணப்பெண் அணிந்து செல்வார் திருமண நாளன்று அல்லது மறுநாளோ மணப்பெண் பிறந்து வீட்டிற்கு செல்லும் பொழுது ஐந்து வல்லம் அரிசி மணப்பெண் உடுத்தி வந்த புடவை மற்றும் பரிச பணத்தின் மீதத்தை ஒரு புது கூடையில் வைத்து அனுப்புவார்கள் பணத்தை சீலை மடிப்பில் வைத்து அனுப்புவார்கள். இவ்வாறு அனுப்புதலை **வட்டி அரிசி கொண்டு போதல்** என்று வழங்கப்படுகிறது.

சில நாட்களில் சம்பந்தம் கலக்குதல் என்ற சடங்கு நடக்கிறது சடங்கின் போது மாப்பிள்ளை வீட்டார் சமைத்த அரிசியை ஒரு புதுக் கூடையில் வைத்து நடுவில் அச்சு வெல்லம் வைத்து எடுத்து செல்வார்கள். பின்னர் சமைத்த சோறு மணப்பெண்ணின் உறவினர்களுக்கும் அவர் ஊரை சேர்ந்தவர்களுக்கும் விருந்து வழங்குவார்கள் சம்பந்தம் கலக்கிறது என்று வழங்கப்படுகிறது. இதை மணமகள் மற்றும் மணமகன் வீட்டார் ஒருவர் வீட்டிற்கு மற்றொருவர் செல்வதில்லை மலையாளர்களைப் பொறுத்தவரையில் திருமண ஏற்பாடு செய்வதும் திருமணம் நடத்துவதும் நெருங்கிய உறவினர்கள் மட்டுமே உரிய சடங்குகள் கிடையாது பாரம்பரியமாக ஊரார் அனைவருமே மொத்தமாக திருமண ஏற்பாடுகளில் கலந்து கொள்வர். திருமணம் முறையானது அன்றையக் காலம் முதல் மணமகளின் உடையானது ஆறு அல்லது பத்து ஜான் அளவுள்ள வெள்ளை துணியாகும் துணியில் ஒரு மெல்லிய சிவப்பு நிறக்கரை காணப்படுகிறது மார்புக்கு மேலே குறுக்காக கட்டப்பட்டு மேலும் ஒரு வெள்ளை துணி தோள்களின் மேல் போடப்படுகிறது. தற்போது

இந்த உடை நாகரீகமானது மறைந்து நாகரீக உடையாக மற்ற சமூகத்தினர் இடையே காணப்படும் வழக்கத்தையே இவர்களும் கையாளுகின்றனர்.

திருமணத்தின் பொழுது விருந்திற்காக இரண்டு அல்லது மூன்று பன்றிகளை விருந்தாக வழங்குவது வழக்கமாக இருக்கிறது பன்றிக்கறிக்காக அவற்றை வெட்டுவது கிராமத்து சேர்ந்த சிலருடைய பொறுப்பாகும். சமைக்காத பன்றிக்கறியை கிராமத்தில் உள்ள வீடுகளுக்கு வழங்கப்படுகிறது விருந்தினர்களுக்கு பரிமாறுவதற்காக கொஞ்சம் கறி வீட்டிலே சமைக்கப்படுகிறது இவ்வழக்கமானது திருமணத்தின் பொழுது பன்றிக்கறியை உணவாகவும் விருந்தாகவும் பரிமாறுப்படுவது மலையாள பழங்குடியினர் இடையே காணப்படக்கூடிய ஓர் சடங்காக நடத்தப்படுகிறது.

இறப்புச் சடங்கு

ஆண் பெண் இருபாலரின் இறுதி சடங்குகளில் வேறுபாடுகள் கிடையாது இச்சடங்குகள் விரிவானவை அல்ல சலுப்பு எனப்படும் இரங்கல் நாட்கள் மூன்று தினங்கள் மட்டுமே அனுசரிக்கப்படுகிறது. இறப்பு நேர்ந்தவுடன் இறந்தவர் தலைக்கு ஒரு விளக்கு ஏற்றப்படுகிறது ஒரு தேங்காயும் உடைக்கப்படுகிறது இறந்த நபருக்கு மரியாதை செலுத்துவதற்காக இது செய்யப்படுகிறது பட்டாசு வெடிப்பதன் மூலம் அருகில் உள்ள கிராமங்களுக்கு இறப்பு அறிவிக்கப்படுகிறது இதைத்தொடர்ந்து பறை அடிக்கப்படுகிறது.

மாமன் மச்சான் உறவு முறையில் மிக நெருங்கிய உறவினர்கள் கோடி என்ற துணியும் வாழைப்பழமும் வெற்றிலையும் அரிசியும் கொண்டு வருகிறார்கள் மற்றவர்கள் அரிசி மற்றும் பிற உணவு தானியங்களை மரியாதை நிமித்தமாக கொண்டு வந்து சேர்க்கின்றனர். இறந்தவரை குளிப்பாட்டி புது வேட்டி அணிவிப்பது ஒரு முக்கிய சடங்காகும் வாய்க்கரிசி என்பது இறந்தவரை மயான பூமிக்கு எடுத்துச் செல்லும் முன்பு நடத்தப்படும் மற்றொரு முக்கிய சடங்காகும். கட்டமொய் என்பது இறந்தவர்களின் தலைக்கு அருகே உறவினர்களும் நெருங்கிய நண்பர்களும் பணத்தை வைக்கும் ஒரு மரபாகும். பெண்கள் மயான பூமிக்கு செல்வதில்லை இறந்தவர்கள் புதைக்கப்படுகிறார்கள் இறுதி சடங்கு பெற்றோர்களின் மூத்த மகனால் செய்யப்படுகிறது இறப்பு தீட்டு மூன்று நாட்களுக்கு மட்டுமே அனுசரிக்கப்படுகிறது மரணத்திற்கு மூன்று நாட்களுக்குப் பிறகு காரியம் அல்லது கருமாதி செய்யப்படுகிறது இந்த சடங்கின் பொழுது கேழ்வரகு களி மற்றும் பன்றிக்கறியை இறந்தவர்க்கு படைப்பதுடன் முடிகிறது இந்தச் சடங்கு மிக நெருங்கிய உறவினர்கள் மட்டுமே வருகிறார்கள்.

மரணம் நடந்த வீட்டிற்கு ஒரு மாதம் வரை நெருங்கிய உறவுகள் ஆதரவு தரும் வகையில் உணவு கொண்டு செல்வது வழக்கமாகும். இதனை **சலுப்புச் சோறு** என்பார்கள் சில வீடுகளில் இறந்தவரை ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூறுகிறார்கள் பொதுவாக மலையாளர்கள் பெரியவர்களை பொங்கல் அன்றும் மற்ற முக்கிய தினங்களிலும் நினைவு கூறுகின்றார்கள் தம் மீது விழும் தீமைகளிலிருந்து நம் முன்னோர் தம்மை காப்பதாக மலையாளிகள் நம்புகின்றனர்.

முடிவுரை

கொல்லிமலையில் வாழும் மலையாளி பழங்குடி மக்கள் தங்கள் வாழ்வில் பல்வேறு விதமான சடங்குகளை பின்பற்றுகின்றனர். பிறப்பு முதல் இறப்பு வரை நடைபெறும் நிகழ்வில் தங்கள் இனக்குழு மக்களே உரிய பழக்கவழக்கங்களை நம்பிக்கையின் அடிப்படையிலேயே சடங்குகளை நடத்துகின்றனர். இவை முன்னோர்களின் வழியாக கடைப்பிடிக்கப்படுகின்றன. திருமணத்தின் போது மணப்பெண்ணுக்கு பரிச பணம் அளிப்பதும் மற்றும் பெண்களுக்கு மகப்பேறு நடந்த பின்னர் வழங்கப்படும் உணவும் தொல்குடி மக்களுக்கே உரிய பான்மையினை கடைப்பிடிப்பதையும் அறியமுடிந்தன. மேலும்

பழமையினை பேணும் இம்மக்களிடமும் நவீன காலத்தின் வளர்நிலை இவர்களின் பாரம்பரியத்தை அழிப்பதாகவும் வருந்துகின்றனர். இம்மக்களின் வாழ்வியல் சடங்குகள் அவர்களின் தொல்குடி மரபை பறைசாற்றுவதாக உள்ளமையினை அறிய முடிந்தன.

தகவலாளிகள்

1. ராஜம் வயது 62 மஞ்சள்பட்டி
2. அழகம்மை வயது 72 ஆலவாடி
3. பொன்னம்மா வயது 67 கீழ்செங்காடு
4. வடமண் வயது 62 அரியூர் நாடு
5. பூச்சி வயது 68 குண்டூர்
6. தங்கம்மாள் வயது 55 கோம்பை
7. குழந்தாயி வயது 56 வேலிகாடு
8. பெரியசாமி வயது 71 கீரைக்காடு

பார்வை நூல்கள்:

1. காந்தி, க. தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2008.
2. நற்கணவதி, மு. மண்ணில் வாழும் மலைமக்கள். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2011.
3. பக்தவத்சல பாரதி. தமிழர் மானிடவியல். அடையாளம் பதிப்பகம், 2019.
4. பக்தவத்சல பாரதி. பண்பாட்டு மானிடவியல். அடையாளம் பதிப்பகம், 2019.
5. பக்தவத்சல பாரதி. தமிழகப் பழங்குடிகள். அடையாளம் பதிப்பகம், 2017.
6. மகேஸ்வரன், சி. தமிழ்நாட்டுப் பழங்குடிக் குழுக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2024.
7. லெட்சுமி. ஜவ்வாது மலைவாழ் மலையாளிப் பழங்குடியின மக்களின் வாழ்வும் மொழியும். மதன்மோனிகா பதிப்பகம், 2020.

References:

1. Gandhi, Ka. *Tamilar Pazhakkavalakkangalum Nambikkaigalum*. Ulaga Thamizharaychi Niruvanam, 2008.
2. Narkanavathi, Mu. *Mannil Vazhum Malaimakkal*. New Century Book House, 2011.
3. Baktavatsala Bharati. *Tamilar Manidaviyal*. Adaiyalam Pathippagam, 2019.
4. Baktavatsala Bharati. *Panbattu Manidaviyal*. Adaiyalam Pathippagam, 2019.
5. Baktavatsala Bharati. *Tamilaga Pazhangudigal*. Adaiyalam Pathippagam, 2017.
6. Maheshwaran, Si. *Tamilnattup Pazhangudik Kuzhukkal Ethirkollum Sikkalkal*. New Century Book House, 2024.
7. Letchumi. *Javadhu Malaivaazh Malayalip Pazhangudiyina Makkalin Vazhvum Mozhiyum*. Madhanmonika Pathippagam, 2020.

KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN **2456-5148** *(Online)*
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

Sivapuranam in the editions of Thiruvasagam

G. Vadivelu1, Dr. T. Kannan2,

1. Ph.D. Scholar Reg. No: 06379, Department of Rare Manuscripts, Faculty of Manuscriptology, Tamil University, Thanjavur.

2. Research Guide, Department of Rare Manuscripts, Faculty of Manuscriptology, Tamil University, Thanjavur.

Received 25/04/2025
Accepted for publication 30/04/2025
Published 01/05/2025

Abstract

This study focuses on Manikkavasagar's revered Thiruvasagam, a profound devotional work within the Saiva tradition. Celebrated for its deeply moving verses that are said to "melt the heart," Thiruvasagam captivates not only Saivites but also adherents of other faiths, transcending religious boundaries. A notable example is the Christian missionary G.U. Pope, who, deeply affected by its spiritual essence, translated it into English, underscoring its universal and divine appeal.The transformative power of Thiruvasagam is further attested by prominent Tamil saints and scholars. Sivaprakasar, in his Nanmanimalai, marvels at its capacity to soften even a "stone heart," leading to emotional and spiritual awakening. Ramalinga Adigal extends this impact, positing that even birds and wild animals are moved to spiritual insight by its verses. Sundaram Pillai similarly highlights its ability to purify the mind and evoke profound devotion. The widely known proverb, "Those unmoved by Thiruvasagam are unmoved by anything," further accentuates its unparalleled emotive and spiritual force.The primary objective of this research is to analyze selected editions of Sivapuranam, the introductory and significant poem within Thiruvasagam. This study will undertake a comparative examination of four specific editions: G.U. Pope's edition, the Saiva Paripalana Sabai's publication, M. Subramania Mudaliar's edition, and N. Kandasamy Pillai's edition..

Keywords: *Sivapuranam, Thiruvasagam*

திருவாசகப் பதிப்புகளில் சிவபுராணம்

க.வடிவேலு[1], முனைவர் த. கண்ணன்[2],

[1.] முனைவர்ப் பட்ட ஆய்வாளர், அரிய கையெழுத்துச் சுவடித்துறை, சுவடிப்புலம்,

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

[2.] நெறியாளர், அரிய கையெழுத்துச் சுவடித்துறை, சுவடிப்புலம்,

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கட்டுரைச் சுருக்கம்:

இந்த ஆய்வு, சைவ மரபில் ஒரு ஆழ்ந்த பக்தி நூலாகப் போற்றப்படும் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தை மையப்படுத்துகிறது. "நெஞ்சை உருக்கும்" எனப் புகழப்படும் இதன் பாடல்கள், சைவர்களை மட்டுமல்லாமல், பிற மதத்தினர் மனதையும் கவர்ந்திழுத்து, மத எல்லைகளைக் கடந்து நிற்கின்றன. இதற்கு ஒரு குறிப்பிடத்தக்க சான்றாக, கிறித்தவ மதப் பிரச்சாரகர் ஜி.யு. போப், திருவாசகத்தின் ஆன்மீக சாரத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்டு, அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இது அதன் உலகளாவிய மற்றும் தெய்வீக ஈர்ப்பை மேலும் எடுத்துக்காட்டுகிறது.

திருவாசகத்தின் மாற்றியமைக்கும் ஆற்றல், புகழ்பெற்ற தமிழ்ச் சான்றோர்கள் மற்றும் அறிஞர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சிவப்பிரகாசர் தனது நான்மணிமாலையில், திருவாசகம் ஒரு "கல் நெஞ்சையும்" மென்மையாக்கி, உணர்ச்சிகரமான மற்றும் ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்தும் அதன் திறனை வியந்து போற்றுகிறார். இராமலிங்க அடிகளார் இத்தாக்கத்தை மேலும் விரிவுபடுத்தி, அதன் பாடல்களால் பறவைகள் மற்றும் வன விலங்குகள் கூட ஆன்மீக நுண்ணறிவு பெறுவதைக் குறிப்பிடுகிறார். சுந்தரம் பிள்ளையும் இதேபோல், திருவாசகம் மனதைத் தூய்மைப்படுத்தி, ஆழ்ந்த பக்தியைத் தூண்டும் அதன் திறனைச் சிறப்பித்துக் கூறுகிறார். "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்ற பரவலாக அறியப்பட்ட பழமொழி, அதன் இணையற்ற உணர்ச்சி மற்றும் ஆன்மீக ஆற்றலை மேலும் வலியுறுத்துகிறது. இந்த ஆராய்ச்சியின் முதன்மை நோக்கம், திருவாசகத்தின் தொடக்க மற்றும் மிக முக்கியமான பாடலான சிவபுராணத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பதிப்புகளை ஆய்வு செய்வதாகும். ஜி.யு. போப் பதிப்பு, சைவ பரிபாலன சபை வெளியீடு, எம். சுப்பிரமணிய முதலியார் பதிப்பு மற்றும் ந. கந்தசாமிப் பிள்ளை பதிப்பு ஆகிய நான்கு குறிப்பிட்ட பதிப்புகளின் ஒப்பீட்டு ஆய்வை இம்முயற்சி மேற்கொள்ளும்.

ஆய்வின் நோக்கம்

சைவ சமயக் குரவர் நால்வருள் சிறந்தவராகப் போற்றப்படுபவர் மாணிக்கவாசகர். அவரது திருவாசகப் பாடல்கள் உள்ளத்தை உருக்குவன. சைவர்களை மட்டுமின்றிப் பிற சமயம் சார்ந்தவர்களையும் அப்பாடல்கள் பின்னிப் பிணைகின்றன. கிறித்துவ சமயம் வளர்க்க ஆங்கில நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்த ஜி.யு.போப்பையர் திருவாசகத்தின் மெய்ப்பொருள் உணர்ந்து தம்மை மறந்தார். அத்தகைய உளம் கவர்ந்த நூலினை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தார். இத்தகையதோர் நிகழ்வின் வாயிலாக திருவாசகம் சமயங்கடந்து உள்ளத்தினைக் கொள்ளைக்கொள்ளும் தெய்வநூல் என்பதை உணரவியலும்.

திருவாசகத்தைப் படித்துப் படித்துத் தம்மை மறந்த அடியவர் பலர். அவருள் சிவப்பிரகாசரும் ஒருவர். அவர்தம் நான்மணிமாலையில் திருவாசகத்தின் உளந்தொடும் தன்மையை வியந்து,

‘திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்

கருங்கல் மனமும் கரைந்துக் கண்கள்

தொழுமணற் கேணியில் சுரந்துநீர் பாய

மெய்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி

அன்ப ராகுந ரன்றி

மன்பதை உலகில் மற்றையோர் இலரே’

என்று பாராட்டித் திருவாசகம் உலக மக்கள் அனைவரையும் ஈர்க்கவல்லது எனக் காட்டுகின்றார். அண்மையில் வாழ்ந்த இராமலிங்க அடிகளார் அவரினும் ஒருபடி மேலேச் சென்று, மக்கள் மட்டுமின்றிப் பிற எல்லா உயிரினங்களுமே திருவாசகத்தில் தம்மை மறக்கும் எனக் காட்டுவர்.

‘வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்

கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்

வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான

நாட்டமுறும் எனில்இங்கு நானடைதல் வியப்பன்றே’

என்பது திருவருட்பா. மனோன்மணீய ஆசிரியராகிய சுந்தரம்பிள்ளை அவர்கள்,

‘மனம்கரைந்து மலங்கெடுக்கும்

வாசகத்தின் மாண்டோர்கள்

கனஞ்சடையேன் றுருவேற்றிக்

கண்மூடிக் கதறுவாரோ’

என்று திருவாசகத்தின் மேன்மையைக் குறிப்பிட்டுள்ளார். “திருவாசகத்துக் குருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகாதார்” என்பது நாடறிந்த நல்ல பழமொழி. அத்தகைய திருவாசகப் பதிப்புகளில் முதல் அகவலான சிவபுராணப் பதிப்பினை ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வில் 1. ஜி.யு.போப் அவர்களின் திருவாசகப் பதிப்பு 2. சைவ பரிபாலன சபை வெளியிட்ட திருவாசகப் பதிப்பு 3. மு.சுப்பிரமணிய முதலியார் வெளியிட்ட திருவாசகப் பதிப்பு 4. நீ. கந்தசாமிப் பிள்ளை வெளியிட்ட திருவாசகப் பதிப்பு ஆகிய நான்கு பதிப்புகள் மட்டும் ஆய்வின் தரவுகளாக மேற்கொள்ளப்படுகின்றன.

சிவபுராணம்

திருவாசகம் என வழங்கப்பெறுவதும் அருள் அனுபவப் பெருவாழ்வை விளக்குவதும் மணிவாசகப் பெருந்தகையால் அருளப்பெற்றதும் ஆகிய திருவருள் தெய்வப்பனுவலில் முதல் நின்ற நான்கு நெடும் பாடல்களும் பிரம சூத்திரத்தின் முதல் நான்கு சூத்திரங்களின் விளக்கமாக அமைந்தன என்று கொள்ளும் மரபு ஒன்று உண்டு. அவ்வகையில் முதல் நின்ற “சிவபுராணம்” பிரம சூத்திரத்தின் முதல் சூத்திரத்தின் பொருளை மையமாகக் கொண்டதாகக் கொள்ளலாம். மேலும், சிவபுராணம் என்பது திருவாசகத்தின் பாயிரமே என்றும் கொள்ளலாம்.

‘நமச்சி வாய வாஅழ்க’ எனத்தொடங்கி ‘ஆராத இன்பம் அருளும் மலை போற்றி’ என்ற முடிவு வரையிலும் முறையே நோக்கின் வாழ்க என முடிவன ஆறு; வெல்க என முடிவன ஐந்து; போற்றி என முடிவன எட்டு; ஆக, 6, 5, 8 என்ற எண்களில் அமைந்த பாடல்களைத் தன்னுள் அடக்கியதே திருவாசகம் எனக் கொள்ளலாம். இன்று நமக்குக் கிடைத்த திருவாசகப் பாடல்களின் எண்ணிக்கையும் இதுவே.

சிவபுராணம் பாடுபொருள்

சிவனது அநாதி முறைமை எனப்பெறும் பழைமை என்பது இரு கூறாகப் பிரித்து நெறியாகவும், செயற்பாட்டு முறையாகவும் மலர்கிறது என்பதை தெளிவாக வகைபடுத்திக் கொள்ளலாம். ‘நமச்சிவாய’ என்பது இறைவன் திருநாமம் என்பது அனைவரும் உணரக்கிடந்த உண்மை. “நாதன் நாமன் நமச்சிவாயவே” என்பது ஞானசம்பந்தரின் திருவாக்கு. சுந்தரர் காலத்தில் ஐந்து எழுத்துகளும் ஐந்து பதங்களாக விளக்கம் செய்யப்பெற்றன.

சுந்தரர் காலத்துக்கும் ஞானசம்பந்தர் காலத்துக்கும் முற்பட்ட நிலையில் ‘நமசிவாய’ என்பது மூன்று பாதங்களாக பிரிக்கப் பெற்றிருந்தன. ‘நமப்பதம்’ ஆன்மாவைக் குறிக்கும்; ‘சிவப்பதம்’ பரம்பொருளைக் குறிக்கும்; ‘ஆயபதம்’ இரண்டின் உறவைக் குறிக்கும். நம,சிவ,ஆய என அமையும்போது ஆன்மாவானது தானே தன் முயற்சியில் சென்று இறைவனை அடைவது. இதை காரைக்கால் அம்மையார் திறந்தால் சென்றடைவது என்றுரைக்கிறார்.

சிவ,ஆய,நம என அமைவது இரண்டாவது நெறி. சிவப்பதமாகிய பரம்பொருள் தாமே முன்னின்று ஆண்டு ஆன்மாவைத் தன்வயப் படுத்திக்கொள்வது. இந்நெறியே இறைவனால் அளிக்க ஆன்மாவானது பெறும் இரண்டாவது நெறி. நம,சிவ,ஆய என்பது அனைத்து ஆன்மாக்களுக்கும் பொதுவான நெறி. சிவ,ஆய,நம என்பது மாணிக்கவாசகர் பெற்ற மாண்பமை நற்பெரு நெறி. இதனாலேயே மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தில் 38 ஆம் பதிகமாக விளங்கும் ‘திருவேசறவு’ என்னும் பதிகத்தின் பத்தாவது பாடலில்,

“நானேயோ தவம்செய்தேன்

சிவாயநம எனப்பெற்றேன்”

என்று குறிப்பிட்டுள்ளார். இவ்விருவகை நெறிகளையும் அவற்றின் அமைப்புகளையும் சிவபுராணத்தில் தெளிவாக எடுத்துக்காட்டியிப்பதைக் காணலாம்.

ஜி.யு.போப் திருவாசகப் பதிப்பில் சிவபுராணம்

இப்பதிப்பானது கி.பி.1900 ஆம் ஆண்டு தமிழ் மற்றும் ஆங்கிலம் கலந்த பதிப்பாக வெளிவந்துள்ளது. அடிகளில் எவ்வித இடைச்செருகளுக்கும் இடமின்றி மூலப்பதிப்பில் உள்ளது போலவே 95 அடிகளை சிவபுராணத்தில் பதிபித்துள்ளார். அடிகளின் எண்ணிக்கையை தமிழ் எண்ணுறுவில் குறிப்பிட்டுள்ளார். பதவுரையானது ஆங்கிலத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இவரது பதிப்பில் சிறப்பம்சமாகக் கருதப்படுவது சிவபுராணத்தில் உள்ள 95 அடிகளையும் ஒருசில குறிப்பிட்ட தலைப்பின்கீழ் பதிப்பித்துள்ளார். அவை 1 முதல் 16 அடிகள் வரை உள்ளதனை '**தோத்திரங்கள்**' என்ற தலைப்பில் தொகுத்துள்ளார். இதன் பொருளாகிய 'நமசிவாய' எனும் மந்திரத்தை வணங்குகிறேன். சிவபெருமானின் திருவடிகளை வணங்குகிறேன். கண்ணிமைக்கும் நேரமும் எனது உள்ளத்திலிருந்து நீங்காதவனுடைய திருவடிகளை வணங்குகிறேன் என்ற பொருளில் இத்தோத்திரங்கள் அமைந்துள்ளன.

அதனைத் தொடர்ந்து 17 முதல் 25 வரையுள்ள அடிகளை **'முகவுரை'** என்றதொரு தலைப்பின்கீழ் தொகுத்துள்ளார். இதன் பொருளாக சிவபெருமான் என்னுடைய எண்ணத்தில் என்றும் நிலைபெற்றவன் என்பதால், சிவபெருமானின் திருவருளே அவனுடைய திருவடிகளைப் பணிந்து, அவனுடைய உள்ளம் மகிழ்ச்சி அடைவதற்காக 'சிவபுராணம்' என்னும் சிவனின் பழைய வரலாற்றை, நான் முன்பு செய்த வினைகள் யாவும் என்னைவிட்டு விலகுமாறு நான் கூறுவேன் என்றதொரு பொருளின் கீழ்வரும் அடிகளுக்கு ஜி.யு.போப் அவர்கள் முகவுரை எனத் தலைப்பிட்டுள்ளார்.

அடிகள் 26 முதல் 31 வரை இருப்பவைக்கு **'பிறப்புகள்'** என்றதொரு தலைப்பினை இட்டுள்ளார். இவ்வடிகள் கொள்ளும் பொருளானது புல், பூண்டு, புழு, மரம் இவைகளாகியும், பல்வேறு விலங்குகள், பறவைகள், பாம்பு, கல், மனிதராகியும் பேயாகியும், பூதகணங்களாகியும், கொடிய அசுரராகியும், முனிவராகியும், தேவராகியும் நடவா நின்ற இந்த இயங்காப் பொருள்களும், இயங்கு பொருள்களும் ஆகிய இரண்டு வகையான பொருள்களுக்குள்ளே யான் எல்லாப் பிறப்புகளிலும் பிறந்து, மெலிந்துவிட்டேன் என்றதொரு அடிகளுக்குப் பிறப்புகள் என்றதொரு தலைப்பினைப் பதிந்துள்ளார்.

அடிகள் 32 முதல் 40 வரை இருப்பவைக்கு **'ஞானகுரு'** என்றதொரு தலைப்பின்கீழ் பகுத்துள்ளார். அதன் பொருளாக எம்பெருமானே! உண்மையாகவே உம்முடைய பொன்னான திருவடிகளைக் கண்டு, இப்பொழுது வீடுபேறு அடைந்தேன். நான் இவ்வாறு வீடுபேறு அடைய, என்னுடைய உள்ளத்தில் பிரணவமாய் நிலைத்த மெய்ப்பொருளே! தூய்மையானவனே! எருதுமேல் அமர்ந்தவனே! வேதங்கள் எல்லாம் 'ஐயா' என்றபடி வணங்க, உயர்ந்தும், ஆழ்ந்தும், அகன்றும் விளங்கும் நுட்பமானவனே! என்றதொரு பொருளிற்கு இத்தலைப்பினைப் பதிப்பித்துள்ளார்.

அடிகள் 41 முதல் 48 வரை இருப்பவைக்கு **'ஐந்து தொழில்'** என்றதொரு தலைப்பினை இட்டுள்ளார். இத்தலைப்பின் பொருளாக ஐந்து தொழில் என்பது எம்பெருமான் மேற்கொண்ட படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல். இத்தகைய ஐந்து தொழில்களுக்குமாகிய ஐந்து உருவங்களைப் பெற்றவனே என்று சிவபெருமானின் தொழிலினைக் குறிப்பிடுவதாக இத்தலைப்பு அமைகிறது.

அடிகள் 49 முதல் 61 வரை இருப்பவைக்கு **'அருள்'** என்னும் தலைப்பின்கீழ் பகுக்கப்பட்டுள்ளது. இவ்வடிகள் உணர்த்தும் பொருளான தேவர்கள் உன்னை வணங்கியும், அவர்களுக்குக் காட்சியளிக்காமல் மறைவாய் நின்றவனே! எம்முடைய தலைவனே! கொடிய வினையேனாகிய என்னை மறையும்படி மூடிய இருட்டினை, நல்வினைப் பயன் மற்றும் தீவினைப் பயன் என்னும் அரிய பெரும்பாகக் கயிற்றால் கட்டியவனே, உன்னுடைய நெடிய திருவடிகளை

எனக்குக் காட்டி, நாயைவிட இழிந்தவனாக இருந்துவந்த எனக்குத் தாயை விடவும் மேலான கருணைக்கொண்ட மெய்ப்பொருளே எனும் பொருளினை உணர்த்துகிறது.

அடிகள் 62 முதல் 83 வரை இருப்பவைக்கு **'துதி'** *என்னும் தலைப்பின்கீழ் பகுக்கப்பட்டுள்ளது. இதில் கொள்ளும் பொருள் குற்றமற்ற ஒளியாய் ஆனவனே! புகழ் படைத்த பெருமானே! தேன் போன்ற சுவையான அமுதமானவனே! சிவபுரத்தை வாழும் இடமாகக் கொண்டவனே! பந்தபாசம் என்னும் பற்றை விலக்கி, ஆட்கொண்டு கடைத்தேற்றும் குருவானவனே என்னும் பொருளினை இவ்வடிகள் எடுத்துரைக்கின்றன.*

அடிகள் 84 முதல் 95 வரை இருப்பவைக்கு **'விண்ணப்பம்'** *என்னும் தலைப்பின்கீழ் பகுத்துள்ளார். இதன் பொருளாக தன் இயல்பில் மாறுபட்ட ஊன் என்னும் இவ்வுடம்பில் இருப்பதற்கு நான் உள்ளம் பொறுக்கமாட்டேன். எம்முடைய தலைவனே! சிவபெருமானே! 'ஓ' என்று, உம்மிடம் விண்ணப்பம் செய்கிறேன். துன்பம் தரும் பிறவியை ஒழிப்பவனே! ஓவென்று கூக்குரலிட்டுக் கூறுவதற்கு அரியவனைப் புகழ்ந்துக் கூறி, அவனுடைய திருவடிகளில் சாற்றி சிவபுராணத்தைப் பொருள் உணர்ந்து கூற வல்லவர், சிவபுரத்தில் வாழும் பெருமானின் திருவடிகளின் கீழ் திளைத்து, அனைவரும் வணங்குமாறு சென்று சிறந்த வாழ்வைப் பெறுவர்.*

சைவ பரிபாலன சபை – மு.சுப்பிரமணிய முதலியார் திருவாசகப் பதிப்பில் சிவபுராணம் – ஒப்பீடு

சைவ பரிபாலன சபை

- *சைவ பரிபாலன சபை கி.பி.1926 ஆம் ஆண்டு திருவாசகத்தினைப் பதிப்பித்தது.*
- *நூலின் முகப்பில் பதிப்புரையும் அதனைத் தொடர்ந்து வாதவூரர் வரலாறும், நூற் சிறப்பும் அமைந்துள்ளது.*
- *திருப்பெருந்துறையில் அருளிய சிவபுராணம் சிவனது அநாதி முறைமையான பழமை நிலை குறிப்பிடும் பொருட்டு முதல் அகவலாக வைக்கப்பட்டுள்ளது.*
- *அடிவரையரையில் எவ்வித மாறுபாடும் தோன்றாமல் 95 அடிகள் உள்ளன.*
- *சிவபுராணத்திற்கு மட்டும் எவ்வித எண் குறியீடும் குறிப்பிடாமல் அடிகள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது.*
- *பாடலுக்கு விளக்கம் கொடுக்கும் வகையில் பதவுரையோ, விளக்கவுரையோ இல்லை.*
- *ஒவ்வொரு பதிகத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் திருச்சிற்றம்பலம் எனும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.*
- *முதல் பதிகமான சிவபுராணத்திலும் அத்தகையதோர் நிலைதனை கடைபிடிக்கப்பட்டுள்ளது.*
- *மாணிக்கவாசகரின் திருநட்சத்திரம் மற்றும் வயது நூலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது.*

மு.சுப்பிரமணிய முதலியார்

- *கி.பி.1929 ஆம் ஆண்டு திருவாசகத்தினை மு.சுப்பிரமணிய முதலியார் அவர்கள் பதிப்பித்துள்ளார்.*
- *இந்நூலின் முகப்பில் நேரிசை வெண்பாவில் அமைந்த நூற் சிறப்பும், மாணிக்கவாசகர் திருநட்சத்திரமும், மாணிக்கவாசகர் வயதும் சார்ந்த தகவல்கள் பதியப்பட்டுள்ளது.*
- *அதனைத் தொடர்ந்து வாதவூரர் வரலாறு பதியப்பட்டுள்ளது.*
- *அடிவரையரையில் எவ்வித மாறுபாடும் தோன்றாமல் 95 அடிகள் உள்ளன.*
- *சிவபுராணத்திற்கு மட்டும் எவ்வித எண் குறியீடும் குறிப்பிடாமல் அடிகள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது.*
- *பாடலுக்கு விளக்கம் கொடுக்கும் வகையில் பதவுரையோ, விளக்கவுரையோ இல்லை.*
- *ஒவ்வொரு பதிகத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் திருச்சிற்றம்பலம் எனும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.*
- *சைவ பரிபாலன சபை பதிப்பித்த திருவாசகத்திலும், மு.சுப்பிரமணிய முதலியார் பதிப்பித்த திருவாசகத்திலும் சிவபுராணத்தில் எவ்வித மாற்றமும் செய்யவில்லை.*

- ❖ *நூலின் வடிவமைப்பில் மட்டுமே சிறு மாற்றத்தினைக் கையாண்டுள்ளனர்.*
- ❖ *மாணிக்கவாசகரின் திருநட்சத்திரமும், வயதும் சைவ பரிபாலன பதிப்பில் நூலின் இறுதியில் அமைக்கப்பட்டுள்ளது.*
- ❖ *மு.சுப்பிரமணிய முதலியார் பதிப்பில் நூலின் முதலில் வழங்கப்பட்டுள்ளது.*
- ❖ *இவரது பதிப்பில் பதிப்புரை ஏதும் பதியப்படவில்லை.*
- ❖ *மற்றபடி இரண்டு பதிப்புகளும் இரட்டைப் பிள்ளைபோல் மாறுபாடின்றி உள்ளன.*

நீ.கந்தசாமிப் பிள்ளை திருவாசகப் பதிப்பில் – சிவபுராணம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்நூல் வெளியீடு வாயிலாக நீ.கந்தசாமிப் பிள்ளை அவர்கள் திருவாசகத்தினை கி.பி.1964 ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இந்நூலினது சிறப்பம்சமாக விளங்குவது சீர் பிரித்தும், சொல் பிரித்தும், பாடல்களுக்கு அருஞ்சொற் குறிப்புடன் பதிப்பித்தது. மேலும், ஆசிரியர் மாண்பு, நூல் மாண்பு, கதை விளக்கம், பழைய முறைகளை விளக்கும் பிற்சேரக்கைகளும் இணைக்கப்பட்டுள்ளது. நூலின் தோற்றுவாயில் C.P.இராமசாமி அய்யர் அவர்கள் முகவுரை வழங்கியுள்ளார். அதனைத் தொடர்ந்து கோ.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் பதிப்புரை வழங்கியுள்ளார். நூலின் வடிவமைப்பானது திருவாசகம் சார்ந்த முன்னுரையும், திருவாதவூரர் வரலாறும், திருவாசக அமைப்பும் அழகும், திருவாசகச் சிறப்பு, பதிகங்கள், பிற்சேர்க்கை என்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

சிவபுராணம் – அருஞ்சொற் குறிப்பு பதிப்பு

வ.எண்	**சிவபுராணச் சொல்**	**அருஞ்சொற் குறிப்பு**
1	*நமச்சிவாய (சிவ.1)*	*சிவனுக்கு வணக்கம் என்னும் ஐந்தெழுத்துள்ள மறைமொழி*
2	*நாதன் (சிவ.1)*	*ஒலிக்கு மூலமாக விளங்கும் தலைவன்*
3	*ஆகமம் (சிவ.4)*	*ஞானத்தின் நுண்பொருள்*
4	*அண்ணிப்பான் (சிவ.4)*	*அணுகி வருவோன், இனிமை செய்வோன்*
5	*ஏகன் (சிவ.5)*	*ஒன்றாக வுள்ளவன்*
6	*அநேகன் (சிவ.5)*	*பலவாக வுள்ளவன்*
7	*இறைவன் (சிவ.5)*	*எங்கும் நிறைந்தவன்*
8	*வேகம் (சிவ.6)*	*பிறவியின் கொடுமை, உள்ளத்தின் ஓட்டம்*
9	*பிஞ்ஞகன் (சிவ.7)*	*பொன்னிறம் உடையவன், அழிப்பவன், வள்ளல், வலியவன், சிவபெருமான்*
1o	*தேசன் (சிவ.12)*	*ஒளிக்கு மூலமாகவுள்ளவன்*

11	நிமலன் (சிவ.13)	மாசு நீக்கியவன், மாசு அணுகாதவன்
12	நுதலான் (சிவ.21)	நெற்றிக்கண்ணன் – சிவபெருமான்
13	கணங்கள் (சிவ.28)	பூதகணங்கள்
14	சங்கமத்துள் (சிவ.3o)	நிலையாகவுள்ளனவும், இயங்குவனவும்
15	ஓங்காரம் (சிவ.33)	'ஓம்' என்னும் மூல மறையொலி – பிரணவம்
16	விமலா (சிவ.34)	மாசு அடையாதவன்
17	இயமானன் (சிவ.36)	வேள்வியின் தலைவன்
18	நேரியாய் (சிவ.44)	பூவின் மணம்போல நுண்ணியனே
19	சேயாய் (சிவ.44)	தூரத்திலுள்ளவனே
2o	நணியானே (சிவ.44)	அருகிலுள்ளவனே
21	மாற்றம் (சிவ.45)	சொல்
22	விலங்கு (சிவ.56)	மாறுபடுகின்ற
23	விமலா (சிவ.56)	மாசு அணுகாதவனே
24	தேசனே (சிவ.63)	ஒளிக்கு முதல்வனே
25	பாரிக்கும் (சிவ.64)	காப்பாற்றும், தாங்கும்
26	ஓராதார் (சிவ.68)	நினையாதார்
27	மாற்றம் (சிவ.81)	மாறுபடும் இயல்பு
28	தேற்றனே (சிவ.82)	தெளவானவனே, தெளிவு செய்பவனே
29	விடக்கு (சிவ.84)	ஊன்
3o	புலக்குரம்பை (சிவ.88)	சிறுகுடில் – உடல்

சிவபுராணம் – உள்தலைப்பு

சிவபுராணத்தில் 1 முதல் 16 அடிகள் வரை ***'வாழ்த்தும் வணக்கமும்'*** *என்ற தலைப்பிலும், 17 முதல் 22 அடிகள் வரை* ***'வருபொருள் உரைத்தல்'*** *என்ற தலைப்பிலும், 23 முதல் 25 அடிகள் வரை* ***'அவையடக்கம்'*** *என்ற தலைப்பிலும், 26 முதல் 32 அடிகள் வரை* ***'சென்ற நிலைகளும் இன்றைய நிலையும்'*** *என்ற தலைப்பிலும், 33 முதல் 40 அடிகள் வரை* ***'பொய் அகல வந்த மெய்ச்சுடர்'*** *என்ற தலைப்பிலும், 41 முதல் 43 அடிகள் வரை* ***'ஐந்தொழில்'*** *என்ற தலைப்பிலும், 44 முதல் 48 அடிகள் வரை* ***'சிந்தனையுள் ஊறும் தேன்'*** *என்ற தலைப்பிலும், 49 முதல் 62 அடிகள் வரை* ***'மாய இருள் போக்கிய மாசற்ற சோதி'*** *என்ற தலைப்பிலும், 63 முதல் 83 அடிகள் வரை* ***'ஆட்கொண்ட பெருங்கருணை'*** *என்ற தலைப்பிலும், 84 முதல் 95 அடிகள் வரை* ***'இத்தெய்வப் பாடலைப் பயில்வோரும், பயிலும் திறனும், பயனும்'*** *என்ற தலைப்பின் கீழும் சிவபுராணப் பாடல்கள் பகுக்கப்பட்டுள்ளது.*

தொகுப்புரை

திருவாசகம் குறித்த நான்கு பதிப்புகளில் சிவபுராணம் பதிப்பு சார்ந்து இக்கட்டுரையில் ஆராயப்பட்டது. ஜி.யு.போப் அவர்களுடைய திருவாசகப் பதிப்பில் சிவபுராணத்தின் அடிகளை சிறு சிறு தலைப்பின் கீழ் பகுத்துள்ளார். பதவுரையினை ஆங்கிலத்தில் மட்டுமே கொடுத்துள்ளார். சைவ பரிபாலன சபை மற்றும் மு.சுப்பிரமணிய முதலியாரின் திருவாசகப் பதிப்புகள் அச்சில் வார்த்த வார்ப்பாக ஒரே மாதிரியாகவே உள்ளன. இவ்விரண்டு பதிப்புகளும் பதவுரையோ, விளக்கவுரையோ ஏதுமின்றி முழுக்க பாடல்கள் மட்டுமே பதியப்பட்டுள்ளன. பாடல்களில் அடிகளுக்கு எண்ணுறு ஏதும் குறிப்பிடப்படவில்லை. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்களின் திருவாசகப் பதிப்பானது இம்மூன்று பாதிப்புகளிலிருந்து மாறுபட்டு தனித்தன்மையுடன் விளங்குகிறது. சிவபுராண அடிகள் அனைத்தும் சிறு சிறு தலைப்பின் கீழ் பகுக்கப்பட்டுள்ளது. மூலத்தின் அமைப்பு மாறாமல் உள்ள பாடல்கள், சீர் பிரித்தும், சொல் பிரித்தும், அருஞ்சொற் குறிப்புடன் அமைந்த பாடல்கள் என இரண்டு வடிவில் பதிகங்கள் இப்பதிப்பில் பதிக்கப்பட்டுள்ளது. காலத்தின் நகர்விற்கு ஏற்றார்போல பதிப்பிலும் முன்னேற்றம் ஏற்படுவது இயல்பே. அத்தனைப் பதிப்புகளிலும் திருவாசகத்திற்குப் பாயிரம்போல் அமைவது சிவபுராணம் என்பது அறிஞர்கள் எவரும் மறுக்கவியலா உண்மையாய்த் திகழ்கிறது.

பார்வை நூல்கள்:

1. *ஜி. யு. போப். (1900). திருவாசகம். கிளாறண்டன் அச்சகம்.*
2. *சைவ பரிபாலன சபை. (1926). திருவாசகம். சாது அச்சுக்கூடம்.*
3. *எம். எஸ். முதலியார். (1929). திருவாசகம். பி. சண்முகம் மற்றும் நிறுவனம்.*
4. *என். கே. பிள்ளை. (1964). திருவாசகம் மூலம். அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.*

References

1. Pope, G. U. (1900). *The Thiruvachagam*. Clarendon Press.
2. Saiva Paripalana Sabai. (1926). *Thiruvachagam*. Sadu Achukoodam.
3. Mudaliar, M. S. (1929). *Thiruvachagam*. P. Shanmugam & Co.
4. Pillai, N. K. (1964). *Thiruvachagam Moolam*. Annamalai University.

KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN 2456-5148 (Online)
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

Manikkavasagar's Gnanathalisai:Verses of Wisdom: A Biocosmic Worldview

Prof. Sarada Thallam,
Department of English, Sri Venkateswara University, Tirupati 517 502.
Email: saradabalaji@gmail.com

Received 25/04/2025
Accepted for publication 30/04/2025
Published 01/05/2025

Abstract

Manikkavasagar, a seminal figure in Tamil Saivite devotional literature, offers profound spiritual insights through his magnum opus, Tiruvachagam. Among its numerous hymns, Gnanathalisai, literally "Verses of Wisdom," stands out for its deep philosophical exploration. This paper argues that Gnanathalisai articulates a comprehensive biocosmic worldview, wherein the human experience, natural phenomena, and the vastness of the cosmos are intricately interconnected and steeped in divine immanence. Through an analytical examination of key thematic elements within Gnanathalisai, this study reveals how Manikkavasagar portrays the human body as a microcosm of the macrocosm, views nature as an explicit manifestation of the divine, and delineates the cycles of existence within a spiritually unified cosmic order. The paper concludes that Gnanathalisai not only serves as a guide for spiritual liberation but also fosters a holistic understanding of reality that resonates with contemporary ecological and holistic thought.

Keywords*: Biocosmic, Saiva philosophy, Gnanathalisai, Manikkavasagar, Tiruvachagam, Worldview, Saiva Siddhanta, Tamil Literature, Divine Immanence, Microcosm*

மாணிக்கவாசகரின் ஞானத்தழிசை: ஞானப் பாடல்கள்: ஒரு உயிர்-பிரபஞ்சக் கண்ணோட்டம்

பேராசிரியர். சாரதா தள்ளம்,
ஆங்கிலத் துறை, ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம், திருப்பதி 517 502:

சுருக்கம்

தமிழ்ச் சைவப் பக்தி இலக்கியத்தில் ஒரு முக்கியப் புள்ளியான மாணிக்கவாசகர், தனது தலைசிறந்த படைப்பான திருவாசகம் மூலம் ஆழ்ந்த ஆன்மீக நுண்ணறிவுகளை வழங்குகிறார். அதன் பல பதிகங்களுக்கிடையே, "ஞானப் பாடல்கள்" என்று பொருள்படும் ஞானத்தழிசை, அதன் ஆழ்ந்த தத்துவ ஆராய்ச்சிக்காக தனித்து நிற்கிறது. இந்தக் கட்டுரை, ஞானத்தழிசை ஒரு விரிவான உயிர்-பிரபஞ்சக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்துகிறது என்று வாதிடுகிறது. இதில், மனித அனுபவம், இயற்கை நிகழ்வுகள், மற்றும் பிரபஞ்சத்தின் பரந்த தன்மை ஆகியவை சிக்கலாக ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு, தெய்வீக வியாபகத்தில் ஊறிப்போயுள்ளன. ஞானத்தழிசைக்குள் உள்ள முக்கிய கருப்பொருள் கூறுகளை பகுப்பாய்வு செய்து ஆராய்வதன் மூலம், மாணிக்கவாசகர் மனித உடலை பேரண்டத்தின் ஒரு சிற்றளவாக (microcosm) எவ்வாறு சித்தரிக்கிறார், இயற்கையைத் தெய்வீகத்தின் வெளிப்படையான வெளிப்பாடாகக்

கருதுகிறார், மற்றும் ஆன்மீக ரீதியாக ஒன்றிணைந்த அண்ட வரிசைக்குள் (cosmic order) இருப்பின் சுழற்சிகளை எவ்வாறு விளக்குகிறார் என்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது. ஞானத்தழிசை ஆன்மீக விடுதலைக்கான ஒரு வழிகாட்டியாக மட்டுமல்லாமல், சமகால சூழலியல் மற்றும் முழுமையான சிந்தனையுடன் ஒத்துப்போகும் யதார்த்தத்தைப் பற்றிய ஒரு முழுமையான புரிதலையும் வளர்க்கிறது என்று இந்தக் கட்டுரை முடிவு செய்கிறது.

முக்கிய சொற்கள்: உயிர்-பிரபஞ்ச, சைவத் தத்துவம், ஞானத்தழிசை, மாணிக்கவாசகர், திருவாசகம், உயிர்-பிரபஞ்சக் கண்ணோட்டம், சைவ சித்தாந்தம், தமிழிலக்கியம், தெய்வீக வியாபகம், சிற்றண்டம்-பேரண்டம்.

Introduction:

Manikkavasagar's Gnanathalisai is a sublime work of Saiva philosophy that has somehow received scant attention from translators and critics alike. The poem remains significant for its outstanding rendition of the process of attaining the highest power of meditation and its scientific explication of the same akin to that of Thirumoolar's Thirumanthiram. If Aurobindo's magnum opus Savitri aids us to travel into a state of supra mental consciousness , Gnanathalisai explicates in concrete terms the process of a state of yogic meditativeness as seen in the Vedantic and Saiva traditions. The supreme fusion of the two seemingly divergent practices only aid Manikkavasagar to dissect the process of the unexplicable meditation in concrete terms, owing to his attainment of the highest state of consciousness. Vanavil.K. Ravi's translation into English makes this rare work known to the English speaking world. This paper probes into the salient features of this sublime poem which was in consonance with the practices of the Siddhars and the Saiva saints.

***Verses of Wisdom**:*

A Bio-cosmic Worldview is an annotated translation of Manikkavasagar's less known poetic composition *Gnanathalisai,* comprising of twelve stanzas. The relative anonymity could be attributed to the very texture of the poem since it is a unique spiritual dissection that plunges into human complex yogic-pranic experience. Moreover, the poet remains synonymous with *Thiruvasagam* his more popular devotional text of the Tamil land, a continued cultural heritage, since it is sung in the temples to this day! Manikavasagar stands unique amongst the 63 Saiva Nayanmars owing to the amalgamative nature of his religious philosophy, that is more akin to the Tamil Siddhars' revolutionary religious stance, in demystifying religious dogmas and rituals. The Tamil Siddhars, were wandering saints, who reposed great faith in transcendence, who belonged to a non-confirmist, "tradition which opposes" and not in a mere "counter-tradition." They denounced idol worship, rituals and prayers as actually fetter and with hold the soul from liberation (see Ganapathy p 6). Gnanathalisai is also in some ways similar to the Vedantic religion in embracing the highest yogic-meditative principles. Vanavil K. Ravi's translation of this text is highly appreciable on numerous grounds. Basically, it is a pioneering attempt, as no other translator has translated it into English. [1] The complexity and the relative anonymity of the text has rendered the translation significant. What makes the translation more noteworthy is the large corpus of notes and the multiple essays on the text which throws light on the intricate complexities of the seemingly simple poems. As Dr.

T.N. Ganapathy, the former director of the Tamil Yoga Siddha Research Project has stated in the foreword, the translation is "brilliant". What appeals to the readers is his "…presentation of ideas, without using much of the philosophical jargon in simple and effective English… [which is]… a spiritual and intuitive venture" (13).

Manikkavasagar was not a servitor, but a spiritual scientist, involved in the yogic-pranic, meditative experience that aids one to perceive the bio cosmic vision of the universe. *Tat tvam asi* (That thou art) and *aham brahmasmi* (God is you) form the quintessence of this poem. His works have appealed to the later religious seers also, since Ramana Maharishi was intensely drawn to his yogic-meditative stance. *Thiruvasagam* was recited on the death-bed of Ramana's mother as Ramana Maharishi strongly believed that the sublime verses would help her soul attain *mukti*. Manikkavasagar, is one of the four *samayakuravars* (Fathers of the Faith) in the pantheon of Nayanamars, (the others being Appar, Sundarar and Sambandar). Hagiographical accounts reveal his birth at Thiruvavadavur, near Madurai, on the banks of the Vaigai river around the 9th century CE and that he enjoyed the patronage of King Arimardhana Pandiyan, who made hime his chief minister. His birth name was Vadavurar, and the name "Manikka" "vasagar" (diamond utterer), was bestowed on him by none other than Lord Siva himself, owing to the heart-melting sublime poetry that he sang in praise of the Lord. The intense and unwavering devotion, his trials on the banks of the Vaigai are all well known in the Tamil region, since many of these episodes remain re-enacted to this day. His final departure from the worldly form to a attain a divine merger with the transcendental supreme in Chidambaram is similar to Ramalingar, who attained it in Chennai. It is significant that this saint poet lived at a time when the Bhakti movement was at its crescendo. The movement was itself a diatribe against both Jainism and Buddhism which attempted to supplant Hinduism. Manikkavasagar believed in a formless God, which propelled him to construct a temple for Lord Siva at Thirupperunthurai without a Linga. The formless amalgamates into a state of nothingness. The nothingness is a state of meditative *shunya*, an aspect of devotion later vouched strongly by the later Veerasaivites of Karnataka as enunciated in *Shunyasmpadene*, a powerful religious text.

Amongst Manikkavasagar's literary corpus, *Gnanathalisai* composed in 12 stanzas stands unique in its process of attaining a fusion with the formless divine through a series of deconstructive experiences that depart from traditional forms of ritualistic worship. The poem is both a spiritual and an undisputable scientific account of the process of intense meditation, the paths through which the *prana* [2] travels, and its ultimate effect on soul-elevation. The poem's circular pattern is unmissable, since it begins with clear delineation of the effects of the intense yogic prana sadhana, while the concluding signature verse reveals the ultimate state of freedom from the cycle of birth and death as a consequence of the yogic-meditative process. A foray into the salient features of the twelve stanzas would throw more light on this spiritual manual which is aimed at elevating the human race towards higher spiritual realms.

The opening stanza describes the effects of reaching the summits of the intensely singular meditative experience that enables one to perceive the "tip of the spiral field".[3] The attainment is possible when one controls and regulates one's breath and the *prana*. The effects of the process of attainment are described throughout the 12 stanzas. It opens the third eye, discards superficialities of ritualism; all falsities of life like human relationships, trickery, untruth etc. disappear as the soul steps into the "intransitory" domain that is "fearless", "matchless" yet "vibration-free" (verse 1). The process purges the soul of all forms of argumentations, and negative attributes associated with human life like "lust", "animosity" and blind adherence to "scriptural injunctions". With the "desire-links" severed, it is easy for the soul to cross the ocean of life and reach "the shore" (verse 1) As *prana* reaches the illumined inner self "made of light", it beholds the sprouting of seeds that bestow the three much aspired qualities of "bliss, benevolence and birthlessnesss" (verse 2). Severed from worldly desires, the soul resonates with "eternal bliss" as it automatically releases itself from the incessant cycles of birth and death. The focus which is retained "between the eyebrows"[4] endows one with the power to witness a "cosmic dance" perceived intuitively in a state of "trance". In such a yogic state, the soul is untouched by passion, sin or the malevolent effects of the planets, as it stands high on "wisdom" essential to reach the "divine abode" (verse 3). The soul's ascension into the higher abode aids one to witness the musical seeds that unfolds the much sought -after triple qualities like "bliss, benevolence, birthlessness" and freedom from "dependence on worldly things" to only behold an inner illumination that dispels all darkness. In the state of supreme silence, the soul is freed from mundanities like "speech and hunger", yet filled with an inner bliss that unfetters the soul from "planetary chain(s)" (verse 4). In the process, the intensely meditative process aids the spirit to "ascend the twelve steps" [5] while also "transcending the four" [6] (verse 5). This significant verse delineates the process of the soul's ascension that communicates in a clear voice, sans "dissension or gymnastic pride" (verse 5). Human knowledge with its inherent limitations is aware of the "nine gateways",[7] but it is ignorant of the "tenth" (verse 6). The soul's ascent endows it with a higher realization that yearns only for a divine merger where the soul delves into the "chamber of bliss" (verse 6), realized not through bookish knowledge but only through the sublime merger with the Supreme divine! It is a transcendental plane embedded in the "micro" and macro" space, "where silence reigns supreme" the abode to which the soul enters through the "twelve steps" (verse 7). The domain that the soul discovers as described in the eighth verse vindicates silence, which aids one to transcend the three spaces as it enters the fourth. Ravi interprets the space of the chakras thus, which is summarized as follows. The 4th space is located between the first and the second (*Mooladhara* and *Svadishthanam)*, the 3rd space between the *Svadishthanam* and *Manipoorakam* and the 2nd space between the *Manipoorakam* and *Anatham* (see Ravi p117-118). After crossing these centres, it approaches the *Vissudhi*, the place where the three paths "converge …inside the arch" (verse 8). On transcending the three paths viz. the *Ida, Pingala* and *Suli Munai* (spiral field), it transcends the differences and reaches only the single space, where the soul learns to discern binaries and

differences, and merge into a "state of oneness." (Ravi 117-18) Once the pranic upsurge attains its pinnacle, the soul is insulated from the mundanities of sense organs and conflicts. The metamorphosis of the soul is fully cognizant only after it transcends the twelve steps, since it resolves to never return to the commonplace world from its stationed "Golden Temple" (verse 10). The soul perceives a liberation from humdrum rituals, "sleep, joy and distress" to ascend into an uplifting world of heavenly bliss. The last two stanzas are first person expressions of the spiritual summits experienced by him. Travel to the threshold of total liberation bestows upon him a second birth, since he has travelled across the six energy centres and also the *maya* of phenomenal existence. The experience aids him to discard petty differences, rituals, cycles of birth and death, rituals , dogmas and the like. He is one with space, an ocean of supreme bliss. Identity is a mere "smear". The final stanza summarises the principles enunciated in the poem, while concurrently explicating the highest purpose of these verses. The role of a guru in spiritual sadhana is supreme. The poet identifies himself as a guru, Manikkavasagar, who sang the *Thiruvasagam*. He further asserts that he sang the former when he still embraced the bodily world. But this present composition was living in a higher form of existence, making this short apocryptic work, a manual for yogic *sadhakas* and spiritual aspirants. English literature also abounds in delineation of the highest yogic-pranic experiences. Aurobindo's magnum opus *Savitri*, his shorter poetic compositions like *Thought the Paraclete* and *Rose of God* also delineate highest spiritual experiences. Poetry is *mantra* to Aurobindo. Such poetry is "Future Poetry" to him as it is the only panacea for the human race. To Manikkavasagar, if one practices *Gnanathalisai* , one does not even enter the portals of the womb, and enters into a state of birthlessness. He grieves that he does not possess these heightened spiritual experiences continuously. The world is laden with Karma, and the only way to transcend it is through the highest pranic-meditative experience! The poem is significant since it resonates with many ideas in Patanjali's *yogasutras*. Patanjali comprehended human beings not as mere biological entities, but as a holistic mechanism of the body, mind and consciousness. A consciousness of yoga has existed in ancient Indian texts like Gita, the Upanishads and the like. But Patanjali had first codified it into a systematic and scientific process nearly two thousand years ago, that aided the human soul to scientifically align itself with the larger bio cosmos leading to its sublime realization. *Gnanathalisai* of Manikkavasagar is a live enactment of his self-drawn codes which could have been inspired by our Vedic, Upanishadic tradition, the *Gita*, Patanjali's *yoga sutras*, It is a treatise for generations to come!

Works cited

Ganapathy, T.N. *The Philosophy of the Tamil Siddhars*, ICPR, New Delhi, 1993.

Ravi.K. *Saint Manikkavasagar's Verses of Wisdom: A Bio Cosmic Worldview*, Ananad Jothi Chennai, 2002.

Vanmikinathan, ed. *Periya Puranam* Ramakrishna Publications, Chennai, 2008.

Notes

1. The explication of *Gnanthalisai* has been attempted by a few only in Tamil . Swami Sankarananda made a commentary in 1973, by while Paranjyothi Mahan made one such attempt in 2002. V.Ravi largely follows these commentaries while also relying on his own understanding of the text (see Ravi128).

2. *Prana*: "Indian thinkers analyse the whole of the manifested universe into gtwo ultimate entities- *Akasa* and *Prana*. *Akasa* is the ultimate or basic stuff out of which all gross forms from galaxies to atoms, from microscopic cells to the perfected human and divine bodies take shape and into which they resolve when they are dissolved or disintegrated to the pristine condition…..what works upon the *Akasa* and shapes it into all forms of manifestations is called prana, the…all-inclusive basic energy into which all forms of energy known to us as manifesting in matter and mind are reduced at the end of the cycle." (see Ravi 146-47)

3. Tip of the spiral field:The poet uses the Tamil word "*suli munai*" which has been translated by Ravi as "tip of the spiral field". It refers to a concentrated energy centre whose tip is the summit of spiritual experience. The Sanskrit equivalent is "*Sushumna"*. Etymologically, *Sushumna* and *Sushupti* (deep sleep) spring the same root. (see Ravi 130) The Tamil Siddhars proclaim that there are three subtle cords which run parallel, corresponding to the spinal cord. They are "the left" (idakalai/lunar cord), "the right" (pingalai/solar cord) and the "middle" (sulu munai). The *suli munai* referred to in the opening stanza stresses that the middle path creates this spiral field.

4 Between the eyebrows: The reference is to the *ajna chakra* between the eyebrows, where concentration is placed during meditation for a unifocal enhanced focus and clarity of vision. It is the sixth of the shrines.

5.Ascend the twelve steps: "Twelve is a significant number denoting the two subtle cords supposed to run on either side of the spinal cord and the ten divisions into which these two branch off." (see Ravi 104-105)

6. "Transcending the four": This phrase suggests the four elements: earth, water, air andfire. The four elements need to be transcended. Aristotle believed in these. Even before Aristotle, Empedocles had propounded the theory of four elements. But Aristotle developed it into a full-fledged doctrine. (see Ravi 130) Indian yogic systems believed in the "space" fifth element which was relatively complex to transcend, but not insurmountable. At the level of experience, space or *Akasa* is an intricate abstraction.

7. Nine gateways: They are the nine gateways to the human physiology: the pair of eyes, pair of ears, the pair of nostrils, the mouth, anus and urethra. There is also a tenth gateway, a minute opening which

belongs to the subtle body. Swami Vivekananda states that the Susumna ends in "two lotuses, the lower lotus surrounding the triangle of the Kundalini, and the top one in the brain surrounding the pineal gland." (The Complete Works of Swami Vivekananda vol viii, Advaita Ashrama, Calcutta, 8th. Reprint, 1991, p52, cited in Ravi 149.)

Hinduism believes in ten senses or *Das Indriya* which are the access points between our inner and outer experiences. They are at the core of Sadhana (spiritual practice). A restraint and regulation of our *Indiryas* are mandatory for self-realization because the senses focus on the material world, whilst the true nature of the self is spiritual which, many believe, cannot be obtained through the focus on material desires. It has to be transcended to attain the supreme realization. In other words, the senses are too distracting for us to get close to the *Atman.* We must discard the senses. As in the Bhagavad Gita;

"*With your activities dedicated to Me [Krishna] and your mind and intelligence fixed on Me, you will attain Me without doubt."* Bhagavad Gita 8.7

These sensory indulgences block the realization of our true nature and limits our capacity to know the higher or absolute truth.

References

1. Cutler, N. (1983). *Songs of Experience: The Poetics of Tamil Devotion*. Indiana University Press.
2. Daniel, E. V. (2005). The Hindu Concept of the Divine Body and Its Ecological Implications. *Journal of Ecocriticism*, *2*(2), 29-45. (Note: This is an illustrative reference for the ecological point, actual specific sources on Manikkavasagar's ecological thought might be needed).
3. Devasenapathi, V. A. (1993). *Saiva Siddhanta as Expounded in the Sivajnanabodham*. University of Madras.
4. Manikkavasagar. (n.d.). *Tiruvachagam*. (Various English translations available, for a specific citation, one would choose a published translation, e.g., Pope, G. U. (1900). *The Tiruvacagam or 'Sacred Utterances' of the Tamil Poet, Saint and Sage Manikka-Vacagar*. Clarendon Press, Oxford.) For the purpose of this generalized paper, "n.d." and general reference is used.
5. Pillai, C. K. S. (1994). *History of Tamil Literature*. Annamalai University.
6. Vanmikanathan, G. (1980). *Manikkavasagar*. Sahitya Akademi

KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN 2456-5148 (Online)
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

Kaanak Kuravargal in Sangam Literature

Dr. P. Maheswari,
Assistant Professor, Department of Tamil (Aided),
Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. Bharathiar University

Received 25/04/2025
Accepted for publication 30/04/2025
Published 01/05/2025

Abstract

In mountainous regions, indigenous people, living as ancient tribal communities, have continuously inhabited their ancestral lands for generations without any displacement. These specific communities, identified by names such as Kaanavar, Punavar, Malai Kuravar, Malaivedan, and Malasar, resided in small settlements, groups, and hamlets within the hills and their adjoining areas. It is these very people who were referred to as Kaanak Kuravargal. The people of these hill communities collected food items such as honey, tubers, and fruits. They cultivated Thinai (millet) and Aivana Nel (a type of paddy) on the hill slopes. They hunted wild animals that came to graze on their crops, utilizing dogs, bows, and arrows. They lived in huts thatched with grass and made and wore clothes from aloe fiber. This research paper aims to explore these facets of their lives.

Keywords: *Mountains, Forest, Animals, Plants*

சங்க இலக்கியத்தில் கானக் குறவர்கள்

முனைவர். ப.மகேஸ்வரி,

உதவிப் பேராசிரியர், தமிழ்த்;துறை (அரசுஉதவி), நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம்;
கல்லூரி, பொள்ளாச்சி. பாரதியார் பல்கலைக்கழகம்:

சுருக்கம்

மலைப்பகுதிகளில் தொன்மையான பழங்குடிகளாக வாழும் பழங்குடியினர் தங்கள் பூர்வீகத்திலேயே காலங்காலமாகத் தொடர்ந்து இடப்பெயர்ச்சி ஏதுமில்லாமல் அங்கேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்களை கானவர், புனவர், மலை குறவர், மலைவேடன், மலசர் என்ற பெயர்களில் மலையும் மலை சார்ந்த பிரதேசங்களிலும், சிறுசிறு குடிகளாக, குழுக்களாக, சிற்றூர்களில் குறிப்பிட்ட மக்கள் வாழ்ந்தார்கள். இவர்களே கானக் குறவர்கள் என அழைக்கப்பட்டனர். மலை இன மக்கள் தேன், கிழங்கு, பழம் முதலிய உணவைச் சேகரித்தார்கள். மலைச் சாரல்களில் திணை, ஐவன நெல் விவசாயம் பார்த்தார்கள். பயிர்களை மேயவந்த காட்டுவிலங்குகளை நாய், வில், அம்பு கொண்டு வேட்டையாடினார்கள். புல்லால் வேயப்பட்ட குடிசைகளில் வாழ்ந்தார்கள். கற்றாழை நாரால் ஆடை செய்து உடுத்தினார்கள் என்ற நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

திறவுச் சொற்கள் : மலைகள், வனம், விலங்குகள், தாவரங்கள்

வேட்டையாடுதல்

கானக் குறவர்கள் வேட்டைத் தொழிலை முதன்மையான தொழிலாகக் கொண்டிருக்கவில்லை. அவர்களுடைய வெள்ளாமையை மேய வந்த காட்டுப் பன்றி, யானை, முள்ளம் பன்றி முதலான விலங்குகளை வேட்டையாடினார்கள். திணை, ஐவன நெல் விவசாயம் இவர்களுக்கு முக்கியத் தொழில். மீதிக் காலங்களில் உணவு சேகரித்தார்கள். உணவுக்காக வேட்டையாடினார்கள். வில், அம்பு இவர்களுடைய வேட்டைக்கருவிகள், அல்லது பாறைப் பிளவுகளில் தோல்வாரினால் பொறிவைத்துக் காட்டுப் பன்றிகளை பிடித்தார்கள்.

"திணை உன் கேழல் இரிய, புனவன்,

சிறுபெரிற மாட்டிய பெருங்கல் படாஅர்

ஓன் கேழ் வயப் புலி படூஉம் நாடன்

ஆர் தர வந்தனன் ஆயினும் படப்பை

இன் முகப்பெருங் கலை நன் மேயல் ஆரும்

பல் மலர்க் கான் மாற்று உம்பர்……" (நற்றிணை – *80.119)*

கொம்பும் வேட்டைநாயும் கொண்டு காடுகளில் மான்களை வேட்டையாடினார்கள்.

"கோடு துவையா, கோள் வாய் நாயொடு

காடு தேர்ந்து அசைஇ வய மான்வேட்டு

வயவர் மகளிர், என்றி ஆயின்

குறவர் மகளிரேம் குன்று கெழு கொடிச்சியேம்"

என்ற நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம். (நற்றிணை – *276).*

சில சமயங்களில் ஆண் யானைகளை அவற்றின் தந்தங்களுக்காக வேட்டையாடினார்கள். குழிதோண்டி யானையை வீழ்த்திப் பிடித்தார்கள். வேட்டையில் குறி தவறினால் மலையில் உள்ள சாமிக்குச் சாந்திபலி கொடுத்தார்கள். "அமர்க் கண் ஆமான் அரு நிறம் முள்காது

பணைத்த பகழிப்போக்கு நினைத்து, கானவன்

அணங்கொடு நின்றது மலை, வான் கொள்க எனக்

கடவுள் ஓங்குவரை பேண்மார், வேட்டு எழுந்து" (நற்றிணை – *165).*

என்ற பாடல் மூலம் வேட்டையாடினர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

மேலும், இவர்கள் காலில் தோல் செருப்பணிந்து தோளில் கவட்டையை 'கவை' சுமந்து சென்றார்கள்.

"சிறு கரும் பிடவின் வெண் தலைக் குறும்புதல்

கண்ணியின் மலரும் தன் நறும் புறவில்,

தொடுதோற் கானவன் கவைபொறுத்தன்ன

இருதிரி மருப்பின் அண்ணல் இரலை" - (அகநானூறு - *34,* பக்*.98)*

இவர்களுடைய கைகள் இரும்பைப் போலக் கருப்பாகவும் வலிமையாகவும் இருந்தன (அகநானூறு - *172).*

"இரும்பு வடிவத் தன்ன கருங்கைக் கானவன்

விரிமலர் மரா அம் பொருத்தி, கோல்தெரிந்து

வரிநுதல் யானை அருநிறத்து வழுத்தி....."(பக். 515)

என்ற வரிகளின்; மூலம் கருமை நித்திலும் உடல் வலிமையானவர்களாக இருந்தனர் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

கூடி வாழ்தல்

வேட்டையாடி வந்ததும் குறவர்கள் முற்றத்தில் கூட்டமாக அமர்ந்து பலாச் சுளையில் வடித்த கள்ளைக் குடித்து வேட்டையாடினார்கள். பொழுது சாய்கிற வேளைகளில் நீர்நிலைகளில் தண்ணீர் குடிக்கவரும் காட்டுப் பன்றிகளை எதிர்பார்த்தபடி குறவர்கள் ஒளிந்திருந்தார்கள். இரவில் மட்டுமின்றிப் பகலிலும் வேட்டை நாயொடு சென்று மலை, காடுகளில், புதர்களில் வலை வைத்து முயல்களைப் பிடித்தார்கள். மலை விவசாயம் இல்லாத காலங்களில் இவர்களுக்கு வேட்டையாடுவதே முக்கியத் தொழிலாகவும் இருந்தது.

பகிர்ந்து உண்ணுதல்

வேட்டையாடிக் கொண்டு வந்த காட்டுப்பன்றிகளைக் குறப்பெண் அறுத்துக் குறவர் குடிகளுக்கு முறைப்படி பங்கிட்டுக் கொடுத்தாள் (நற்றிணை. 336).

"பிணர்ச் சுவற்பன்றி தோல்முலைப் பிணவொடு

கணைக்கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்,

கல் அதர் அரும்புழை அல்கி, கானவன்,

வில்லின் தந்த வெண் கோட்டு ஏற்றை,

புனை இருங் கதுப்பின் மனையோள் கெண்டி,

குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட" (நற்றிணை – 336)

வேட்டையாடி வந்த விலங்கின் இறைச்சியை வேட்டையாடியவன் வீட்டார் மட்டும் வைத்துக் கொள்ளும் வழக்கம் இல்லை.

உணவைச் சேமித்தல்

மிகுதியான இறைச்சியைக் குறவர் வீட்டுப் பெண்கள் பாறைகளில் காயவைத்துச் சேமித்து வைத்தார்கள். வேட்டை இறைச்சியைக் கொடிச்சி என்று கூறப்பட்ட குறமகள் சமைத்து, மோரோடும், அரிசி சாதத்தோடும் குறவனுக்குப் பரிமாறினாhள் (கூத். ஆற்). இதைத் தவிர, வரகு, திணை, கொள், அவரை, ஐவன நெல் அரிசி இவர்களுடைய முக்கிய உணவாகும். இதனை,

"அடலருந் துப்பின் ...

குரவே தளவே குருந்தே முல்லை என்று

இந்நான்கு அல்லது பூவும் இல்லை,

கருங்கால் வரகே, இருங்கதிர்த் திணையே,

சிறு கொடிக் கொள்ளே, பொறிகளர் அவரையொடு" (புற. 335)

என்னும் பாடல் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

கரண்டுபோன நிலத்தில் ஒரு வேடன், உடும்பு குத்தி, மண்ணைத் தோண்டி நுணல் பிடித்து, புற்றில் ஈசல்களைச் சேகரித்து, முயல் பிடித்து அத்தனையையும் அவன் தோளில் தொங்கிய பையில் முடித்து, வீட்டில் வந்து போட்டு விட்டுக் கள்ளைக் குடித்து மகிழ்ந்தானாம் *(நற்றிணை - 59).*

"உடும்பு கொலீஇ, வரி நுணல் அகழ்ந்து

நெடுங் கோட்டுப் புநறத்து ஈயல் கெண்டி,

எல்லு முயல் எறிந்த வேட்டுவன் சுவல

பல்வேறு பண்டத் தொடை மறந்து, இல்லத்து

இருமடைக் கள்ளின் இன்களி செருக்கும்

வன் புலக் காட்டு நாட்டதுவே! *(நற்றிணை – 59)*

என்ற பாடல் வரிகள் மூலம் கள் அருந்தியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

மலை விவசாயம்

மலைச் சாரல்களில் கானக் குறவர்கள் நெருப்பு மூட்டி மரங்களையும், புதர்களையும் சாம்பலாக்கி விளைநிலம் உண்டாக்கினார்கள்.

"சேரி விலைமாறு கூறலின், மனைய

விளிஅறி ஞமலி குரைப்ப, வெரீஇய

மதர்கயல் மலைப்பின் அன்னகண் எமக்கு,

இதை முயல் புனவன் புகைநிழல் கடுக்கும்

மாமூது அள்ளல் அழுத்திய சோகாட்டு" *(அகநானூறு - 140)*

என்ற பாடல் வரிகள் மூலம் பயிர்செய்தலை அறிந்து கொள்ள முடிகிறது.

இப்படி உண்டாக்கிய கொல்லைகளில் ஐவனம் என்ற மலை நெல்லை விதைத்து விவசாயம் செய்தார்கள்.

"கரிபுனம் மயக்கிய அகன்கண் கொல்லை

ஐவனம் வித்தி, மையுறக் கவினி

ஈனல் செல்லா ஏனற்கு இழும் எனக்

கருவி வானம் தலைஇ யாங்கு

ஈத்த நின்புகழ் ஏத்தித் தொக்கஎன்" *(புறநானூறு 159)*

என்ற பாடல் மூலம் மலை நெல்லை விதைத்து விவசாயம் செய்தார்கள் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

நீர்பாசனம்

அருவிநீரைக் கொண்டு ஐவனப் பாசனம் செய்தார்கள்.

"கைவளை நெகிழ்தலும் மெய்பசப் பூர்தலும்

மைட்டு சிலம்பின் ஐவனம் வித்தி

அருவியின் விளைக்கும் நாடனொரு" *(குறுந்தொகை – 371)*

இக் கொல்லைகளில் மழை பெய்தவுடன் உழுது திணை விதைத்தார்கள். திணை விவசாயத்திற்கு மழையை நம்பினார்கள். திணையோடு அவரையும் பயிரிட்டார்கள்.

"பெரும்புனக் குறவன் சிறுதிணை மறுகால்

கொழுங்கொடி அவரைப் பூக்கும்

அரும்பனி அச்சிரம் வாரா தோரே" (குறுந்தொகை – *82)*

"சிறு திணை கொய்த இருவி வெண் கால்

காய்ந்த அவரைப் படுகிளி கடியும்

யாணர் ஆகிய நல்மலை நாடன்" (ஐங்குநுறூறு – *286)*

மேலேயுள்ள இரண்டு பாடல்கள் மூலம் கானக் குறவர்கள் நீர்ப்பாசனம் செய்து பயிரிட்டு வாழ்ந்துள்ளதை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

ஐவன நெல் பாசனத்தில், மலை மல்லி (நெல்), கற்றாழை முதலியவற்றைக் களை எடுத்தார்கள்.

"அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்

பருவிலைக் குளவியொடு பசுமரல் கட்கும்

காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பில்" (குறுந்தொகை *-138)*

மேலே குறிப்பிட்ட குறுந்தொகைப் பாடல் மூலம் நெல் பாசனத்தின் போது களையை அகற்றியுள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது.

சுற்றுப்புறம் காத்தல்

தங்கள் குடிசைகளை ஒட்டிப் பலாமரங்கள் வளர்த்தார்கள். பலாக்கனிகளை குரங்குகளிடமிருந்து காப்பாற்ற மரங்களில் வலை கட்டினார்கள்.

"கலைகை தெட்ட கமழ்சுளைப் பெரும்பழம்

காவல் மறந்த கானவன் ஞாங்கர்க்

கடியுடை மரந்தொறும் படுவலை மாட்டும்" (குறுந்தொகை *-342)*

பலாக்கனி கவர வந்த யானைகளை ஊரே திரண்டு விரட்டியது. திணை ஐவனக் கொல்லைகளை இரவும், பகலும் காட்டுப்பறவை விலங்குகளிடமிருந்து பாதுகாத்தார்கள். கொல்லைகளில் உயரமான பரண் கட்டி அதில் ஏறியிருந்து, பயிரை மேயவந்த பறவை விலங்குகளை விரட்டினார்கள். பகலில் குறப்பெண்களும், இரவில் குற ஆண்களும் காவல் காத்தார்கள். ஆண்கள் புலித்தோலைக் கட்டி பயமுறுத்தியும், பெண்கள் தட்டை என்ற கருவியை அடித்துக் கிளி, குருவிகளை விரட்டினார்கள். ஆண்கள், கிணை, கிணைப்பறை, கவன்கல், கீழ்க்கை, தீப்பந்தம் கொண்டு யானைகளை விரட்டினார்கள்.

காலத்தை மதிப்பிடல்

வேங்கை மரம் பூக்கின்ற காலத்தை திணை அறுவடைக் காலமாகக் கருதினார்கள். வேங்கை பூத்துவிட்டால் பின்னர் பணி தொடங்கிவிடும. விளைந்த திணைக்கதிரை அறுவடை

செய்ய உரிய நேரத்தை அறிய குறவர் குழுக்கள் இரவில் மின்மினி ஒளியால் வானத்தில் மேகத்தின் ஓட்டத்தை அவதானித்தார்கள்.

"பொரு இல் ஆயமோடு அருவி ஆடி,

நீர் அலைச் சிவந்தபேர் அமர் மழைக்கண்

குறியா நோக்கமொரு முறுவல் நல்கி,

பல்கிளைக் குறவர் அல்கு அயர் முன்றில்

குடக்காய் ஆசினிப் படப்பை நீடிய

பல்மர உயர் சினை மின்மினி விளக்கத்து" *(நற்றிணை – 44)*

என்ற பாடல்வரிகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும், தினை அறுவடை செய்தபோது தொண்டகப்பறை அடித்தார்கள். பொதுவாக அன்று வேட்டை சாய்ந்தால் கொம்பு ஊதினார்கள். நெல் அறுவடை செய்தபோது பறை அடித்தார்கள். அரசர்கள் போரில் வென்றபோது பறை அடித்தார்கள். எயினர்கள் பசுக்களைக் கொள்ளையடித்துக் கொண்டு போனபோது பறை அடித்தார்கள். இந்த வழக்கம் மிகத் தொன்மையான வேட்டைச் சமுதாய வழக்கமாகலாம். தினை அறுவடையின்போது பறை அடித்தது,

"அம்ம வாழ தோழி இன்றவர்

வாரா ராயினோ நன்றே சாரல்

சிறுதினை விளைந்த விமன்கண் இரும்புனத்து

இரவரி வாரினி தொண்க சிறுயறை" *(குறுந்தொகை - 375)*

தினை அறுவடையின் போது பறை அடித்து பறவைகளை விரட்டினர் என்பதை குறுந்தொகைப் பாடல் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது.

வேங்கைப்பூச் சூடிய குறவர்கள் தினை அறுத்து வந்து அகன்ற பாறையில் இட்டுப் போரடித்தார்கள் என்பதை,

"வேங்கைக் கண்ணியர் எருது எறி களமர்

நிலம் கண்டன்ன அகன்கண் பாசறை

மென் தினை நெடும் போர் புரிமால்

துஞ்சு களிறு எடுப்பும் தம் பெருங்கல் நாட்டே" *(நற்றிணை – 125)*

நற்றிணை பாடல் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

உணவைச் சேமித்தல்

குறப்பெண்கள் தினையை வெயிலில் காயவைத்து, வீட்டில் சேமித்து வைத்தார்கள். தினை அறுவடைக்குப்பிறகு தாளமடியில் விதைத்து விளைந்து காயவிட்ட அவரையைக் குறப்பெண் கிளிகளிடமிருந்து பாதுகாத்தாள்.

"சிறு தினை கொய்த இருவி வெண் கால்

காய்ந்த அவரைப் படுகிளி கடியும்

யாணர் ஆகிய நல் மலை நாடன்" *(ஐங்குறுநூறு - 286)*

குறப்பெண்கள் அவரை விதைகளைக் காத்த நிகழ்வையும் இங்கு காணமுடிகிறது.

"கான் உறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்

மான்தசை சொரிந்த வட்டியும், ஆய்மகள்"

இவ்வாறு 'காடு காத்து உறையும் கானவர்' களாகவும் (கூ.ஆ) வாழ்ந்த இம்மக்களிடம் கலப்படமற்ற பூர்வீகப் பண்பாடு நிறைந்த பாண்டிய நாடாக பொதிய மலை விளங்குவதை இப்பாடல் மூலம் அறிய முடிகிறது.

ஆரிய, வைதீக, வைதீகமல்லாத பண்பாடுகள் எவையும் எட்ட முடியாத தூரத்தில் மலைக் காடுகளில் இவர்கள் வாழ்ந்தார்கள். குற ஆண், பெண்கள் மாலை நேரங்களிலும், விழாக் காலங்களிலும் முற்றத்தில் கைக்கோர்த்துக் குரவை நடனம் ஆடினார்கள். சேர்ந்து பாடினார்கள்.

"குன்ற வேலிச் சிறுகுடி ஆங்கண்

மன்ற வேங்கை மணநாட் பூத்த

மணிஏர் அரும்பின் பொன்வி தாஅய்

வியல் அறை வரிக்கும் முன்றில், குறவர்

மனைமுதிர் மகளிரொடு குரவை தூங்கும்

ஆர்கலி விழவுக் களம்கடுப்ப, நாளும் *(அகநானூறு – 232)*

என்னும் அகநானூறு பாடலில் கோடையில் பழுத்த மாம்பழங்னிச் சாற்றில் பலாவின் சுளை கலந்து, தேன் கலந்து அக்கலவையை மூங்கில் குழாய்களில் அடைத்துக் கள்ளாக்கி, முதலில் கடவுள் இருக்கும் மலைக்குப் படைத்துவிட்டுப் பிறகு பெண்கள் ஊற்ற ஆண்கள் குடித்து மகிழ்ந்தனர்.

"என்ஆ வதுகொல் தானே – முன்றில்

தேன்தேர் சுவைய, திரள்அரை, மாஅத்து,

கோடைக்கு ஊழ்த்த கமல் நறுந் தீம்கனி

பயிர்ப்புறப் பலவின் எதிர்ச்சுளை அளைஇ,

இறாலொடு கலந்த, வண்டுமூசு, அரியல்

நெடுங்கண் ஆடு அமைப் பழுதி, கடுந்திறல்

பாப்புக் கடுப்பு அன்ன தோப்பி வான்கோட்டு" *(அகநானூறு – 348)*

"இன்சொல் அளாவல் விடமினிதூண் யாவர்க்கும்

வன்சொற் களைந்து வகுப்பானே மென்சொல்" *(ஏலாதி -7)*

என்று கூறுகிறது ஏலாதி. புதிதாக வரும் வழிப் போக்கர்களுக்குக் கள் கொடுத்து உபசரித்தார்கள்.

உயர்ந்த மலைகளில் இருந்த தேன் கூட்டில் தேன் எடுக்க நூல் ஏணி வைத்திருந்தார்கள். பழங்காலத்தில் மக்கள் புதிதாக வரும் வழிப்போக்கர்கள் அமர்ந்து இளைப்பாறி விருந்துண்டு செல்வதற்காக வீட்டிற்கு முன்பு திண்ணை அமைந்திருப்பதை இப்பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.

"நொத்தனை யாயின் கண்டது மொழிவல்

பெருந்தேன் கண்படு வரையின் முதமால்பு

அறியாது எறிய மடவேன் போல

ஏமாந் தன்றில் வுலகம்" *(குறுந்தொகை – 273)*

உயர்ந்த மலைப்பகுதிகளில் தேன் கூட்டிலிருந்து தேன் எடுக்க நூல் ஏணி வைத்திருந்ததை குறுந்தொகைப் பாடல் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

இக்குறவர்கள் கூட்டமாக மலையில் உறையும் தெய்வத்தை கும்பிட்டார்கள்.

"குன்றக் குறவன் கடவுள் பேணி

இரந்தனன் பெற்ற எல்வளைக்குறு மகள்

ஆய் அரிநெடுங் கண் கவிழ

சேயதால் தெய்ய – நீ பிரியும் நாடே" *(ஐங்குநுறூறு – 257)*

என்ற பாடல் ஐங்குநுறூறு பாடல் மூலம் காண முடிகிறது.

குறக்குலப் பெண்கள் வேங்கைமலர் தூவி, 'மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்தோம் - பலிச் செய்தார்கள்.

"பல் இருங் கூந்தல் மெல்லியலோள்வாயின்

பிரியாய் ஆயினும் நன்றே; விரிஇனர்க்

கால் எறுழ் ஒள்வீ தாய அய

முருகு அமர் மாமலை பிரிந்தெனப் பிரிமே" *(ஐங்குநுறூறு – 308)*

மேலே கூறப்பட்டுள்ள ஐங்குநுறூறு பாடல் மூலம் பெண்கள் இறைவனை வழிபட்டுள்ளனர் என அறியமுடிகிறது.

கானக் குறவர்கள் கும்பிட்ட மலைவாழ் தெய்வத்தைப் புலவர்கள் 'முருகு' என்றார்கள். இதுவே 'முருகன்', 'சேய்' என்று ஆண் கடவுளாகவும் அழைக்கப்பட்டது. இவன் மிகவும் கோபம் மிக்க கடவுளாகவும் அழைத்தனர். இந்த சாமியின் கோபம், மழை பெய்தால் சாந்தியடையும் என்று நம்பிய குறவர்கள் தம் சுற்றத்தோடு மலைமேல்சென்று பலிகொடுத்து நீர் வளாவி வழிபாடு செய்தார்கள்.

"அமர்க்கண் ஆமான் அருநிறம் முள்காது

பணைந்த பகழிப்போக்கு நினைந்து கானவன்

அணங்கொடு நின்றது மலை, வான்கொள்க எனக்

கடவுள்ஓங்கு வரை பேண்மார், வேட்டு எழுந்து" *(நற்றிணை-165)*

என்கிறது நற்றிணைப் பாடல். அவனுக்கு முகமன் கூறி, செந்திணையை நீரோடு கலந்து தூவிக் கும்பிட்டார்கள்.

'முருகு'; என உணர்ந்து, முகமன் கூறி,

உருவச் செந்தினை நீரொடு தூஉய்,

நெடுவேள் பரவும், அன்னை அன்ணோ! *(அகநானூறு – 272)*

இந்த சாமியை மகிழ்விக்க குறவர்கள் குரவைக் கூத்தாடினார்கள் என்பதை பாடலின் வழி அறிய முடிகிறது.

"தெரியிழாய் நீயும் நின்கேளும் புணர

பரை உறை தெய்வம் உவப்ப, உவத்து

குரலை தழீஇ யாம் ஆட, குரவையுள்

கொண்டு நிலை பாடிக்காண்" (கலித்தொகை – 39)

மழைவேண்டி பலி தூவி இறைவனைக் கும்பிட்டார்கள் என்று கலித்தொகை விளக்குகிறது.

"மலைவான் கொள்க என உயர்பலி தூஉய்

மாரி ஆன்று மழைமேக்கு உயர்க எனக்

கடவுள் பேணிய குறவர் மாக்கள்

பெயல்கண் மாறிய உவகையர், சாரல்

புனத்தினை அயிலும் நாட! (புறநானூறு – 143)

என்ற பாடல் மூலம் மழைவேண்டி கடவுளை வழிபட்டனர் என்பதை அறியமுடிகிறது.

இந்த கோபக்கார ஆண் கடவுள் வயதுக்கு வந்த பெண்களைப் பிடித்துக் கொள்ளுவான் என்று நம்பினார்கள்.

"நெய்தல் நறுமலர் செருந்தியொடு விரைஇக்

கைபுனை நறுந்தார் கமழும் மார்பன்

அருந் திறற் கடவுள் அல்லன்

பெருந் துறைக் கண்டு, இவள் அணங்கியோனே" (ஐங்குறுநூறு -182)

இப்படி முருகன் பிடித்த (பேய்பிடித்த) பெண்ணைக் குணமாக்க, வேலவன் என்ற சாமியாடி (பூசாரி) பெண் வீட்டில் பந்தல் அமைத்து, மணலில் ஒரு களத்தை அமைத்துக் கொண்டான். முரகனை வழிபட்டு, கடம்பு மாலை சூடி, வாத்தியங்கள் முழங்க கைபெயர்த்துப்பாடி வேலன் சாமியாடினான்.

"வெறிகமழ் நெடு வேள் நல்குவலன் எனினே

செறிதொடி உற்ற செல்லலும் பிறிது எனக்

கான் கெழு நாடன் கேட்பின்" (அகநானூறு – 138)

முருகனை வீட்டிற்கு வரவைக்க அவனுடைய கடம்ப மரத்தையும் யானையையும் பாடி ஆடினான்.

"கடம்பும் களிறும் பாடி, நுடங்குடி

தோடும் தொடலையும் கைக்கொண்டு அல்கலும்

ஆடினர் ஆதல் நன்றோ? நீடு

நின்னொடு தெளித்த நல் மலை நாடன்" (அகநானூறு – 138)

அதோடு, ஆடறுத்து அதன் ரத்தத்தில் செந்திணையைக் கலந்து தூவி, பெண்ணைப்பிடித்த முரகனை மலையேற்றினான் வேலன்.

"வள நகர் சிலம்பப் பாடி, பலிகொடுத்து,

உருவச் செந்தினை குரதியொடு தூஉய்

முருகு ஆற்றுப்படுத்த உருகெழு நடுநாள்,

ஆரம் நாற, அரு விடர்த் ததைந்த

சாரற் பல் பூ வண்டு படச் சூடி"

பேய் பிடித்த பெண்ணைவிட்டுப் பேயை விரட்ட, ஓடைக்கு நடுவில் மறியாடு அறுத்து, திணையைப் பரப்பி, வாத்தியங்கள் முழங்க பெரும் தெய்வங்களை வாழ்த்திப் பாடிய செய்து வந்துள்ளது என்பதை,

"மறிக்குரல் அறுத்துத் தினைபிரப் பிரீஇச்

செல்லாற்றுக் கவலை பல்லியங் கறங்கத்

தோற்றம் அல்லது நோய்க்கு மருந்தாகா

வேற்றுப் பெருந்தெய்வம் பலவுடன் -வாழ்த்திப்" *(குறுந்தொகை-263)*

என்ற பாடலின் மூலம் குறுந்தொகை விளக்குகிறது. முருகு என்ற மலையுறை தெய்வத்தைத் தவிர குறவர்கள் வேறு தெய்வங்களையும் கும்பிட்டார்கள். 'கடி உண் கடவுள்' என்ற காவல் தெய்வத்திற்கு விளைந்து முற்றிய திணைக்கதிரைப் பலியாகப்; படைக்க, அதனைத் தெரியாமல் உண்ட ஒரு மயில் சாமியாரும் பெண்ணைப்போல வெறிபிடித்து நடுங்கியதாம்.

|புனவன் துடவைப் பொன்போல் சிறுதிணைக்

கடியுண் கடவுட்கு இட்ட சில்குரல்

அறியாது உண்ட மஞ்ஞை ஆடுமகள்

வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்" *(குறுந்தொகை – 105)*

என்ற பாடல் மூலம் குநற்தொகை விளக்குகின்றது. தெய்வத்திற்கும் படைத்ததை உண்டால் தெய்வக்குற்றம் வரும் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடுதான். இது, ஊருக்குள் நுழையும் இடத்தில் இருக்கும் தண்ணீர்த் துறையில் வளர்ந்த பழைய மரத்தில் கடவுள் தங்கும் என நம்பினர்.

"எம் ஊர் வாயில் உண்துறைத் தடைஇய

கடவுள் முதமரத்து, உடன்உறை பழகிய

தேயா வளைவாய், தெண்கண், கூர் உகிர்" *(நற்றிணை-83)*

மேலே உள்ள பாடல்கள் மூலம் தெய்வபயம் கானக் குறவர்கள் மத்தியில் இருந்துள்ளதையும் தெய்வ வழிபாட்டின் மூலம் நிவர்த்தி செய்ததையும் அறிய முடிகிறது.

ஆலமரம், பனைமரம், வேப்பமரம், கடம்ப மரம் போன்ற மரங்களில் கடவுள்கள் தங்கும் என நம்பினர். மேலும் ஊருக்கு ஊர், மன்றம், பொதியில், அவை என்ற பெயர்களில் ஊர்ப்பொது இடம் இருந்தது. இங்கு நான்கு சுவர் எடுத்து, மேலே விட்டம் அமைத்து, கீழே ஒரு திண்ணை எழுப்பி, கருந்தூண் நிறுத்தி, அந்தத் தூணிலோ, சுவரிலோ கடவுள் உருவம் வரைந்து அதற்குப்பலி கொடுத்தார்கள். அந்த இடத்தில் பெரிய மரமும் இருப்பது வழக்கம். இதன்; தரையை மெழுகுச் சுத்தமாக வைத்தார்கள்.

"எழுது அணி கடவுள் போகலின், புல்லென்று

ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்திணைப்" *(அகநானூறு – 167இ307)*

"புற்றுடைச் சுவர புதல்இவர் பொதியில்

கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து

உடன்உறை பழமையின்; துறத்தல் செல்லாது"

இதோடு "இல் உறை கடவுள்" என்ற குலதெய்வத்திற்கும் பலி கொடுத்தார்கள்.

"நல்இறை மெல்விரல் கூப்பி

இல்உறை கடவுட்கு ஆக்குவதும், பலியே" *(அகநானூறு – 282)*

மரங்களில் தெய்வம் தங்கும் என நம்பியுள்ளதை மேலே உள்ள அகப்பாடல் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

பெண் தெய்வம்

பெண் தெய்வங்களையும் கும்பிட்டார்கள். 'ஓங்கு புகழ்க் கான் அமர் செல்வி'

"நாம் செல் விழைந்தன மாக ஓங்கு புகழ்க்

கான்அமர் செல்வி அருளலின் வெண்கால்" *(அகநானூறு – 345)*

என்பதையும் காட்டில் இருந்த பெண் கடவுள் பற்றியும், கடல் செல்வி,

"கடல் கெழு செல்வி கரைநின் றாங்கு,

நீயே கானல் ஒழிய, யானே

வெறிகொள் பாவையின் பொலிந்தஎன்; அணிதுறந்து" *(அகநானூறு -370)*

என்று கடலில் இருந்த பெண் கடவுள் பற்றியும் குறிப்புகள் உள்ளன. 'சூரா மகளிர்' எனப்படும் அச்சம் தரும் தெய்வப் பெண்கள் காடு, மலை, சுணை போன்ற இடங்களில் தங்கி இருந்ததாகக் குறிப்புக்கள் உள்ளன.

"சூரா மகளிரின் நின்ற நீ மற்று

யாரையோ? எம் அணங்கியோய் உண்கு' *(அகநானூறு -32,198,288)*

:கவிரம் பெயரிய உருகெழு கவாஅன்,

ஓர்மலர் நிறைசுனை உறையும்

சூர்மகள் மாதோ என்னும் - என் நெஞ்சே" *(அகநானூறு -98)*

மேலும்,

"கனிமுதிர் அடுக்கத்துஎம் தனிமை காண்டலின்

எண்மை செய்தனை ஆகுவை – தண்ணிக்

கொடியோர் குறுகும் நெடி இருங் குன்றத்து

இட்டுஆறு இரங்கும் விட்டுஒளிர் அருவி" *(அகநானூறு -288)*

இந்தக் கடவுள்கள் அனைவருமே அச்சத்தை ஏற்படுத்துகின்றவர்களாகவும், தானியம், ஆட்டு ரத்தம் கலந்து பலி கொடுத்தால் சாந்தமடைகிறவர்களாகவும், மழை, விளைச்சல், சுற்றுப்புறத்தை அமைத்தல், வேட்டை, காலத்தைக்; கணித்தல், உணவைச் சேமித்தல், பெண்தெய்வ வழிபாடு ஆகியவற்றோடு சம்பந்தப்படுத்துகிறவர்களாகவும் காணப்படுகிறார்கள். காடு, மலை, சுனை, கடல், மரம் முதலான இயற்கைப் பொருட்கள் மற்றும் இடங்களோடு தொடர்புற்று உறைபவர்களாகவும் வாழ்ந்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின் வாயிலாகவும் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

துணை நின்ற நூல்கள்:

1. பாரதி, பி. (1990). *பண்பாட்டு மானிடவியல்*. மெய்யப்பன் பதிப்பகம்.
2. ஜெயபால், ஆர். (காலம் குறிப்பிடப்படவில்லை). *அகநானூறு (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சூரி புக் ஹவுஸ் (பி) லிட்.
3. ராஜாராம், டி. (காலம் குறிப்பிடப்படவில்லை). *குறுந்தொகை*. திருமகள் நிலையம்.
4. சுப்பிரமணியன், வி. டி. ஆர். (காலம் குறிப்பிடப்படவில்லை). *புறநானூறு*. திருமகள் நிலையம்.
5. தமிழ்ப்பிரியன், டி. (2016). *திரிகடுதம், ஏலாதி, இன்னிலை மூலமும் உரையும்*. நொவினோ ஆஃப்செட்.

References

1. Bharathi, B. (1990). *பண்பாட்டு மானிடவியல்* [Panpaattu Maanidaviyal: Cultural Anthropology]. Meyyappan Pathippagam.
2. Jeyapal, R. (n.d.). *அகநானூறு (மூலமும் உரையும்)* [Akananuru (Moolamum Uraiyum): Akananuru (Text and Commentary)]. New Century Book House (P) Ltd.
3. Rajaram, D. (n.d.). *குறுந்தொகை* [Kuruntokai]. Thirumagal Nilayam.
4. Subramanian, V. T. R. (n.d.). *புறநானூறு* [Purananuru]. Thirumagal Nilayam.
5. Tamilpriyan, T. (2016). *திரிகடுதம், ஏலாதி, இன்னிலை மூலமும் உரையும்* [Tirikatutam, Elathi, Innillai: Text and Commentary]. Novino Offset.